# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 446 பிலவ வருடம், தை மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை (04.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 02, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




'தமிழன்' வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு 74ஆவது சுதந்திர தின வாழ்த்துகள்...

## சமூக மாற்றம் மூலம் சுதந்திரத்தின் அர்த்தத்தை விரிவுபடுத்த முடியும்

### பிரதமர் மஹிந்த சுதந்திர தின வாழ்த்துச் செய்தி



ஒருவரையொருவர் மதித்து, மற்றவரின் இருப்புக்கு இடையூறாக இல்லாத சமூக மாற்றத்தின் மூலம் சுதந்திரத்தின் அர்த்தத்தை விரிவுபடுத்த முடியும் என்பது எனது நம்பிக்கை.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையர்களால் பெருமிதத்துடன் கொண்டாடப்படும் 74ஆவது தேசிய சுதந்திர தினம் உதயமாகியுள்ளது. வரலாறு முழுவதும் சுதந்திரத்தை அடைவதற்கு இலங்கையர்களாகிய நாம் பல தியாகங்களை செய்துள்ளோம். 02 பக்கம்

## நவீன தேசத்துக்காக மனசாட்சிக்கு இணங்கி நம்மை அர்ப்பணிப்போம்

### சுதந்திர தின வாழ்த்தில் சஜித்



பிரித்தானிய மகுடத்திடமிருந்து விடுதலைப்பெற்று சுதந்திர நாடாக ஸ்தாபிக்கப்பட்ட 74ஆவது சுதந்திர தினத்தை நாம் பெருமையுடன் நினைவு கூருவோம் - என்று சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தாய்நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்த யுக புருஷர்கள் ஏராளம். எதிர்கால சந்ததியினருக்கு சுதந்திரமாக சுவாசிக்கும் பூமியை உருவாக்கும் உன்னத நோக்கத்திற்காக அவர்கள் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தார்களேயன்றி, குறுகிய இலக்குகளை அடைவதற்காக அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும்,... 02 பக்கம்

# யுத்தம் முடிவுக்கு வந்த ஒரு வாரத்திற்குள் இலங்கை அளித்த வாக்குறுதிகள் எங்கே?

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அங்கத்துவ நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதம்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அங்கத்துவ நாடுகளின் தூதரகங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் நடைமுறையை செயற்படுத்துவதாக, யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஒரு வாரத்திற்குள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்ததாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மனித உரிமைகள் பேரவையின் 47 அங்கத்துவ நாடுகளின் தூதரகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், 12 வருடங்கள் கடந்தும் இன்று வரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

## கடற்றொழில் அமைச்சருடனான பேச்சில் முடிவில்லை

# யாழில் தொடர்கின்றது மீனவர் போராட்டம்!

08 பக்கம்



# இராஜாங்க அமைச்சர் அருந்திக்க இராஜினாமா

## கைதான மகன் உள்ளிட்ட 7 பேருக்கு விளக்கமறியல்



இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ராகம மருத்துவ பீடத்தின் சில மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் கைதான இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் உள்ளிட்ட 07 பேர் எதிர்வரும் 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக தாம் இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ததாக அருந்திக்க பெர்னாண்டோ குறிப்பிட்டார். 02 பக்கம்

# சுதந்திரம் இல்லாமல் வாழ்வதைக் காட்ட குருந்தூர்மலையில் இன்று போராட்டம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

கே.குமணன்

இலங்கையின் 74ஆவது சுதந்திர நாளான இன்று தமிழ் மக்களின் வாழ்விட உரிமை மறுக்கப்பட்டு, பௌத்த மயமாக்கல் தீவிரமாக இடம்பெற்றுவரும் குருந்தூர்மலைக்கு சென்று தமது எதிர்ப்பினை வெளியிடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் ஊடகங்களுக்கு இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், 07 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



யாருக்கு சுதந்திரம் கொடுத்தாங்க, எதற்காக கொடுத்தாங்க என்று இதுவரைக்கும் தெரியேல்ல...




திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் ஹபாயா அணிந்து சென்ற ஆசிரியைக்கு எதிரான செயற்பாடுகளை கண்டித்தும், நீதிமன்ற தீர்ப்பிற்கு முரணாக செயற்பட்ட பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்னால் நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

(படம்:- கிண்ணியா நிருபர்)

## பொலிகண்டி மீனவர் தற்கொலை முயற்சி

### படகையும் தீயிட்டு எரித்தார்

யாழ். நிருபர்

இந்திய மீனவர்களின் அட்டூழியத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர் தனக்குத் தானே தீயிட்டு உயிரை,... 07 பக்கம்

## மீனவர் போராட்டத்துக்கு நீதிமன்று தடை உத்தரவு

யாழ். நிருபர்

இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் அட்டூழியங்களுக்கு எதிராக பருத்தித்துறை மீனவர்களின் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீனவர்களுடன் நடத்திய பேச்சு முடிவின்றி நிறைவடைந்த நிலையில், பொலிஸார் தாக்கல்செய்த தடை உத்தரவு விண்ணப்பத்துக்கு நீதிமன்றம் அனுமதியளித்து தீர்ப்பு வழங்கியது.

கடந்த வாரம் வடமராட்சி கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள்,... 02 பக்கம்

## பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கக்கோரும் கையெழுத்துப் பிரசாரம் தொடங்கிவைப்பு

### முல்லைத்தீவில் ஆரம்பித்துவைத்தார் சுமந்திரன் எம்.பி



கே.குமணன்

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முற்றாக நீக்கக் கோரி பொதுமக்கள் மத்தியில் கையெழுத்து சேகரிக்கும் போராட்டம் ஒன்றினை முல்லைத்தீவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் தொடக்கி வைத்துள்ளார். 07 பக்கம்

## புலிச் சந்தேகநபர்கள் விடுவிக்கப்படவேண்டும்

### ஜனாதிபதியின் நிலைப்பாடு என்கிறார் ஞானசார தேரர்



யோ.தர்மராஜ்

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைதானவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதை ஜனாதிபதியின் கவனத்திற்கு தான் கொண்டுசென்றபோது, அதனை செய்ய வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்ததாக ஒரே நாடு... 02 பக்கம்

## சுதந்திர தின தேசிய நிகழ்வை பேராயர் மெல்கம் பகிஷ்கரிப்பு



யோ.தர்மராஜ்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் பொரளை அனைத்துப் புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாதமையினால், சுதந்திர தினத்தின் பிரதான வைபவத்தில் கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொள்ள மாட்டார் என்பதோடு, சுதந்திர தினத்தையொட்டி ஒவ்வொரு வருடமும்... 02 பக்கம்

### உஷ்



ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் விடுதலை செய்யப்பட்டால் அரசுக்கு எதிராக பேசக்கூடாது என்ற நிபந்தனை ரஞ்சனுக்கு விதிக்கப்பட்டதாம்.

அந்த நிபந்தனையை ஏற்க ரஞ்சன் தயாரில்லை. சிலவேளை அவர் ஏற்பாராயின் இன்றுகூட அவர் விடுவிக்கப்படலாம்.

# இலங்கையின் சுதந்திர தினம் தமிழ்த் தேசத்தின் கரிநாள்!

### முள்ளிவாய்க்காலில் இன்று மாபெரும் போராட்டத்துக்கு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு




யாழ். நிருபர்

"இலங்கையின் சுதந்திர தினம் தமிழ்த் தேசத்தின் கரிநாள்" எனும் தொனிப்பொருளில் இன்று முள்ளிவாய்க்காலில் மாபெரும் போராட்டத்துக்கு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளது. 02 பக்கம்

## 200 கிலோ போதைப்பொருட்களை கடத்திவந்த ஈரானியர்கள் 09 பேர் கடற்படையினரால் கைது

### கப்பலுடன் போதைப்பொருட்களும் மீட்பு

12 பக்கம்

## நாடாளுமன்ற அலுவல்கள் குழு எதிர்வரும் திங்கட்கிழமை கூடும்



நாட்டில் நிலவும் கொவிட் நிலைமைகளுக்கு மத்தியில் உரிய சுகாதார ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்து நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கும், எதிர்வரும் அமர்வுகளில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள அலுவல்கள் குறித்து ஆலோசிப்பதற்கும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு எதிர்வரும் திங்கட்கிழமை (07) கூடவுள்ளது. 02 பக்கம்

## சுதந்திர தின தேசிய நிகழ்வை...

பொரளை அனைத்துப் புனிதர்களின் தேவாலயத்தில் நடத்தப்படும் விசேட ஆராதனை, இம்முறை நடத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பேராயர் இல்லம் அறிவித்துள்ளது.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுப்பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து நேற்று (03) ஊடக சந்திப்பில் கத்தோலிக்க சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுப்பிடிக்கப்பட்ட சம்பவத்தில் தேவாலயத்தில் சேவையாற்றிய மூவர் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்டிருந்தவர்களிலிருந்த இளைஞர் ஒருவர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், நேற்றுமுன்தினம் (02) மேலும் மூவர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். எனினும், முனீந்திரன் என்ற சந்தேக நபர் தொடர்ந்தும் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால், தேவாலயத்திலுள்ள சி.சி.ரீ.வி காட்சிகளை பார்க்கும்போது, முனீந்திரன் என்ற நபருக்கும் இந்த சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது தெளிவாகிறது. அதேபோன்று, வைத்தியர் ஒருவரே இச் சம்பவத்திற்கு பின்னால் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையில், முனீந்திரன் என்பவரை தொடர்ந்தும் தடுத்துவைத்திருப்பது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

மேலும், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் முன்னெடுக்கும் விசாரணைகளில் திருப்தியடைய முடியாது எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளதுடன், உரிய முறையில் முன்னெடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து சுதந்திர தினத்தன்று பொரளை தேவாலயத்தில் பூஜைகள் நடத்தப்பட்டன. இந்நிலையில், தற்போது, இடம்பெற்றுள்ள கைக்குண்டு சம்பவத்தினால் வேதனையடைந்துள்ள காரணத்தினால், இம்முறை சுதந்திர தின நிகழ்விற்கான பூஜைகள் நடத்தாதிருப்பதற்கு கர்தினால் ஆண்டகை தீர்மானித்துள்ளார்.

எனினும், எப்போதும் போன்று ஏனைய தேவாலயங்களிலும் சுதந்திர தின நிகழ்வு நடத்தப்பட்டு, பூஜைகளும் முன்னெடுக்கப்படும். ஆனால், சுதந்திர தினத்துக்கான விசேட பூசைகள் இடம்பெறும் பொரளை தேவாலயத்தில் இம்முறை பூஜைகள் இடம்பெறாது. அதேபோன்று, சுதந்திர தின தேசிய நிகழ்விலும் கலந்துகொள்ளாதிருப்பதற்கும் கர்தினால் ஆண்டகை தீர்மானித்துள்ளார்.

அதேபோன்று, ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக நீதி கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிருந்தாலும் தற்போதைய சட்டத்திட்டங்களுக்கு அமைய அந்த நீதி கிடைக்குமா என்பது பெரும் கேள்விகுறியானது. நீதிமன்றங்கள் தொடர்பாக நம்பிக்கை இருந்தாலும் விசாரணை செய்வது மற்றும் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பில் பாரிய சந்தேகம் இருக்கின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் நடவடிக்கை எடுப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. இவ்வாறான நிலைமையின் கீழ் ஏப்ரல் தாக்குதல் தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு, நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை.

எனினும், இந்த நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு அமைய, நீதியினை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றோம். இல்லையேல், சர்வதேசத்திடம் செல்வோம். அதற்கான அனைத்து தொடர்புகளும் எங்களிடமுள்ளன. அதற்கமைய, சர்வதேச நாடுகளின் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

## புலிச் சந்தேகநபர்கள்...

ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும், பொது பலசேனாவின் பொதுச் செயலாளருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொலன்னாவை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாம் சிறையில் அடைக்கப்பட்டபோது விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலர் என்னிடம் அவர்களுடைய வாழ்க்கை கதைகளை பற்றிக் கூறினர்.

யுத்தம் நிறைவடைந்து நீண்டகாலமடைந்துள்ள நிலையில், யுத்த வடுக்களை தொடர்ந்து மீட்டுவது தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமற்றது. எனவே, விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையதாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இதேவேளை, ஒரே நாடு, ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் வடக்கு, கிழக்கு விஜயத்தின்போது, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கைதிகளின் உறவினர்களும் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, ஜனவரி 20ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின்போது, கைதிகளை விடுவிப்பது முக்கியம் என்று தான் குறிப்பிட்டபோது, ஆம் அதைச் செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதிக்கு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையதாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்தால் பிரிவினைவாதத்தின் இருண்ட நிலை தலைதூக்கும் வாய்ப்பு இருக்காது. ஆகவே, பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினத்தில் குறிப்பிட்ட தரப்பினரை ஜனாதிபதி விடுதலை செய்வார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

## மீனவர் போராட்டத்துக்கு...

உள்ளூர் மீனவர்களின் வலைகளையும் அறுத்து நாசப்படுத்தினர். அத்துடன், கடலுக்கு தொழிலுக்குச் சென்ற வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் சடலமாக கரையொதுங்கினர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் ஆரம்பித்த போராட்டம் தற்போது பல பகுதிகளுக்கு விரிவடைந்துள்ளது.

இந்நிலையில் மாணவர்களின் கல்விக்கு இடையூறு, போக்குவரத்துக்குத் தடை என்பவற்றைச் சுட்டிக்காட்டி பொதுத் தொல்லையின் கீழ் பொலிஸார் செய்த விண்ணப்பத்துக்கு அமைய போராட்டத்துக்கு தடை உத்தரவு வழங்கி நேற்று மாலை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

## இலங்கையின் சுதந்திர தினம்...

குறித்த போராட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது எமக்கான சுதந்திர தினம் அல்ல எமக்கான நீதி கிடைக்கப் பெறாத இடத்தில் எவ்வாறு சுதந்திரம் கிடைக்கும். பொதுமக்கள் இந்த விடயத்தில் அலட்சியமாக இருக்காது ஒன்றுகூடி இந்த கறுப்பு நாளை அனுஷ்டிக்க வேண்டும் என வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

ஶ்ரீலங்காவின் சுதந்திர தினம் என்பதை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டித்து வந்துள்ளனர். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு இன அழிப்பு நடந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலே எவ்வித அரசியல் பின்னணியிலும் அரசியல் நோக்கங்கள் இல்லாமல் ஒன்றிணைய வேண்டும். இதில் மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகத்தினர், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், ஆசிரியர்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் என்பன பங்கேற்க வேண்டும் எனவும் எமது இயக்கமும் இதற்கு பூரண ஆதரவை வழங்குகிறது என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்க இணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

ஒரே நாட்டிலேயே ஒருபுறம் ஆரவாரம், வெற்றிக்கொண்டாட்டம், மகிழ்ச்சி என்பன காணப்படும்போது இன்னொரு புறத்தில் கவலை, வறுமை, பொருளாதார பின்னடைவு போன்றன காணப்படுகின்றதெனவும் இதனை நாங்கள் இருண்ட நாளாக அனுஷ்டிக்கிறோமெனவும் மெதடிஸ்த திருச்சபையின் அருட்திரு றொபேர்ட் சசிகரன் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா அரசுக்கு தமிழ் மக்களை ஒடுக்குவதற்காக கொடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரமே சுதந்திர தினமாகும். 1956 சுதந்திர தினத்தில் கறுப்புக்கொடி ஏற்றிய திருமலை நடராஜன் படுகொலையோடு உயிர்ப்பலி என்பது ஆரம்பித்துவிட்டது. தமிழின ஒடுக்குமுறைக்கு நூறு வருடங்கள் கடந்துவிட்டன. சுதந்திரத்திற்கு முன்னர் அனுமதிப்பத்திரம் இல்லாமல் எம்மை ஒடுக்கினார்கள். சுதந்திரத்துக்குப் பின்னர் அனுமதிப்பத்திரத்துடன் நம்மை ஒடுக்குகிறார்கள் என சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இணைப்பாளர் சி.அ.யோதிலிங்கம் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் பிரச்சினை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர்பில் சரியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டால் அடுத்த வருடங்களில் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டிய தேவை இருக்காது. நாளைய தினத்தில் தனித்தனிப் போராட்டங்களை முன்னெடுக்காமல் முள்ளிவாய்க்காலில் அணிதிரண்டு வலுச்சேர்க்க வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் கறுப்பு உடையணிந்து அனைவரும் பங்கேற்க வேண்டும் என்பதுடன் வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவ் ஊடக சந்திப்பில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க யாழ். மாவட்ட தலைவி சிவபாதம் இளங்கோதை, உபதலைவி நிர்மலநாதன் மேரி ரஞ்சினி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்க இணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான தவத்திரு வேலன் சுவாமிகள், மெதடிஸ்த திருச்சபையின் அருட்திரு றொபேர்ட் சசிகரன், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இணைப்பாளர் சி.அ.யோதிலிங்கம், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் ஆகியோர் பங்கேற்றனர்.

## இராஜாங்க அமைச்சர்...

தெங்கு, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை ஊக்குவிப்பு மற்றும் கைப்பணிப் பொருள் உற்பத்தி இராஜாங்க அமைச்சராக அருந்திக்க பெர்னாண்டோ செயற்பட்டார்.

இராகம மருத்துவ பீட மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட, அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் உள்ளிட்ட 07 பேர் எதிர்வரும் 07ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெலிசறை நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்களை நேற்று ஆஜர்படுத்தியபோது, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில், இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன், ராகம பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு சரணடைந்தபோது கைது செய்யப்பட்டார்.

தாக்குதலை மேற்கொள்வதற்கு காரில் சென்ற 06 பேரும் காரின் சாரதியும் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை ராகம வைத்திய பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வைத்திய பீடத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் மேலும் மூவர் நேற்றுமாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்ற அலுவல்கள்...

அத்துடன், நாடாளுமன்றம் எதிர்வரும் 08ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கூடவிருப்பதுடன், 11ஆம் திகதி வரை நான்கு நாட்கள் அமர்வுகளை நடத்துவதற்கு இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதற்கும், இதன் பரிந்துரைகளை நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்குமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழு 08ஆம் திகதி கூடவுள்ளது.

## நவீன தேசத்துக்காக...

இந்த நேரத்தில் அவர்கள் நாட்டின் உன்னத பெருமைக்கு தகுதியானவர்கள்.

சுதந்திரத்திற்குப் பிறகு கடந்த காலத்தை மனசாட்சியுடன் திரும்பிப் பார்க்கும்போது, வெற்றி தோல்விகள் இரண்டும் அளவிட முடியாதவை என்பதை ஒரு நாடாக நாம் நம்பிக்கையுடன் உணர வேண்டும். உண்மையான தேசப்பற்றுடனும், உண்மையான தேசப்பக்தியுடனும் தாய் நாட்டின் உன்னத சுதந்திரத்துக்காக அர்ப்பணிப்புச் செய்தார்கள். அதே போன்று, போலி தேசபக்தி மற்றும் போலி தேசப்பற்றுடன் தமது குறுகிய நலன்களை கடைப்பிடிக்கும் சந்தர்ப்பவாதக் குழுக்கள் இந்நாட்டில் அன்றும் இருந்தன. இன்றும் இருக்கின்றன என்பது நாம் அறிந்ததே.

இறையாண்மை கொண்ட சுதந்திர ஜனநாயக நாடு என்ற கனவு நனவாகும் வரை, வரலாற்றில் சுதந்திர நாட்டிற்காக உயிரை தியாகம் செய்த எவரும் எம்மை மன்னிக்க மாட்டார்கள் எனவும், அவர்களுக்காக நாம் செய்ய வேண்டியது அவர்களது தூய்மையான மற்றும் உன்னத அபிலாஷைகளுக்காக சுதந்திரமான நாட்டை உருவாக்க நாம் உறுதியாக முன் நிற்பதேயாகும்.

அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம், மதம், ஊடகம் போன்ற அனைத்து உள்ளக சுதந்திரத்தையும் ஜனநாயகத்தின் பெயரால் பாதுகாக்கப்படல் வேண்டும். அதிகாரவெறி கொண்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களால் இதைச் செய்ய முடியாது என்பதை வலியுறுத்த வேண்டும்.

இத்தருணத்தில், நமக்குப் பின்னால் இருந்த பல நாடுகள் முன்நோக்கிச் செல்லும் இரகசியத்தை உணர்ந்து கொள்வதும், சந்தர்ப்பவாதம், குறுகிய மனப்பான்மையை அகற்றி, தாய்நாட்டை நிலைநிறுத்துவதற்கான நடைமுறைச் செயற்றிட்டத்தை நோக்கிச் செல்வதுமே முதலாவதும், இரண்டாவதும் மற்றும் மூன்றாவதுமான முன்னுரிமைகளாக இருக்க வேண்டும்.

நமது நாட்டின் சுதந்திரத்திற்காக அர்ப்பணித்து போராடிய அனைவருக்கும் உரிய மரியாதையை மிகுந்த பக்தியுடன் வழங்க வேண்டும். அவர்கள் விரும்பிய சுதந்திரம் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலை பெற்ற நாளை பெருமைப்படுத்துவது மட்டுமல்லாமல், இலங்கையர்களுக்கும் அர்த்தமுள்ளதாக இருக்கும் வகையில் அந்த முன்னேற்றத்தை படிப்படியாக முன்னெடுத்துச் சென்று ஒரு வளமான சமூகமாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதாகும்.

அந்தப் போராட்டத்தில் வெற்றி பெறவும், வளர்ந்த, நவீன, தேசமாக பெருமையுடன் செயற்பட வலிமையும் தைரியமும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

## யுத்தம் முடிவுக்கு வந்த...

இந்தக் காலப்பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 46/1 தீர்மானம் உள்ளடங்களாக 07 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதுடன், இலங்கை அரசாங்கமும் பெருமளவுக்கு அமுல்படுத்தப்படாத கடப்பாட்டு அறிக்கைகளை விடுத்துள்ளதாக சம்பந்தன் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்புக்கூறல் நடைமுறையை செயற்படுத்தாத அரசாங்கம், இராணுவமயப்படுத்துதல், சமூக மற்றும் ஊடகத்துறையினர், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவோரை புதிதாக கைது செய்வதோடு அரசியல் கைதிகளை காலவரையறை அற்று தடுத்து வைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள், வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்பு எனும் போர்வையில் இடம்பெறுகின்ற காணி சூறையாடல்களையும் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் கவனத்திற்கு அவர் கொண்டு வந்துள்ளார்.

ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கைக்குள் வட, கிழக்கு மாகாணங்களில் சுய மரியாதையோடும் கன்னியத்தோடும் பாதுகாப்புடனும் தமிழ் மக்கள் வாழ்வதை உறுதிப்படுத்தும் முகமாக இலங்கை அரசாங்கத்தை தூண்டுதல் செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தமது கடிதத்தில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.



# இன்றைய ராசி பலன்

**04.02.2022 வெள்ளிக்கிழமை தை 22**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: பூரட்டாதி** | இரவு 7.10 வரை | அதிகாலை 3.47 வரை |
| மாலை 3.58 வரை | **சித்தம்** | **முற்கரணம்: வணிஜம்** |
| **உத்தரட்டாதி** | இரவு 7.10 -05.02.2022 | அ.கா 4.38 - மாலை 4.06 |
| மாலை 3.58 - 05.02.2022 | மாலை 5.42 வரை | **பிற்கரணம்: பத்திரை** |
| மாலை 4.09 வரை | **திதி: பூர்வ பட்ச சதுர்த்தி** | மாலை 4.06 - 05.02.2022 |
| **யோகம்: சிவம்** | அ.கா 4.38 - 05.02.2022 | அதிகாலை 3.47 வரை |

| | | |
|---|---|---|
| **சுப நேரங்கள்** | குளிகை காலம் | லோகநாயகி |
| காலை 6.29 - 7.57 | காலை 7.58 - 9.27 | ஸஹஷ்ர சீர்ஷ |
| மாலை 5.19 - 6.20 | **எமகண்ட காலம்** | வதனா அன்னை |
| **அசுப நேரங்கள்** | மாலை 3.22 - 4.51 | பிரத்யங்கிராவின் |
| **ராகு காலம்** | **துர் முகூர்த்தம்** | கருணையாலே |
| காலை 10.56 - பி.ப 12.25 | காலை 8.51 - 9.39 | நற்பவி நற்பவி |
| | பிற்பகல் 12.48 - 1.36 | நற்பவி |

**மேஷம்:** வணிக இலாபங்கள் அதிகரிக்கலாம். வாழ்க்கைத்துணைக்கும் தேவையான நேரத்தை தருவது உறவை மேம்பட செய்யும். செலவுகள் அதிகரிக்கலாம். வேலைகளில் புதிய பொறுப்பு கிடைக்கலாம்.

**ரிஷபம்:** வருவாய்க்கான புதிய வழிகள் உருவாகலாம். உடல்நலம் சீராகும். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளில் இருந்த தடைகள் நீங்கப் பெறலாம். இல்ல சூழலும் இனிமை தரும். வணிகத்தில் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கலாம்.

**மிதுனம்:** தம்பதியரிடையே பிரச்சினைகள் நீங்கத் தொடங்கலாம். புதிய நல்ல விடயங்களில் முயற்சி உண்டாகலாம். பிறரின் விடயங்களில் தலையீடு தவிர்ப்பது நல்லது. அனைத்து பணிகளும் புத்திகூர்மையால் சிறப்புறும்.

**கடகம்:** மாணவர்களுக்கு கல்வியில் மேலதிக கவனம் தேவைப்படலாம். இளம் வயதினருக்கு எதிர்கால கவலை உருவாகலாம். சில சூழ்நிலையில் பொறுமை தேவைப்படலாம். நிதிப் பற்றாக்குறை மனக் கவலை தரலாம். இறைவணக்கம் நன்மை.

**சிம்மம்:** உங்களை சில தேவையற்றவர்களால் இழிவுபடுத்தும் முயற்சி உண்டாகலாம். காதல் உறவிலும் சிறிய கவலை ஏற்படலாம். வாயு சம்பந்தப்பட்ட சிறிய பிரச்சினை தோன்றலாம். சிலரின் மீது வைத்துள்ள நம்பிக்கையில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

சந்திராஷ்டமம்: மகம் நட்சத்திரத்திற்கு காலை10.03 -05.02.2022 காலை 10.01 வரை பூரம் நட்சத்திரத்திற்கு 05.02.2022காலை 10.01 - 06.02.2022 காலை 10.50 உத்தரம் நட்சத்திரம் பாதம் 1க்கு 06.02.2022காலை 10.50- மாலை 5.10 வரை

**கன்னி:** உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சிறந்த நன்மை கிடைக்கலாம். தன்னம்பிக்கை மேம்படும். இன்று புதிய தொழில் அல்லது வேலைத் தொடங்க சாதகமான நாள். தம்பதியர் உறவில் அன்பு அதிகரிக்கலாம்.

சந்திராஷ்டமம்: உத்தரம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு 06.02.2022 மாலை 5.10- 07.02.2022 பி.ப 12.27

**துலாம்:** பணிகளில் மேலதிகாரி எதிர்பார்த்த துறைசார்ந்த வேலைகள் சரியான முறையில் உங்களால் நிறைவேற்றப்படலாம். பணிச்சுமை அதிகரிக்கலாம். இன்று புதிய பணிக்கான சாதகமான நிலையும் தோன்றலாம். காதலில் பரஸ்பரம் உணர்வுகளை பகிர்தல் உண்டாகலாம்.

**விருச்சிகம்:** தம்பதியரிடையே பாசம் அதிகரிக்கலாம். நேர்முகத் தேர்வுகள் பயனளிக்கலாம். வியாபார இலட்சியங்கள் தாமதமின்றி நிறைவேறலாம். நண்பர்களுடன் இன்றைய நாள் இனிமையாக இருக்கலாம்.

**தனுசு:** வாகனம் வாங்கும் எண்ணங்கள் உருவாகலாம். தொழில் விரிவாக்கம் பெறலாம். குடும்பத்தினருடன் ஆன்மீக தலங்களுக்கு செல்லும் நிலை ஏற்படலாம். காயங்கள் ஏற்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம்.

**மகரம்:** நிதிப் பிரச்சினைகள் நீங்கத் தொடங்கலாம். புதிய பணி தேடும் முயற்சி உண்டாகலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். அன்புக்குரியவர்களுடன் உறவில் நல்ல நிலை தோன்றலாம்.

**கும்பம்:** இல்லத்தில் ஒரு சுப மங்கல நிகழ்வுக்கான திட்டம் உருவாகலாம். உங்கள் ஆளுமையால் அனைவரிடமும் ஈர்ப்பு உண்டாகலாம். வீட்டை அழகுபடுத்தும் வேலைகளில் செலவுகள் ஏற்படலாம். வேலைத்தளத்தில் பணிகளும் சிறப்புறும்.

**மீனம்:** பணிகளில் உங்கள் மேலாதிக்க மனப்பான்மை சக ஊழியர்களால் விமர்சனம் செய்யப்படலாம். பரம்பரை சொத்துகளில் உங்களுக்கு உரிமை கிடைக்கலாம். உடலில் பலவீனம் உணரப்படலாம். அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை.

# சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்க காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தீர்மானம்

*(மன்னார் நகர் நிருபர்)*

இலங்கையின் சுதந்திர தினமான இன்றைய தினத்தை (04) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கரி நாளாக அனுஷ்டிக்கவுள்ளதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (03) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திர தினம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அந்த நாளை கரி நாளாக அனுஷ்டிக்க இருக்கிறோம்.

எங்களுடைய உறவுகளுக்காக வீதிகளில் நின்று போராட்டங்கள் செய்து எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத நிலையில் இந்த சுதந்திர தினத்தில் கரி நாளாக நாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நாளைய தினம் (இன்று) 10 மணி அளவில் அனுஷ்டிக்க இருக்கிறோம்.

அதனால் வீதிகளில் நின்று போராடும் தாய்மார்களுக்கு வலு சேர்ப்பதற்காக வர்த்தக சங்கங்கள், பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் நிறுவனங்கள், அரசியல்வாதிகள், சமூக நிறுவனங்கள், சமூகத் தொண்டர்கள், மனித உரிமை



செயற்பாட்டாளர்கள், அனைவரும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் எம்மோடு வந்து நின்று எமக்கு ஆதரவு தர வேண்டும்.

மேலும், ஒவ்வொரு மாவட்டமாக நீதியமைச்சர் வருகை தந்தார். ஆனால் அவர் நீதி அமைச்சராக வரவில்லை. நிதியமைச்சராகவே வந்தார். அதனால் சில மாவட்டங்களில் அவரை சந்திப்பதையும் நாங்கள் தவிர்த்துக் கொண்டோம். அவருக்கு தெரியும் நாங்கள் நிதிக்காக போராட வில்லை. எங்களுடைய உறவுகளுக்காக போராடுகிறோம் என்று. அதேபோல் மன்னாருக்கு 13 திணைக்களங்கள் வருவதாக இருந்து இறுதியில் வந்தது 7 திணைக்களம். அதில் ஓ. எம். பி. மன்னாருக்கு வந்து 4 வருடங்கள் ஆகின்றன.

இன்று வரை அது எந்தவொரு செயற்பாடுகளையும் செய்யவில்லை. அது அரசாங்கத்திற்கும் தெரியும். இருந்தும் ஜனாதிபதி நீதியமைச்சரை அனுப்பி ஒவ்வொரு மக்களாக சந்தித்து வருகின்ற ஜெனிவா கூட்டத்தொடரில் அரசாங்கத்திற்கு சாதகமாக மாற்றுவதற்கு செயல்பட்டு வருவதாக அறிய முடிகிறது. எனவே நாங்கள் இங்குள்ள இலங்கை அரசாங்கத்தை நம்பவில்லை. எங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும்.

ஆகவே தான் வர இருக்கின்ற சுதந்திர தின நிகழ்வின் போது முள்ளிவாய்க்கால் முற்றத்தில் கரி நாளாக அனுஷ்டிக்க இருக்கிறோம். இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு எமக்கு ஆதரவு தந்து வலு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயற்சித்த இளைஞர் கைது



சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட இத்தாலி வதிவிட விசாவை பயன்படுத்தி கட்டார், டோஹாவினூடாக இத்தாலிக்கு செல்ல முயற்சித்த இலங்கை பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் எல்லை கண்காணிப்புப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சீலாபம், மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்று கட்டார், டோஹாவுக்கு செல்லத் தயார் நிலையிலிருந்த, கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கியூவ். ஆர். - 655 என்ற விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

இவர் விமான பயணச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக குடியகல்வு பிரிவுக்கு வருகை தந்துள்ளதுடன், அங்கு கடமையிலிருந்த குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிக்கு தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அதன்போது அந்த ஆவணத்திலிருந்த இத்தாலி வதிவிட விசா அனுமதிப்பத்திரத்தை பரிசீலனை செய்தபோது குறித்த அதிகாரிக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில், குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# உடப்பு - பெரியபாடு ஆழ் கடலில் காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு



*(ரஸீன் ரஸ்மின்)*

புத்தளம் - உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபாடு ஆழ் கடலில் காணாமல்போன மீனவர் ஒருவரின் சடலம் நேற்று (03) பெரியபாடு பிரதேச ஆழ்கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையில் மீனவர்களினால் மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம் - பாலாவி பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை (31) பெரியபாடு ஆழ்கடலில் இயந்திரப் படகு மூலம் இருவர் கடலட்டை பிடிக்கச் சென்ற வேளையில் ஒருவர் ஆழ்கடலில் ஒட்சிசன் உதவியுடன் இறங்கி கடலட்டையை பிடித்துக்கொண்டு மேலே வந்தபோது குறித்த இயந்திர படகில் இருந்த மற்றைய மீனவர் காணாமல் போயுள்ளார். இயந்திரப் படகு மட்டுமே அங்கு இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உடப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், கடந்த இரண்டு நாட்களாக காணாமல்போன குறித்த மீனவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாருடன் இணைந்து கடற்படையினரும், மீனவர்களும் இணைந்து இவ்வாறு காணாமல்போன மீனவரை தேடியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக காணாமல்போன மீனவரின் சடலம் நேற்றுக் காலை ஆழ்கடல் பகுதியில் மிதந்துள்ளதை அவதானித்த மீனவர்கள், சடலத்தை இயந்திர படகு மூலம் கரைக்குகொண்டு வந்தனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் திடீர் மரண விசாரணை அதிகாரியினால் மரண விசாரனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 197 கைதிகளுக்கு இன்று பொது மன்னிப்பு

சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று (04) கைதிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் 197 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

மஹர சிறைச்சாலையில் 20 கைதிகளும், கேகாலை சிறைச்சாலையில் 18 கைதிகளும், வெலிக்கடை சிறைச்சாலையில் 17 கைதிகளும், களுத்துறை சிறைச்சாலையில் 13 கைதிகளும், போகம்பரை சிறைச்சாலையில் 11 கைதிகளும், மட்டக்களப்பு சிறைச்சாலையில் 11 கைதிகளும், வாரியபொல சிறைச்சாலையில் 10 கைதிகளும் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

# போதைப்பொருள் விருந்துபசாரம் மாணவர்கள் கைது

*(அநுராதபுரம் நிருபர்)*

போதைப்பொருள் விருந்துபசாரத்தில் ஈடுபட்டிருந்த எட்டுப் பேரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம், விஜேபுர பகுதியிலுள்ள இரண்டு மாடி வீடொன்றில் நேற்றிரவு நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவர்களை கைது செய்துள்ளதுடன், கேரள கஞ்சா பக்கற்றுகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 17 மற்றும் 18 வயதுடைய அநுராதபுரம் நகரிலுள்ள மூன்று பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



XTRAPREMIUM EURO 3
HI OCTANE PETROL WITH FRICTION BUSTERS
SERVO
WORLD-CLASS LUBRICANTS
THE SCIENCE OF EXTREME
XTRAMILE DIESEL

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 04ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# சண்முகா பாடசாலை சமூகத்தின் கவனத்திற்கு...

''அபாயா அணிந்து வரவேண்டாம். ஆசிரியைக்குரிய ஆடையை அணிந்து வரவும்'' என திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் செய்யும் போராட்டம் நேற்றும் இரண்டாவது நாளாக தொடர்ந்தமை குறித்து எமது கவனம் திரும்பியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் சைவ மகளிருக்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகம் அம்மையாரால் உருவாக்கப்பட்ட சண்முகா மகளிர் இந்துக் கல்லூரி, பின்னாளில் தேசிய அரசால் பொறுப்பெடுக்கப்பட்டு ஒரு தேசிய பாடசாலையாக உருவெடுத்து கல்வியில் முன்னிலை வகிக்கின்றது.

இப்பாடசாலையைப் பொறுத்தவரை துளிகூட இனவாதம், மதவாதம் இன்றி மற்றைய மத உரிமைகளை மதித்து அவர்களையும் பாடசாலையில் உள்வாங்கி, சகல மதத்தவருக்கும் பொதுவான பாடசாலையாகத் திகழ்ந்தமை வரலாறு.

2017ஆம் ஆண்டு இப்பாடசாலையில் அபாயா பிரச்சினை பாரிய பிரச்சினையாக உருவெடுத்த நிலையில், அப்பாடசாலையில் ஏற்கனவே கடமையாற்றிவந்த ஆசிரியை மீண்டும் பாடசாலைக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

இந்நிலையில், குறித்த பாடசாலை அதிபர் காரியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்கச்சென்ற நிலையில், பாடசாலைச் சமூகத்திற்கும், குறித்த பெண் ஆசிரியருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த பாடசாலையின் அதிபரை அபாயா அணிந்துவந்த ஆசிரியை தாக்கியதாகவும், இதேவேளை, அபாயா அணிந்து வந்தமையால் கோபம் கொண்ட அதிபர் தன்னைத் தாக்கியதாகவும் கூறி இருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அது தொடர்பில் நடக்கும் விசாரணைகளுக்கு இடம்விடுவோம்.

அபாயா அணிந்து சென்றதன் காரணமாக சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியை பாத்திமா பஹ்மிதா, நீதிமன்றத்தில் இரு தரப்பிற்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வின் காரணமாக மீண்டும் பாடசாலைக்கு கடமையைப் பொறுப்பேற்கச் சென்றபோதே மேற்படி பாடசாலையில் பதற்றநிலை தோன்றியுள்ளது.

2017இல் அபாயா அணிந்து கற்பிக்கச்சென்ற ஆசிரியைகளை அபாயா அணிந்து வந்ததன் காரணமாக பாடசாலையை விட்டு சண்முகா கல்லூரி நிர்வாகம் வெளியேற்றியிருந்தது. அதன்பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆசிரியைகள் செய்த முறைப்பாட்டை விசாரித்த ஆணைக்குழு, ஆசிரியைகளின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக முடிவுசெய்ததோடு, ஆசிரியைகளை மீள சண்முகா இந்துக் கல்லூரியில் உடனடியாக அனுமதிக்குமாறு பிரேரித்தது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரை வெளியாகி சில வருடங்களாகியும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், அதனை நடைமுறைப்படுத்தக்கோரி பாதிக்கப்பட்ட ஆசிரியைகளில் ஒருவரான ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

சென்ற மாதம் அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது அரச தரப்பு இணக்கப்பாட்டிற்கு வருவதாகக் கூறியதைத் தொடர்ந்து அதனை ஏற்றுக்கொண்ட மனுதாரரான ஆசிரியை பஹ்மிதா, தான் மீண்டும் சண்முகாவிற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று கேட்டிருந்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட அரச தரப்பு நேற்றுமுன்தினம் ஆசிரியை பஹ்மிதாவை மீண்டும் சண்முகா இந்துக் கல்லூரிக்கு வந்து கடமையை ஏற்குமாறு அனுமதித்தது. அதற்கான கடிதத்தை கல்வி அமைச்சு அனுப்பியிருந்தது.

அதன்பிரகாரமே நேற்று முன்தினம் சண்முகாவிற்கு மேற்படி ஆசிரியை கடமையேற்கச் சென்றுள்ளார். இதன்போதே மேற்படி சம்பவம் நடந்து ஆசிரியையை வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் சட்ட மா அதிபரின் கவனத்திற்கும், நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் யார் தவறு, யார் சரி என்று ஆராய்வதோ அல்லது நாட்டாமை போன்று தீர்ப்பை வழங்குவதோ எமது நோக்கமல்ல. ஆனால், இந்த விவகாரத்தில் சில விடயங்களை பொறுப்பான ஊடகம் என்றவகையில் நாம் சுட்டிக்காட்டவேண்டியிருக்கிறது.

குறித்த பாடசாலை அபாயா விவகாரத்தில் நீதிமன்றத்தில் சுமுகத்தீர்வு எட்டப்பட்டுள்ளது. இதற்கமைய கல்வி அமைச்சின் பணிப்பின்படி கடமைக்கு சமுகமளித்த ஆசிரியையை ஒப்பமிட அனுமதிக்காது தாமதிக்க வைத்ததன் காரணம் என்ன? இந்த விவகாரத்தில் உடனடியாக வெளியார் எவ்வாறு வந்து தலையீடு செய்தார்கள்? மாணவிகள் உடனடியாக பாடசாலையை விட்டு வெளியேறியமைக்கான பின்னணி என்ன? மாணவர்களை ஆர்ப்பாட்டங்களுக்குத் தூண்டுவோர் யார்? இதன் பின்னாலுள்ள அரசியல் என்ன? என்பனவே எம் முன்னுள்ள கேள்விகள்.

சண்முகா கல்லூரிக்கென ஒரு கலாசாரம், சில வரம்புகள் இருக்கின்றன. சில சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அவை பின்பற்றப்படவேண்டும் என்பதில் இருவேறு கருத்தில்லை. ஆனால், நாட்டின் நீதிமன்றம் ஒரு முடிவைச் சொன்ன பின்னர் கடமைக்கு வந்த ஆசிரியை இவ்வாறு நடத்தப்படும் பண்பினையா பாடசாலைச் சமூகம் கொண்டுள்ளது என்று கேட்கவேண்டியுள்ளது.

ஆசிரியையின் ஆடை குறித்து சர்ச்சை இருக்குமாயின், அவரை அழைத்துப் பேச்சு நடத்தியிருக்கலாம். அல்லது கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம். அவர்களின் பதில் கிடைக்கும்வரை அவரைக் கடமையாற்ற அனுமதித்திருக்கலாம். இவ்வாறு பல மாற்றுவழிகள் இருக்கும்போது அவற்றையெல்லாம் விடுத்து, மாணவர்களை வெளியேற்றச் செய்து அவர்களை போராட்டம் செய்யவைப்பது நியாயமானதா? அல்லது அவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்களின் மனங்களில் கிலேசத்தை உருவாக்கியதைத் தவிர, வேறெதனை சண்முகா பாடசாலைச் சமூகம் சாதித்துவிட்டது?

நாட்டில் தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையில் கடந்த பல தசாப்த காலமாக நிலவிவரும் அந்நியோன்னியம் ஒருசில காரணங்களால் அவ்வப்போது பின்னடைவைச் சந்தித்தாலும், இப்போதுதான் அந்த உறவில் மேம்பாடு வந்துகொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் இந்த சமூகங்கள் இரண்டும் கிட்டத்தட்ட ஒரே வகையான பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன. காணிப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, நில அபகரிப்பு, அடாத்தான குடியேற்றங்கள் என்று இரு சமூகங்களும் நாளாந்தம் பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றை எதிர்நோக்கவேண்டுமாயின் இந்த இரு சமூகங்களும் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும். அதற்கு படித்த கல்விச் சமூகமே முன்மாதிரியாக செயற்பட வேண்டும்.

சண்முகா கல்லூரியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை வெறுமனே பாடசாலை பாரம்பரியத்தை மீறியதால் வந்தது என்று கூறிவிட்டு வரலாற்று அபாண்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள தமிழ்க் கல்விச் சமூகம் முயலக் கூடாது. அபாயா அணிந்து இஸ்லாமிய ஆசிரியை கற்பிப்பதால் கலை, கலாசாரம் கெட்டுப்போய்விடுமென அல்லது அவை பாதிக்குமென பொதுபல சேனாவோ அல்லது இராவணா பலயவோ கூறுவதுபோல் உப்புச்சப்பில்லாத காரணத்தை கற்றறிந்த தமிழ்ச் சமூகம் கூறுவது அழகுமல்ல. உணர்ச்சிகளுக்கு இடம்கொடுக்காமல் நியாயமான நீதியான அடிப்படையில் இந்தப் பிரச்சினை அணுகப்படவேண்டும்.

அறையொன்றுக்குள் பேசித் தீர்க்கப்படவேண்டிய விடயத்தை அம்பலமாக்கியதன் மூலம் இனவாதிகளுக்கும், மதவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தத்தமது வேலைகளை செய்ய மேடை அமைத்துக் கொடுக்கப்பட்ட கைங்கரியத்தைத் தவிர, வேறெதுவும் இதன்மூலம் நடக்கவில்லை. இனவாதிகளுக்கு எமது இந்த நியாயம் எரிச்சலைத் தரலாம். அதற்கு எம்மிடம் மருந்தில்லை. நாட்டில் நீண்டகாலம் பிரச்சினைகளை உருவாக்கி அவற்றை வைத்தே இலாபம் தேடும் போக்கிரித்தனமான ஊடகக் கலாசாரத்தைப் பின்பற்ற நாம் விரும்பவில்லை என்பதால் இந்த நிலைப்பாட்டை முன்வைத்திருக்கிறோம்.

இந்தக் கருத்துகளை ஏற்பதும், நிராகரிப்பதும் சண்முகா பாடசாலை கல்விச் சமூகத்தின் கைகளில் உள்ளது. ஆனால், சாம, பேத, தான, தண்டமென்ற கோட்பாடுகளை மீறி உடனடியாக சட்டத்தை கையிலெடுப்பது நல்லதல்ல. தவறான முன்னுதாரணங்கள் இளம் சமுதாயத்தின் மத்தியில் விதைத்துவிடக் கூடாது.



# தனித்துவமிக்க தேசிய கொடி

சுதந்திர தினமான இன்று எமது தேசிய கொடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழிருந்த எமது தேசத்துக்கு 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரம் கிடைத்தது. அடிமைத்தனத்திலிருந்து எமது தேச மக்களுக்கு விடுதலை கிடைத்தது. அன்றைய தினம் தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மக்கள் அனைவரும் தேசிய கொடியை தம் வீடுகளிலும், பணியிடங்களிலும், பொது இடங்களிலும், பாடசாலைகளிலும் பறக்கவிட்டு மரியாதை செய்கின்றனர்.

இன்று சுதந்திர தினத்தில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கம்பீரமாக தேசிய கொடி பறப்பதனை அவதானிக்க முடிகின்றது. ஒரு நாட்டின் பெருமையைப் பறைசாற்றும் சின்னமாக தேசிய கொடி மதித்து கௌரவிக்கப்படுகிறது.

தேசிய கொடியை ஏற்றும்போதும், அதனை கம்பத்திலிருந்து இறக்கும்போதும் ஒரு நாட்டில் தலைவருக்கு கொடுக்கப்படும் அதேயளவு மரியாதை தேசிய கொடிக்குக் கொடுக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின்போது தேசிய கொடி சகல அரசாங்கக் கட்டடங்களிலும் கம்பீரமாக பறக்கவிடப்படுகிறது.

பல வகையான கொடிகளை ஓரிடத்தில் பறக்கவிடும்போது அவற்றை விட சற்று உயரத்தில் தேசிய கொடி பறக்கவிடப்பட வேண்டும்.

1972ஆம் ஆண்டில் இலங்கை ஒரு ஜனநாயகக் குடியரசாக மாற்றமடைந்த போதிலும், 1978ஆம் ஆண்டில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகம் செய்யப்பட்டபோதிலும், எமது நாட்டின் தேசிய கொடியில் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது .

ஐக்கிய இராச்சியத்திடமிருந்து இலங்கை விடுதலையடையும் வேளையில் இலங்கைக்கு கொடிக்கான தேவை ஏற்பட்டது. அதுவரை பிரித்தானிய ஒன்றியக் கொடியே இலங்கை கொடியாக இருந்து வந்தது. விடுதலையின்போது இலங்கையின் பிரதமராக இருந்த டி.எஸ்.சேனாநாயக்க இலங்கையின் கடைசி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிறப் போர் வாளேந்திய சிங்கக்கொடியானது சுதந்திர இலங்கையைக் குறிக்கும் சிறந்த கொடியாக அமையுமென தெரவுசெய்தார்.

எனினும், அக்கொடியில் தங்கள் இனத்துவங்களை பிரதிபலிக்கும் அடையாளங்களை ஏற்படுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

சில நாட்களின் பின் தேசிய கொடியில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, ஜீ.ஜீ.பொன்னம்பலம், ஜே.எல்.கொத்தலாவல, ரி.பி.ஜாயா, எல்.ஏ.ராஜபக்ஷ, எஸ்.நடேசன், ஜே.ஆர்.ஜயவர்தன ஆகியோரடங்கிய நாடாளுமன்றக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய தேசிய கொடியில் சம அளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைகுத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டன.

இலங்கையின் தேசிய கொடி மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும் பகுதியை அடக்கியுள்ள மற்ற பகுதி கருஞ்சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது.

செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும், பச்சை நிறப் பட்டை முஸ்லிம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ்சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன், பௌத்த மதத்தைக் குறிக்கும் வகையில் நான்கு அரச இலைகள் கொடியின் நான்கு மூலைகளிலும் இணைக்கப்பட்டன. இக்கொடியே தற்போது இலங்கையில் பயன்பாட்டில் உள்ளது

இலங்கையின் இன்றைய தேசிய கொடி பின்வரும் சிறப்பம்சங்களை உடையதாகும்.

சிங்கம் - உடல் வலிமையும், மனோ வலிமையும் மிக்கது. தனக்குப் பொருத்தமற்றதைச் செய்யாது. வாள் - அநீதிக்கு எதிரான போராட்டம். அரச இலைகள் நான்கு – மெத்தா - ஒற்றுமையை பலப்படுத்தல். கருணா - துன்பத்திலிருந்து மீட்சி பெறல். முதிதா - பிறரிடம் அனுதாபம் காட்டுதல். உபேக்ஷா – எளிமையும் சகிப்புத்தன்மையும். சிவப்பு நிறம் - சமத்துவம் மிக்க சமுதாய அமைப்பினை உருவாக்குதல். மஞ்சள் நிறம் - அறிவு, சமாதானம், அகிம்சை, சத்தியம், தர்மம் என்பவற்றை வெளிப்படுத்தல். செம்மஞ்சள் நிறம் - சிறுபான்மைத் தமிழர். பச்சை நிறம் – சிறுபான்மை முஸ்லிம்கள் போன்ற சிறப்பம்சங்களை உடையதாகும்.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதியன்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அன்று இலங்கையின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கவின் கொடியேற்றப்பட்டு பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டமை எமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது.

இத்தனை சிறப்புவாய்ந்த தேசிய கொடியானது ஒரு தேசிய தலைவரின் மரணம் அல்லது இயற்கை அனர்த்தத்தினால் நாட்டில் ஏற்படும் மனித அழிவின்போது தேசத்தின் சோகத்தை காண்பிக்கும் முகமாக அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

முக்கிய நிகழ்வுகளின்போது தேசிய கொடியை பயன்படுத்திய பின்னர் அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி உரிய முறையில் மடித்து வைக்கவேண்டும். அடுத்த தேசிய நிகழ்வுகள் நடைபெறும் தினத்தில் அல்லது முக்கிய நிகழ்வுகளில் மாத்திரம் கம்பங்களில் பறக்க விட வேண்டும்.

தேசிய கொடியை தலைகீழாக கவனக்குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, இலங்கை சட்டப்படி ஒரு தண்டனைக்கு உரிய குற்றமாகவும் கருதப் படுகிறது. தேசியக் கொடியை பறக்கவிடும் போது அதன் ஒரு பகுதி தரையில் படுவ தையோ வேறு ஏதாவது ஒரு பொருளின் மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசியக் கொடியை கட்டுவதும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.

அது போல் தேசியக் கொடிகளை அச்சிடும் போது அச்சகங்கள் அதன் இயற்கையான வர்ணங்களை மாற்றிவிடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசியக் கொடியை பாதைகளின் வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாக கருதப்படும். **14ஆம் பக்கம் பார்க்க...**

## இன்றைய நாளில்...

- **1488 – பார்த்தலோமியோ டயஸ் தென்னாபிரிக்காவுக்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் முதலாவது ஐரோப்பியக் கடற்பயணத்தை ஆரம்பித்தார்.**
- **1789 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரச தலைவராக ஜோர்ஜ் வொஷிங்டன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.**
- **1794 – இவ்வாண்டுமுதல் பிரெஞ்சுக் குடியரசு முழுவதும் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. ஆனாலும், 1802இல் பிரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகளில் அடிமை முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது.**
- **1797 – ஈக்குவடோரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 40,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.**
- **1834 – இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை சிலோன் ஒப்சேர்வர் முதன்முதலாக கொழும்பு ஒப்சேர்வர் என்ற பெயரில் வெளியிடப்பட்டது.**
- **1936 – முதற்றடவையாக 'ரேடியம் E' என்ற செயற்கைக் கதிரியக்கத் தனிமம் உருவாக்கப்பட்டது.**
- **1938 – ஹிட்லர் தன்னை ஜேர்மனியின் இராணுவ உயர் தளபதியாக அறிவித்தார்.**
- **1948 – இலங்கை பிரித்தானியப் பொதுநலவாயத்தின்கீழ் இலங்கை குடியரசு என்ற பெயரில் விடுதலையடைந்தது.**
- **1957 – இலங்கை சுதந்திர தினத்தை திருகோணமலையில் துக்க நாளாக அனுஷ்டித்த தமிழ் மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் திருமலை நடராசன் என்ற இளைஞர் கொல்லப்பட்டார். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.**
- **1975 – சீனாவில் 7.3 ரிச்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2,041 பேர் உயிரிழந்தனர்.**
- **1976 – குவாத்தமாலா மற்றும் ஹொண்டுராஸ் நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 22,000 பேர் இறந்தனர்.**
- **1978 – இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்தன பதவியேற்றார்.**
- **1998 – ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற 5.9 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2,323 பேர் உயிரிழந்தனர்.**
- **2004 – மார்க் சக்கர்பெர்க் பேஸ்புக் என்ற சமூக வலைத்தளத்தை ஆரம்பித்தார்.**
- **2007 – ஒலியை மிஞ்சிய வேகத்தில் செல்லும் ரஷ்ய - இந்திய 'பிரமாஸ்' ஏவுகணை ஒரிசா ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.**

## நக்கல் நமசிவாயம்

***சுப்பண்ணா சொன்னாரண்ணா***
***சுதந்திரம் வந்ததின்னு...***
***எப்பண்ணா வந்ததின்னேன் – எனக்கும்***
***தெரியல்லேன்னார்...***
***அப்பண்ணா நாம் இன்னும்***
***அடிமைகள் தானா அண்ணா....!***



# சுதந்திரமும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான பாதுகாப்பு உத்தரவாதமும்

எம்.எஸ். அமீர் ஹுசைன்



இலங்கைத் திருநாடு அந்நிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்று 2022 பெப்ரவரி 04 ஆம் திகதியுடன் 74 வருடங்கள் நிறைவடைகின்றன. இவ்வருடம் நாம் 74ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூருகின்றோம். 2019 நவம்பர் மாதம் நடைபெற்ற அரசியல் மாற்றத்துடன் மலர்ந்துள்ள ராஜபக்ஷ யுகத்தில் இந்த சுதந்திர தின நிகழ்வு நினைவு கூரப்படுகின்றது. சுதந்திரம் என்றால் என்ன? நாம் வருடாந்தம் இந்த சுதந்திர தினத்தை நினைவு கூருவதன் அர்த்தம் என்ன? பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் சுதந்திரமான ஒரு நாட்டில் மக்களுக்காக ஆற்ற வேண்டிய தேவைகள் யாவை? அரசாங்கத்தால் அந்த பொறுப்புகள் மீறப்படும்போது, மக்களால் என்ன செய்ய முடியும் போன்ற விடயங்கள் சுதந்திரம் பற்றி பேசுகின்றபோது சிந்திக்க வேண்டிய விடயங்களாக அமைகின்றன.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கும் வரையில் இந்நாடு பல சுதேச மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. இதன் அடையாளமே ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் வெவ்வேறு இராசதானிகள் இருந்துள்ளதை நாம் இலங்கையின் வரலாற்றை புரட்டுவதன் மூலம் அறிகின்றோம். போர்த்துக்கேயரை துரத்திவிட்டு 1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி ஆட்சி செய்தனர். 1796ஆம் ஆண்டு இலங்கையை கைப்பற்றிய ஆங்கிலேயர் ஒல்லாந்தரை விரட்டி அடித்துவிட்டு முதலில் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி நிர்வாகம் செய்தனர். பின்னர் 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியை கைப்பற்றியதன் மூலம் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தனர். இவ்வாறாக மூன்று ஐரோப்பியரதும் ஆதிக்கத்தின்கீழ் இலங்கையில் பல அரசியல், நிர்வாக, சமூக மற்றும் கலாசார ரீதியான மாற்றங்களும் தாக்கங்களும் ஏற்படலாயிற்று. இன்றும் நாம் அவற்றை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம்.

இவ்வாறு இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியரிடம் இருந்து இலங்கைத் தேசம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதாயினும், 1972ஆம் ஆண்டு வரையில் இந்நாட்டை ஆட்சி செய்வதற்கான அரசியல் யாப்பொன்றை வரைந்து கொள்ள முடியாத நிலை இருந்து வந்தது. அதுவரையில் டொமினியன் அந்தஸ்துடனான சுதந்திரத்தையே இந்நாடு அனுபவித்து வந்தது. 1970ஆம் ஆண்டு ஸ்ரீல.சு.க. தலைமையிலான கூட்டணித் தேர்தலில் பெற்றுக்கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தால் பிரித்தானியரது நிர்வாகத்தை முற்றாக ஒழித்துக் கட்டி 1972ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பொன்றை வரைந்து கொண்டதன் மூலம் முதலாவது குடியரசாக இலங்கைத் தேசம் மலர்ந்தது. 1972ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு அறிமுகம் செய்யப்பட்டதோடு, இலங்கையை இலங்கையராலே முழுமையாக ஆட்சி செய்யும் நிலை உருவாகியது. அதனைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பிரதிபலனாக 1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு வரையப்பட்டு 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பை முற்றாக மாற்றம் செய்து இரண்டாவது குடியரசு யாப்பு நடைமுறைக்கு வந்தது.

அதனைத் தொடர்ந்து தற்போது மலர்ந்துள்ள 2022ஆம் ஆண்டு வரையில் இரண்டாவது குடியரசு யாப்பிற்கு 20 திருத்தங்கள் வரையில் முன்வைக்கப்பட்டு காலத்திற்கு காலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்பவும் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் இரண்டாவது குடியரசு யாப்பை திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது, அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும், 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் மலர்ந்த தற்போதைய ராஜபக்ஷ ஆட்சி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருப்பதால் மீண்டும் ஒரு புதிய அரசியல் யாப்பை வரைவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு சில மும்மொழிவுகளை செய்திருப்பதாக அறிய முடிகின்றது.

சுதந்திரத்திற்கு முன்னைய அரசியல் வரலாற்றை சற்று பின்னோக்கி பார்த்தால் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த 150 வருடங்களுக்குள் 1833ஆம் ஆண்டு கோல்புரூக், 1910ஆம் ஆண்டு மற்றும் 1920ஆம் ஆண்டுகளில் முதலாவது, இரண்டாவது மெனிங் சீர்திருத்தங்கள், 1924ஆம் ஆண்டு குரு மக்களம், 1931ஆம் ஆண்டு டொனமூர், 1947ஆம் ஆண்டு சோல்பரி என்ற அடிப்படையில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை இலங்கைக்கு முன்வைத்து நிர்வாகத்தை முன்னெடுத்து வந்திருக்கின்றது. இவ்வாறாக இலங்கை சுமார் 450 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து விடுதலை பெற்ற நாளாக 1948ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு அந்நிய ஏகாதிபத்திய வாதிகளிடம் இருந்து சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தூரநோக்கில், இந்நாட்டில் வாழ்ந்த சிங்கள தலைவர்களோடு இணைந்து தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் தோளோடு தோள் நின்று அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்தனர். இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக போராடும் இலங்கை தேசிய காங்கிரஸ் 1919ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த தேசிய காங்கிரஸின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக முஸ்லிம் பிரதிநிதிகள் என்ற வகையில் காசிம் உமர், மக்தான் இஸ்மாயில், எஸ்.என். இஸ்மாயில், டி.பி. ஜாயா, எல்.எம். சபர், எம்.கே. சால்தீன் ஆகியோர் 1922ஆம் ஆண்டு இணைந்து கொண்டனர். அதன் மூலம் சுதந்திரப் போராட்டத்திற்கான இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு ஆரம்பமாகியது. அன்றைய காலகட்டத்தில் இந்த முஸ்லிம் தலைவர்கள் மிகவும் பிரபல்யம் மிக்க தலைவர்களாக கருதப்பட்டவர்களாவர். 1925ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி இந்த தேசிய காங்கிரஸின் உதவித் தலைவராக டி.பி.ஜாயா தெரிவு செய்யப்பட்டார். ரியால் முஹம்மத் என்ற முஸ்லிம் தலைவர் இலங்கை தேசிய காங்கிரஸின் செயலாளர்களுள் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டார். 1924ஆம் ஆண்டு மனிங் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஆட்சேபித்தபோது முஸ்லிம் தலைவர்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்கினர்.

1927ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு இலங்கை வந்தபோது இலங்கைக்காக மற்றுமொரு அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான கருத்துகளை வழங்கியவர்களில் என்.எச்.அப்துல் காதர், சேர் மாகான் மாகர், டி.பி ஜாயா ஆகியோர் இடம்பெற்றனர். அதனைத் தொடர்ந்து இலங்கை தேசிய காங்கிரஸால் 1930 ஜனவரி 23ஆம் திகதி இங்கிலாந்து மகாராணியை சந்தித்து இலங்கையின் நிலைவரம் மற்றும் விடுதலை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அனுப்பப்பட்ட தூதுக்குழுவில் காசிம் இஸ்மாயில் என்பவரும் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். அன்றைய காலகட்டத்தில் சுதந்திர வேட்கையில் பாடுபட்ட ஏ.ஈ.குணசிங்கா, டபிள்யூ.ஏ.டி.சில்வா, டி.எஸ்.சேனாநாயக்கா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர, பொன்னம்பலம் இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சேர் அருணாசலம், டி.பி. ஜயதிலக போன்ற சிங்கள பௌத்த மற்றும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களுடன் இணைந்து முஸ்லிம் தலைவர்களும் இந்நாட்டின் முஸ்லிம் சமூகம் சார்பான ஆதரவையும் ஒத்துழைப்பையும் சுதந்திரத்திற்காக வழங்கினர்.

அதே நேரம் தமிழ் சமூகம் சார்ந்த தலைவர்களான இராமநாதன் மற்றும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்றவர்கள் அவர்களது சமூகம் சார்பாக முக்கியமான உரிமைக் கோரிக்கையையும் அன்றைய காலகட்டத்தில் முன்வைத்தே விடுதலைக்கான ஆதரவை வழங்கினர். ஆனாலும் முஸ்லிம் தலைவர்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி இந்நாட்டில் விடுதலை, சுயாதிபத்தியம், இறைமை, தன்னாதிக்கம், ஐக்கியம், சமாதானம் என்ற ஒரே குறிக்கோளில் ஒத்துழைப்பை வழங்கினர் என்பது பிரதானமாகும். இதற்கு சிறந்த உதாரணமாக 1935ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி இலங்கை முஸ்லிம் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக போராடிய சிங்கள மற்றும் தமிழ்த் தலைவர்களும் கலந்துகொண்ட விசேட வைபவம் ஒன்றில் சேக் அல்பாசி என்ற இஸ்லாமிய அறிஞர் "சமாதானம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்" என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையைக் குறிப்பிடலாம்.

அத்துடன் தேசிய காங்கிரஸுக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அகில இலங்கை முஸ்லிம் லீக், இலங்கை முஸ்லிம் சங்கம், இலங்கை சோனகர் சங்கம் (சிலோன் முவர்ஸ் அசோசியேசன்) போன்ற சங்கங்களை உருவாக்கி அவற்றின் ஊடாக முஸ்லிம்களை ஒருங்கிணைத்து பிரித்தானியர் ஆதிக்கத்தில் இருந்து இலங்கையை சுதந்திரம் அடையச் செய்து நாட்டின் இறைமை, தன்னாதிக்கம் என்பவற்றை உறுதிப்படுத்த பங்களிப்பை வழங்கியுள்ளனர். இந்த பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்று வரையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சுதந்திரத்தின் பின்னர் நாட்டை ஆட்சிசெய்த சிங்கள தலைவர்களுடன் இணைந்து ஐக்கிய இலங்கை என்ற ஒரே தத்துவத்தின் அடிப்படையில் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இன்றைய சூழ்நிலையில் பேரினவாதிகள் முஸ்லிம்களை ஒரு தனி இனமாக வேறுபடுத்தி உரிமைகளை முடக்க திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், இந்நாட்டு முஸ்லிம் சமூகம் சுதந்திரத்திற்காக வழங்கிய ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் மறந்த நிலையில் தனி ஒரு இனத்தின் மேலதிக்க பலம் வளர ஆரம்பித்திருக்கின்றது.

இந்த பங்களிப்பின் காரணமாகவே 1833ஆம் ஆண்டு முதல் 1931ஆம் ஆண்டு வரையிலான அரசாங்க சபையில் பல முஸ்லிம்கள் அங்கம் வகித்து நாட்டிற்காகவும் முஸ்லிம்களுக்காகவும் குரல் எழுப்பியதை குறிப்பிடலாம். அவர்களுள் எம்.சி.அப்துர்ரஹ்மான், வாபிச்சி மரிக்கார், என்.எச்.எம். அப்துல் காதர், முஹம்மத் சுல்தான், எம்.ரி. அக்பர், டி.பி.ஜாயா, மாகான் மாகர், எம்.சீ.எம். கலீல், சேர் ராசிக் பரீட் போன்றவர்களைக் குறிப்பிடலாம். 1833ஆம் ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டு வரையில் பிரித்தானியரால் முன்வைக்கப்பட்ட ஆறு அரசியல் சீர்திருத்தங்களின் கீழும் நிறுவப்பட்ட அரசாங்க சபையில் நியமன மற்றும் தெரிவு அங்கத்தவர்களாக இருந்து இலங்கையின் இறைமைக்காக குரல் எழுப்பினர்.

1947ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் பதவிக்கு வந்த இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் கீழும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஐக்கிய இலங்கை என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் அரசியல் பங்களிப்பை செய்து வருகின்றனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிளவுபட்ட தேசத்தை அல்லது ஐக்கியம் சீர்குலைந்த தேசத்தை முஸ்லிம்கள் விரும்பியதில்லை. இவ்வாறே தமிழர்கள் மத்தியில் இருந்தும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்ட அதே நேரம், அன்று முதல் தமிழர்களது உரிமைகள் தொடர்பான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு வந்ததையும் அவதானிக்க முடிகின்றது.

இருந்தாலும், 1990ஆம் ஆண்டின் பின்னர் பௌத்த சமூகத்தில் உருவாகிய சில பௌத்த தீவிரவாத மற்றும் தீவிர சிங்கள உணர்வில் சிந்திக்கும் அநகாரிக தர்மபாலவின் சிந்தனைகளால் கவரப்பட்ட தலைவர்கள் முஸ்லிம்களின் 100 வருடங்களுக்கும் மேற்பட்ட பங்களிப்பை மறுத்தவர்களாக இந்நாட்டு முஸ்லிம்களை இரண்டாந்தர பிரஜைகளாக நடத்துவதற்கும் அவர்களை இந்நாட்டின் அடிமைகளாக்கி மேலாதிக்கம் செலுத்தவும் முயற்சிகளை மேற் கொண்டுவருகின்றனர். பதவிக்கு வருகின்ற அரசாங் கங்களில் அங்கம் வகிக்கும் ஒரு சில செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களும் நாட்டின் தலைவர்களும் கூட இந்த பௌத்த தீவிர சிந்தனைவாதிகளை மேலும் உற்சாகப்படுத்தி அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் இஸ்லாத்திற்கும் முஸ்லிம் களுக்கும் எதிரான சிந்தனைக்கும் கருத்து களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து வந்துள்ளனர். அவ்வாறே 1956ஆம் ஆண்டு தமிழர்களது உரிமைகள் தொடர்பான போராட்டமும் பண்டா - செல்வா உடன்படிக்கை கிழத்தெரியப்பட்டமையும் அமைகின்றது.

2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழர்களுக்கு அடுத்ததாக முஸ்லிம்கள் மீது அவதானம் செலுத்தப் பட்டது. முஸ்லிம்களுக்கு எதிரான பிரதான குற்றச் சாட்டுகள் இந்நாட்டு முஸ்லிம்கள் பௌத்தத்தை அழிப்பதற்கு தயாராகின் றனர். வெளிநாடுகளில் இயங்கும் இஸ்லாமிய பயங்கரவாதிகளோடு இணைந்து இலங்கையை அழிக்க திட்டமிடுகின்றனர். இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதத்தை பரப்பு கின்றனர். இலங்கையை இஸ்லாமிய நாடாக மாற்றியமைக்க திட்டமிட் டுள்ளனர் என்ற அடிப்படை யில் உள்ளன. இவை வெறும் வாய்மூலம் அல்லது வெறுப்பு பேச்சுக்கள் வாயிலாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளாகும்.

வடக்கில் தமிழர் களுக்கும் சிங்களவர் களுக்கும் இடையில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்படும் போது வடக்கிற்கு வெளியில் (தெற்கில்) முஸ்லிம் களுக்கும் சிங்களவர் களுக்கும் இடையில் பிளவையும் முரண்பாட்டை யும் உருவாக்கி சிங்கள மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடும் நிலைமைகளை இன்றைய சில பௌத்த தீவிர போக்குடைய அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன.

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்ற இன்றைய நிலையில் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களாகிய நாமும் இந்நாட்டின் பிரஜைகளே என்பதை சிங்கள மக்கள் அனைவரும் சரியாக புரிந்து கொள்ளச் செய்வதற்காக அரச மட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அதேபோன்று முஸ்லம் சமூகத்தில் இருந்தும் சிங்கள மற்றும் தமிழ் மக்களுடனான புரிந்துணர்வு நடவடிக்கைகள் பலமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கின்றது. அத்துடன், முஸ்லிம் சமூகமும் உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிப்பதற்கான சமூகம் என்ற உயர்வில் மாத்திரம் செயற்படாது நாமும் இந்நாட்டின் பிரஜைகள்தான், இந்நாட்டின் மீது அன்பும் கரிசனையும் மிக்கவர்கள் என்பதை வெளிப்படையாக உணர்த்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது.

நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு மாற்றம் செய்யப்பட்டு மீண்டும் மூன்றாவது அரசியல் யாப்பொன்று தயாராகிக் கொண்டிருக்கின்ற நிலையில் அரசியலமைப்பின் பெயரால் அல்லது ஒரே நாடு ஒரே சட்டம் என்ற பெயரில் இலங்கை வாழ் தமிழர்கள், முஸ்லிம்களது உரிமைகளை நசுக்கி பேரினவாதத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் பாரபட்சங்கள் இடம்பெறுமானால் நாம் இந்நாட்டில் சுதந்திரம் பற்றி பேசுவது அர்த்தமற்றதாகி விடும். அரசியல் யாப்பு என்பது ஒரு இனத்தின் உரிமைகளை நசுக்கவும் இந்நாட்டில் பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி பௌத்த தீவிரவாதத்திற்கேற்ப நாட்டை நடத்துவது அல்ல. எல்லா இனங்களையும் அரவணைத்து அந்தந்த இனங்களுக்குரிய உரிமைகள், கடமைகளை மற்றும் நூற்றுக்கணக்கான வருடங்களாக அனுபவிக்கும் சலுகைகளுக்கு உத்தரவாதமளித்து ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் ஆட்சியை நிலைநிறுத்துவது இன்றைய அரசாங்கத்தின் கடமையாகும்.

## 03.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 028 75 7 | 034 6801 |
| கனேடியன் டொலர் | 044 2757 | 050 1378 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 823 | 21 084 |
| யூரோ | 113 851 | 121 5303 |
| ஜப்பான் யென் | 0 6145 | 0 6788 |
| சிங்கப்பூர் டொலர் | 035 7 44 | 040 4351 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 8577 | 165 323 |
| சுவிஸ் பிரான்ங் | 103 5263 | 111 114 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 423 5430 |
| குவைட் | குவைட் தினார் | 555 5224 |
| ஓமான் | ஓமான் றியால் | 412 4751 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 0024 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 6201 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 7706 |




# ஒரு இலட்சம் வேலைத்திட்டத்திற்காக காணி அபகரிப்பு; அடிக்கல் நாட்டு விழாவில் கோணகலை மக்கள் எதிர்ப்பு!

## பிரதேச சபை உறுப்பினரை எம்.பி. தாக்கியதால் வைத்தியசாலையில் அனுமதி





(பதுளை நிருபர் )

பசறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோணக்கலை பசறை டிவிஷன் தோட்ட பகுதியில் ஒரு இலட்சம் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் நேற்று (03) காலை இடம்பெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வின்போது மக்களின் எதிர்ப்பினால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

பசறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோணக்கலை பசறை டிவிசன் தோட்ட காணியில் பிரதேச செயலகத்தினால் வாசிகசாலை மற்றும் கிராம அலுவலக காரியாலய கட்டடத்தொகுதி நிர்மாணிப்பதற்காக நேற்று (03) காலை 8.52 மணியளவில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு பசறை பிரதேச சபை செயலகத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஊவா மாகாண சபை முன்னாள் முதலமைச்சருமான சாமர சம்பத் தசநாயக்க மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

எனினும், கோணக்கலை தோட்டப் பகுதியில் நான்கு டிவிசன்களைச் சேர்ந்த சுமார் 400இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், அங்கு இரு தரப்பினருக்குமிடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த காணியானது சுமார் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடமாகக்கொண்ட காணி என்பதனால் குறித்த காணியின் வளாகத்துக்குள் அடிக்கல் நாட்டுவதற்கு மக்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதன்போது காணியின் உரிமையாளர், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகிய இருவரிடமும் நீண்டநேர வாக்குவாதத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த தோட்டக் காணியை அரசாங்கம் சுவீகரிக்காது என உறுதியளித்தார்.

இதன்பின்னர், பிரதேச மக்கள் அவ்விடத்தை விட்டு கலைந்துசெல்ல முற்பட்டவேளை மலையக மக்கள் முன்னணியின் பசறை அமைப்பாளரும் பசறை பிரதேச சபை உறுப்பினருமான கண்மணி சிவனேசன், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவினால் தான் தாக்கப்பட்டதாக கூறியதன் பின்னர் மீண்டும் அமைதியின்மை ஏற்பட்டது.

இதன்பிறகு மலையக மக்கள் முன்னணியின் பசறை அமைப்பாளரும் பசறை பிரதேச சபை உறுப்பினருமான கண்மணி சிவனேசன், தான் ஒரு மக்கள் பிரதிநிதி என்பதாகவும் அவர்களின் முன்னால் தான் தாக்கப்பட்டமை காரணமாக தான் கடும் மனஉளைச்சலுக்குள்ளாகி விஷம் அருந்தியதாக பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த காணியில் காணப்படும் 3 குடியிருப்புகளில் பசறை பிரதேச செயலகத்தினால் இது அரச காணி உள்ளே நுழைய தடை என்று அறிவித்தல் ஒன்று ஒட்டப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் இந்த உத்தரவினை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# கண்டி வைத்தியசாலை காணியில் 168 சட்டவிரோத குடியிருப்புகள்

## 24 ஏக்கர் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

கண்டி தேசிய வைத்தியசாலை காணியில் 168 சட்டவிரோத குடியிருப்புகள் இருப்பதோடு, 24 ஏக்கர் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் அருண ஜயசேக்கர தெரிவித்தார்.

கண்டி மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கண்டி தேசிய மருத்துவமனை வளாகத்திலுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களுக்கு பொருத்தமான இழப்பீடுகளை வழங்கி அவர்களை வெளியேற்றி, வைத்தியசாலையின் அபிவிருத்தியை மேலும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி வைத்தியசாலைகளில் ஒன்றாகவும் இரண்டாவது பெரிய தேசிய வைத்தியசாலையாகவும் உள்ள கண்டி தேசிய மருத்துவமனையில் வருடந்தோறும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைக்கு வருகின்றனர்.

எனவே, அதில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக, அடுத்தகட்டமாக முறிவு மற்றும் அங்கவீனர்கள் பிரிவு ஒன்று ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆங்காங்கே உள்ள சட்டவிரோத குடியிருப்புகள் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றன.

2018ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட 168 சட்டவிரோத குடியிருப்புகளில் 37 குடியிருப்புகளுக்கு நியாயமான இழப்பீடுகளை வழங்கி வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கண்டி தேசிய வைத்தியசாலை காணியில் 168 சட்டவிரோத குடியிருப்புகள் இருப்பதோடு, 58 ஏக்கர் நிலத்தில் 24 ஏக்கர் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

# பொகவந்தலாவையில் குளவிக்கொட்டு: 9 பேர் வைத்தியசாலையில் அனுமதி





(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவை மேல்பிரிவு தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 9 தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (03) பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மரத்தில் இருந்த குளவிக்கூடு கலைந்து வந்து தொழிலாளர்களை தாக்கியதில் 8 பெண் தொழிலாளர்களும் ஒரு உதவி ஆண் வெளிக்கள உத்தியோகத்தர் உட்பட ஒன்பது பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பூண்டுலோயாவில் அம்மன் கோவில் உடைப்பு!

## சந்தேகநபர்களைத் தேடி பொலிஸ் வலைவீச்சு





(பூண்டுலோயா நிருபர்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சீன் தோட்டத்தில் அம்மன் கோவில் உடைத்து பெறுமதியான பதிமூன்று அம்மன் தாலி பொட்டு உட்பட உண்டியல் காசும் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (02) இடம்பெற்றுள்ளதுடன், இது தொடர்பில் குறித்த தோட்டத்தின் கோவில் கமிட்டி உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்டத் தலைவர்கள் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் கொடுத்த முறைப்பாட்டுக்கமைய பூண்டுலோயா பொலிஸார் பொலிஸ் மோப்ப நாய்கள் மற்றும் கைரேகை நிபுணர்களின் உதவியுடன் திருடர்களை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தியால் பாடசாலைக்கு ஏற்படும் இடநெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை



(கண்டி நிருபர்)

கண்டியில் வீதி அபிவிருத்தி காரணமாக பாடசாலைக்கு ஏற்படும் இடநெருக்கடியைத் தீர்க்க மத்திய மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். கண்டி வில்லியம் கோபல்லாவ மாவத்தையை நான்கு வழிப்பாதையாக அபிவிருத்தி செய்யவுள்ளதால் அதன் அருகில் உள்ள ராசிங்தேவ் வித்தியாலயத்தின் ஒரு பகுதி சுவீகரிக்கப்பட உள்ளது. இதனால் பாடசாலையில் பாரிய இடநெருக்கடி ஏற்படவுள்ளது.

எனவே, இடப்பற்றாக்குறையை நிவர்த்திக்கும்படி பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்து வந்தனர். இது தொடர்பாக அதிகாரிகளுடன் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

அதனடிப்படையில் இடப்பற்றாக்குறையைப் போக்க புதிய கட்டிடம் ஒன்று வழங்குவது தொடர்பாக அங்கு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

# அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய விரிவுரையாளர்கள் கௌரவிப்பும் நூல் வெளியீடும்



(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலையத்தில் அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றிய விரிவுரையாளர்கள் அனைவரும் ஆசிரியர் மாணவர்களால் மாலை சூடி, பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னங்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன், 'நினைவேட்டில் தாரகைகள்' நூலும் வெளியிடப்பட்டது.

தேசிய கல்வி நிருவகம் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளும் கல்விமாணி கற்கைநெறியின் பதுளை நிலைய 2017 - 2020 தொகுதி கற்கை ஆசிரியர் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரியாவிடை நிகழ்வும் நினைவேட்டில் 'தாரகைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றன.

கல்விமாணி கற்கைநெறியின் பேரவை தலைவர் எஸ். வசந்தகுமார் தலைமையில பதுளை கெப்பிட்டல் சிடி ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு வருகைதந்த பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலைய இணைப்பாளர் எஸ்.ஜெயகாந்தன் (கல்வியியலாளர்) தலைமையிலான விரிவுரையாளர்கள் அனைவரும் ஆசிரியர் மாணவர்களால் மலர்கொத்து வழங்கப்பட்டு இன்முகத்துடன் விழா நடைபெறும் மண்டபத்திற்கு வரவேற்கப்பட்டனர்.

பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலைய இணைப்பாளர் மறைந்த அமரர் பாலசந்திரனும் சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆசிரியர் மத்திய நிலையத்தின் (தமிழ்பிரிவு) முன்னாள் முகாமையாளருமாகிய அமரர் பாலசுப்ரமணியம் ஆகியோரும் நினைவுகூரப்பட்டு அனைவரும் எழுந்துநின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

ஆசிரியர் மாணவர் துரைசாமி சிவக்குமாரின் புதல்வியும் பசறை கோணக்கலை தமிழ் ஆரம்பப் பாடசாலை மாணவியுமாகிய செல்வி அஷ்மிதாவின் வரவேற்பு நடனமும் பேரவைத் தலைவர் எஸ்.வசந்தகுமாரின் வரவேற்புரையும் விழா முதல்வரையும் விருந்தினர்களையும் இன்முகம்கொண்டு வரவேற்பு செய்தன.

பதுளை கல்விமாணி கற்கைநெறி நிலையத்தில் அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றிய விரிவுரையாளர்கள் அனைவரும் ஆசிரியர் மாணவர்களால் மாலைசூடி பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.



இதன்போது, சுதர்சினி மணிமொழி (தேசிய கல்வி நிருவக கல்விமாணி கற்கை நெறியின் தமிழ்ப் பிரிவு கற்கைநெறியின் பிரதான இணைப்பாளர்), எஸ். ஜெயகாந்தன் (இணைப்பாளர் கல்விமாணி கற்கைநெறி பதுளை நிலையம்), சரஸ்வதி பாலசுப்ரமணியம் (முகாமையாளர், தமிழ் ஆசிரியர் மத்திய நிலையம்), சு. கார்த்தீபன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், பதுளை வலயம்), மு.யோகேஸ்வரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், பண்டாரவளை வலயம்), கருணாகரன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பதுளை வலயம்), எஸ்.பிரபாகரன் (ஆசிரிய ஆலோசகர்), எஸ்.யோகேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர்), எஸ். நவரத்னம் (ஆசிரிய ஆலோசகர்), கே சுரேஸ்குமார் (விரிவுரையாளர் ஶ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி, பத்தனை), எஸ். சர்மிளா (விரிவுரையாளர், ஶ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி, பத்தனை), திருச்செல்வம் ( உப அதிபர் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), பிரகாஷ் (ஆசிரியர் ராசிக் பரீட் மகா வித்தியாலயம்), சிவகுமார் (ஆசிரிய ஆலோசகர்), பரீனா இக்பால் (ஆசிரிய ஆலோசகர்), தேவகி (ஆசிரிய ஆலோசகர்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து கல்விமாணி கற்கைநெறி மாணவர் இதழாசிரியர் நடராஜா மலர்வேந்தன் தலைமையிலான மலர்குழுவினர் "நினைவேட்டில் தாரகைகள்" எனும் நூலை வெளியீடுசெய்து இணைப்பாளர் எஸ். ஜெயகாந்தனிடம் கையளித்தனர்.

மலையகத்தின் ஊவா மாகாண மண்ணுக்கு பெருமைசேர்த்த கல்வித்துறையில் சாதனை படைத்து கல்வியியலாளராகவும், கல்விப் பணிப்பாளராகவும், ஆசிரியர் ஆலோசகராகவும், அதிபராகவும், தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி கற்கைநெறியின் தேசிய மற்றும் பிராந்திய இணைப்பாளர்களாகவும் திகழ்கின்ற விரிவுரையாளர்களைப் பற்றிய குறிப்பாகவும், இவர்கள் தடைகளைக் கடந்துவந்த பாதைச்சுவடுகளின் மீள்பார்வையாக 'நினைவேட்டில் தாரகைகள்' நூலின் ஆக்கங்களாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊவா மாகாணத்தில் ஒரே தடவையில் எண்ணிக்கையில் நூற்றுக்கதிகமான ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு வித்திட்டு கல்விமாணி பட்டதாரிகளை உருவாக்கிய பெருமைக்குரிய இணைப்பாளர் தலைமையிலான விரிவுரையாளர்கள் ஆற்றிய அறப்பணியைப் போற்றி ஆசிரியர் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாமல் பிரியும் பிரியாவிடை நிகழ்வு நேர்த்தியாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றது.

ஆசிரியர் கல்வித்துறை பணிப்பாளர் மற்றும் கல்விமாணி கற்கைநெறியின் தேசிய தமிழ்ப்பிரிவு இணைப்பாளர் சுதர்சினி மணிமொழி, கல்விமாணி கற்கைநெறியின் தேசிய இணைப்பாளர் மாதவ பண்டார, கல்வி ஆலோசகர்கள் ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் நாடளாவிய ரீதியில் - மாவட்ட ரீதியில் கல்விமாணி கற்கைநெறி நிலையங்கள் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# Lanka Industrial Estates Ltd (LINDEL) நிறுவனம் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையம் ஏற்பாடு செய்த 56ஆவது ஆண்டறிக்கை விருதுகளில் காணி மற்றும் ஆதனத் துறையில் வெண்கல விருதை வென்றுள்ளது

DFCC குழுமத்தின் துணை நிறுவனமான Lanka Industrial Estates Ltd (LINDEL), "மீண்டு எழுவதிலிருந்து வளர்ச்சி காணுதல்" என்ற தொனிப்பொருளுடன் வெளியிட்ட 2020/21 நிதியாண்டிற்கான அதனது ஆண்டறிக்கைக்காக, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையம் ஏற்பாடு செய்திருந்த 56ஆவது ஆண்டறிக்கை விருதுகளில் 'காணி மற்றும் ஆதனம்' என்ற துறையில், 'வெண்கல விருதை' அண்மையில் வென்றுள்ளது. பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்பட்டுள்ள பல நிறுவனங்களை உள்ளடக்கிய இப்பிரிவில் LINDEL மட்டுமே பங்குச்சந்தையில் நிரற்படுத்தப்படாத ஒரு நிறுவனமாகப் போட்டியிட்டது. மேலும் போட்டியின் முதல் ஆண்டிலேயே இந்த விருதைத் தனதாக்கியுள்ளதுடன், இது நிறுவனம் மற்றும் ஒட்டுமொத்த DFCC குழுமத்திற்கும் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாக மாறியுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருமதிப்புமிக்க ஆண்டறிக்கை விருதுகள் நிகழ்வானது 2021 டிசம்பர் 9ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. 55 ஆண்டுகளுக்கும் மேலான புகழ்பெற்ற



**சமந்த குமாரசிறி - உதவிக் கணக்காளர், உபுல் சேனாநாயக்க - சிரேஷ்ட செயற்பாட்டு முகாமையாளர், அசிந்த ஹேவகே - நிதிக் கட்டுப்பாட்டாளர், ரசிக கூரே - தலைமை நிர்வாக அதிகாரி, மனில் ஜயசிங்க - தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையம், சஞ்சய பண்டார - உப தலைவர் - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையம், சமிந்த குமாரசிறி - தலைவர், ஆண்டறிக்கை விருதுகள் குழு.**

வரலாற்றைக் கொண்ட இந்தப் போட்டியானது, கடுமையான மூன்று அடுக்கு மதிப்பீட்டு நடைமுறைக்கு உட்பட்டது. இங்கு ஆண்டறிக்கைகள் மூன்று கட்டங்களாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. முதலில் ஒரு தொழில்நுட்பக்குழுவும், பின்னர் தொழில்துறை வல்லுநர்கள் குழு ஒன்றும் மற்றும் அதன் பின்னர், ஒரு சிறந்த கணக்காளர், ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் கல்விமான்களை உள்ளடக்கிய நடுவர் குழுவால் இந்த மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் சாதனை குறித்து LINDEL நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ரசிக கூரே கருத்துத் தெரிவிக்கையில், "போட்டியில் நாங்கள் பங்குகொண்ட முதல் வருடத்திலேயே வெண்கல விருதை வென்றதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இது எங்கள் வலுவான செயல்திறன் மற்றும் ஆண்டறிக்கை வெளியீட்டுக் கட்டமைப்பிற்கு இணங்குவதை பிரதிபலிக்கிறது. எங்கள் நிறுவனத்தின் வலுவான கட்டமைப்புகள், செயல்முறைகள், ஒழுக்கமான பணியாளர்கள், பணிப்பாளர் சபைத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் DFCC வங்கியின் பக்கபலம் ஆகியவை எங்களின் மீண்டெழும் திறனை கணிசமாக அதிகரித்துள்ளதுடன், சவாலான சூழலுக்கு மத்தியிலும் அதிக வருவாயைப் பதிவு செய்ய இடமளித்துள்ளன. நிறுவனத்தின் செயல்திறன் வரையறைகளை மேலும் உந்தித் தள்ளும் அதேவேளையில், தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் நாங்கள் தொடர்புகொள்வதையும், சிறப்பான முறையில் ஈடுபாடுகளையும் உறுதிசெய்து, உயர்மட்ட பொறுப்புணர்வையும் வெளிப்படுத்துதலையும் வெளிப்படுத்தும் எங்களின் மூலோபாயத்திற்கு இந்த அறிக்கையிடல் சிறந்த சான்றாக அமைந்துள்ளது. சவாலான ஆண்டில் தொடர்ந்தும் முழுமையான ஆதரவை வழங்கி, இந்த விருதைப் பெற்றுக்கொள்ளும் பாதையில் எம்மை வழிநடத்திய முகாமைத்துவ அங்கத்தினர், பணிப்பாளர் சபைத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் ஆகிய அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்" என்று குறிப்பிட்டார்.

**LINDEL நிறுவனம் தொடர்பான விபரங்கள்**

Lanka Industrial Estates Ltd (LINDEL) நிறுவனமானது DFCC வங்கியின் ஒரு துணை நிறுவனமாகும். சப்புகஸ்கந்தவில் உள்ள அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தளத்தை ஒரு கைத்தொழில் பேட்டையாக அபிவிருத்தி செய்வதற்காக DFCC வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையிலான கூட்டணியாக இது 1992இல் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது. அந்தவகையில், LINDEL என்பது இலங்கையின் முதலாவது தனியார் துறைக்குச் சொந்தமான தொழில்துறை கைத்தொழில் பேட்டை அபிவிருத்தியாளர் மற்றும் செயற்பாட்டாளர் ஆகும். தற்போது 105 ஏக்கர் பரப்பளவில் சப்புகஸ்கந்தவில் உள்ள இடம், விவசாயம், இரசாயனங்கள், விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் உற்பத்திகள், ஏற்றுமதி, இறக்குமதி போக்குவரத்து, மசகு எண்ணெய்கள், உலோகத் தயாரிப்பு, பொதியிடல் மற்றும் மின் உற்பத்தி போன்ற பல்வேறு வணிகங்களில் ஈடுபட்டுள்ள 36 குத்தகைதாரர்களால் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. LINDEL அதன் அனைத்து குத்தகைதாரர்களுக்கும் முழுமையான உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகளை வழங்குகிறது. அத்துடன் அதன் அனைத்து சேவைகளின் பேணல் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தலில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது.

## சமூக மாற்றம் மூலம்...

ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான இத்தகைய போராட்டங்கள் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

ஒரு துளியேனும் இரத்தம் சிந்தாமல் காலனித்துவ சுதந்திரத்தை அடைந்தமை இன, மத, கட்சி பேதமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் என அனைத்துத் தலைவர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் விளைவாகும்.

74 வருடங்களுக்கு முன்னர் கிடைத்த அந்த சுதந்திரத்தின் உண்மையான உத்வேகம் உள்நாட்டுப் போராட்டங்களினாலும், மூன்று தசாப்த கால பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தினாலும் இந்நாட்டு மக்களுக்கு இல்லாமல் போனது. போர்வீரர்களின் ஈடு இணையற்ற துணிச்சலுக்கும் அர்ப்பணிப்பிற்கும் தலைமைத்துவம் வழங்கி இத்தால் 13 வருடங்களுக்கு முன்னர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களுக்கு அச்சம் இல்லாத நாட்டுக்கு மீண்டும் உரிமைக்கொள்ள முடிந்தது.

அந்த சுதந்திரம் மீண்டும் சவாலுக்குட்பட்ட நிலையில், நாட்டின் ஆட்சியை மீண்டும் பொறுப்பேற்று நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்திய நாம் உலகளாவிய தொற்றுநோய்க்கு மத்தியில் வீழ்ச்சியடைந்த மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் மாபெரும் இலக்கை நோக்கி பயணித்து வருகிறோம்.

இந்த அழிவுகரமான தொற்றுநோயிலிருந்து உயிர்களைக் காப்பாற்றுவதற்கான அரசாங்கத்தின் தடுப்பூசி ஏற்றும் திட்டம் இப்போது உலக அளவில் பாராட்டப்பட்டிருப்பது ஒரு நாடாக நம் அனைவருக்கும் ஒரு பெரிய சாதனையாகும்.

சவால்களுக்கு மத்தியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணமிது. ஒருவரையொருவர் மதித்து, மற்றவரின் இருப்புக்கு இடையூறாக இல்லாத சமூக மாற்றத்தின் மூலம் சுதந்திரத்தின் அர்த்தத்தை விரிவுபடுத்த முடியும் என்பது எனது நம்பிக்கை.

இந்த தேசிய சுதந்திர தினத்தில், எமது தாய்நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக தம் இன்னுயிர்களை தியாகம் செய்து மகத்தான தியாகங்களை செய்த அனைத்து மாவீரர்களையும் நாம் மரியாதையுடன் நினைவு கூர்வோம். சவால்களை முறியடித்து நாளைய விடியலுக்காக சுபீட்சமான நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

## பயங்கரவாத...

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (03) நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்டவர்கள் ஊடக சந்திப்பினை நடத்தினர். இதன் போது முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி தலைவர் கி.சேயோன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டு கையெழுத்துப் போராட்டத்தினை தொடக்கி வைத்துள்ளார்கள்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை நீக்கக்கோரிய கையெழுத்துப் போராட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன்,

இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மிகமோசமான சட்டமாக இருக்கின்றது. 6 மாத காலத்திற்கு தற்காலிக சட்டமாக கொண்டு வரப்பட்டது 42 ஆண்டுகளாக இருக்கின்றது. விசேடமாக தமிழ் இளைஞர்களை நசுக்குகின்ற ஒடுக்கி ஆழ்கின்ற சட்டமாக சர்வதேச விழுமியங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளி செயற்படும் சட்டமாக இருக்கின்றது.

அது நீக்கப்படும் என்று இலங்கை அரசு தெளிவாக சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி கொடுத்துள்ளது. அவ்வாறு நீக்குவதற்கான முயற்சியும் சென்ற அரசாங்க காலத்தில் இடம்பெற்றுள்ளது. அது முழுமைபெறவில்லை ஆனால், தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தினை சீர்திருத்துகின்றோம் என்று சொல்லி எந்தவித உப்புச்சப்பில்லாத ஒரு சீர்திருத்தமாக அறிவிக்கப்படுகின்ற ஒரு வர்த்தமானி பிரசுரம் வந்துள்ளது.

அது நடைமுறையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அமுலில் எந்த மாற்றத்தினையும் செய்யப்போவதில்லை. ஆகவே, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு விசேடமாக ஐரோப்பிய ஒன்றியத்தினை ஏமாற்றுவதற்கு என்றும் எதிர்வரும் 28ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கின்றது.

அவர்களையும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் இது செய்யப்படுகின்றது. அவர்கள் எல்லோருக்கும் விளக்கமாக விடயங்களை அறிவித்துள்ளோம்.

இந்த தருணத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தினை நீக்குவோம் என்று அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். அந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்படவேண்டும். அந்த தடுப்புச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்படவேண்டும் என்று எங்கள் மக்கள் நேரடியாகவே கையெழுத்திட்டு கோருகின்ற ஆவணத்தினை கையெழுத்திட்டு இன்று ஆரம்பித்து வைக்கின்றோம். இது எட்டு மாவட்டங்களிலும் மக்களிடத்தில் வீடு வீடாக சென்று வீதி வீதியாக சென்று மக்களின் கையெழுத்து பெறும் பிரசார போராட்டமாக இன்று ஆரம்பித்து வைக்கின்றோம்.

தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி கையெழுத்து போராட்டத்தினை மக்களிடத்தில் முன் கொண்டு செல்லவுள்ளது.

யாழில் தற்போது நடைபெறுகின்ற மீனவர்களின் போராட்டத்தினை கருத்தில் கொண்டு, அந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவு வந்த பின்னர் கையெழுத்து போராட்டத்தினை முழு வீச்சாக செயற்படுத்துவோம் என்றும் பயங்கரவாத தடுப்பு சட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்து தெரிவித்துள்ளார்.

கையெழுத்து பிரசாரத்துக்காக வழங்கப்பட்டுள்ள துண்டுபிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்புச் சட்டமே (தற்காலிகமாக) எமது சட்டப்புத்தகங்களில் காணப்படும் மிகக்கொடூரமான சட்டமாக தற்போதும் சட்டப்புத்தகங்களில் காணப்படுகின்றது.

1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் அதன் தலைப்பில் தெரிவிப்பதுபோல தற்காலிகமாக 6 மாத காலத்திற்கு மட்டும் செல்லுபடியாக வேண்டியது 42 ஆண்டு காலங்கள் நீடித்து அநீதியை விளைவித்தும் அநேகருக்கு துன்பத்தினையும் கஷ்டத்தினையுமே வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தின் விதிகள் நமது குற்றவியல் சட்டத்தின் அடிப்படை மூலாதாரங்களுக்கு எதிரான திசையில் இயங்குகின்றன. உண்மையில் விசாரணை நிலுவையில் உள்ள குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் குற்றமற்றவர் என்ற அனுமானமும்கூட எமது சட்டம் பொலிஸாருக்கு வழங்கப்படும் எந்த வாக்குமூலத்தையும் கண்டுகொள்வதில்லை. இது நீதிமன்றத்தினால் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் மாத்திரமே விதிவிலக்காக ஒரு உதவிக் காவல் அத்தியட்சகர் பதவிக்கு குறையாத ஒரு பொலிஸ் அதிகாரியிடம் வழங்கப்படும் வாக்குமூலம் குற்ற ஒப்புதலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இருந்தபோதிலும், அது ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படும் இந்த விதி மட்டுமே பல தவறான தீர்ப்புகளுக்கு வழிவகுத்தது மட்டுமல்லாது, பொலிஸ் விசாரணை திறமை மழுங்கடித்தது என்பதனை சொல்ல தேவையில்லை.

உண்மையான குற்றவாளி இன்னும் சுதந்திரமாக இருக்கும் அதேவேளையில் ஒரு குறிப்பிட்ட குற்றம் தீர்க்கப்பட்டுவிட்டதாக கூறுவதற்கு ஒரு தீர்ப்பினை வலுவாக்க ஒப்புதல் வாக்குமூலம் வழங்கப்படுவதே போதுமானது என்பதாலும் இது எதிர்விளைவாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் வாக்கு மூலங்கள் தடுப்பு காவல் மற்றும் பிணை இல்லாமல் காவலில் வைப்பதற்கான விதிகள் ஆகியவை பொலிஸ் சித்திரவதை நிகழ்வுகளை அதிகரிக்கச் செய்துள்ளது.

இக்காலகட்டத்தில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் தொர்பாக பிரசுரிக்கப்பட்ட தீர்ப்புகளை அவதானித்தால் இதனை கண்டுகொள்ளமுடியும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தர நிலைகளுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டுவருவதற்கு இலங்கை உறுதியளித்திருந்தது.

2018இல் ஒரு சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டபோது அது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இருப்பினும் பயங்கரவாத தடைச்சட்டத்தை சீர்திருத்தம் செய்வதற்காக 2022ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி அதன் திருத்தத்துக்கான சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முன்மொழியப்பட்ட திருத்தம் நடைமுறையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அமுலாக்கங்களிலும் அதைத்தொடர்ந்து வரும் கடுமையான விளைவுகளிலும் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

இந்த பின்னணியில் நாம் பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதற்காக தாம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க வலியுறுத்தி சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என துண்டு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிகண்டி மீனவர்...

மாய்க்க முற்பட்ட நிலையில், சக மீனவர்களினால் காப்பாற்றப்பட்டுள்ளார். எனினும், அவரது மீன்பிடி படகு தீயில் முற்றாக எரிந்து நாசமாகியது.

பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் முன்பாக நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வடமராட்சி கடற்பரப்புக்குள் கடந்த வாரம் அத்துமீறிய இந்திய மீனவர்கள், வடமராட்சி மீனவர்களின் வலைகளை அறுத்து நாசப்படுத்தியிருந்தனர்.

அதனால் பாதிக்கப்பட்ட உள்ளூர் மீனவர்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தனது மீன்பிடி வலைகளை இழந்திருந்த பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளி ஒருவர் நேற்று முற்பகல் தனது படகுக்கு தீவைத்ததுடன் தனது உயிரையும் மாய்க்க முற்பட்டார். எனினும் அவரை சக மீனவர்கள் பாதுகாத்தனர்.

## சுதந்திரம் இல்லாமல்...

இலங்கை சுதந்திரமடைந்ததாக கூறப்படுகின்ற காலப்பகுதியில் இருந்து 74ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள் தலைநகரிலேயும் வேறுபல இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மக்கள் உணவில்லாமல் பட்டினியை எதிர்நோக்கியுள்ள இந்தக் காலகட்டத்திலே கடந்த சில நாட்களாக கொழும்பிலே ஜெட் விமானங்கள் பறந்து திரிந்து நாளைய அணிவகுப்பிற்கு எண்ணெயை விரயமாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

விமர்சையாக சுதந்திர தினத்தை கொண்டாட இருக்கின்றார்கள். தமிழ் மக்களை பொறுத்த வரையிலே ஆரம்பத்திலிருந்தே மேற்கு ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கைக்கு கொடுத்ததாக சொல்லப்படுகின்ற சுதந்திரம் எங்களுக்கு கிடைக்கவில்லை. இந்த நாட்டிலே எண்ணிக்கையிலே பெரும்பான்மையாக இருப்பவர்கள்தான் ஜனநாயம் என்ற போர்வையிலே இந்த நாட்டை ஆண்டுவருகின்றார்கள்.

பெரும்பான்மை ஆட்சி ஜனாதிபதியின் சிறப்பியல்பு என்ற கூறினாலும் அது பேரினவாத ஆட்சியாக மாறுகின்றபோது அது ஜனநாயகத்தின் பண்பியல்புகளை இழந்துவிடுகின்றது. அவ்வாறான ஆட்சியொன்றைத்தான் 1948ஆம் ஆண்டிலிருந்தே நாங்கள் எதிர்கொண்டுள்ளோம். அதனால்தான் காலத்திற்கு காலம் நாங்கள் இந்த ஆட்சிமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும், அரச அதிகாரங்கள் அனைத்து மக்களோடும் சமமாக பங்கிடப்படவேண்டும், அதற்கான ஒழுங்குமுறை செய்யப்பட வேண்டும், சமஷ்டி முறையில்தான் அது செய்யப்பட முடியும் என்ற எங்களுடைய கோரிக்கையை முன்வைத்து 1956ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அந்த சமஷ்டி கோரிக்கைக்கு முறையாக மக்கள் ஆணையைதான் தொடர்ச்சியாக எங்கள் மக்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் ஜனநாயக ரீதியாக மக்கள் கொடுக்கின்ற அந்த தீர்ப்புகளை புறந்தள்ளி வெறுமனே ஒற்றையாட்சி முறையின் கீழே பெரும்பான்மை ஆட்சியின் மூலம் எங்களுடைய மக்களுடைய உரிமைகளை நசுக்குகின்ற, ஒடுக்குகின்ற, அடக்கியாளுகின்ற ஒரு முறைமையிலே தொடர்ந்து மாறிமாறி வந்திருக்கின்ற அரசாங்கங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த 74ஆவது சுதந்திர வருடத்திற்குள்ளே இலங்கை காலடி எடுத்துவைக்கின்ற என்று சொல்லப்படுகின்ற அதே தினத்திலே எங்களுக்கு இந்த சுதந்திரத்திலே எந்தப்பங்கும் இல்லை தொடர்ச்சியாக எங்கள் சுதந்திரங்கள், உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாக பறிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. எங்களுடைய நிலங்கள் மிக மோசமான நிலையிலே துரிதமான முறையிலே பறிக்கப்படுகின்றன.

நாங்கள் இந்த நாட்டிலே வாழ்கின்ற ஓர் மக்கள். சர்வதேச சட்டத்தின் கீழே மக்கள் என்று அழைக்கப்படக்கூடியவர்கள். அப்படியான மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. தங்களுடைய சரித்திர வாழ்விடங்களிலே தங்களை தாங்களே ஆழ்கின்ற கட்டமைப்பை பெற்றுக்கொள்வதற்கான உரித்து உண்டு. அதை இல்லாது பண்ணுவதற்காக எங்களுடைய சரித்திர வாழ்விடங்களை மாற்றியமைக்கின்ற செயற்பாடு ஆரம்பகாலத்திலிருந்து நடந்துவந்தாலும் கடந்த சில வருடங்களாக துரிதப்படுத்தப்பட்டு மிகவும் வேகமான முறையிலே அமுல்படுத்தப்படுகின்றது. அதற்கு உதவியாக பல திணைக்களங்கள், தொல்லியல் திணைக்களம், மகாவலி, வனவள பாதுளகாப்பு, வன ஜீவராசிகள் என்று பலவிதமான திணைக்களங்கள் அதனுடைய விசேட சட்டங்களையும் பிரயோகிக்கின்றார்கள்.

திட்டமிட்ட உடனடியான சிங்கள குடியேற்றங்களுக்கு மேலதிகமாக இப்படியான ஒரு செயல்முறையினையும் அரசாங்கம் பிரயோகித்து வருகின்றது. இப்பொழுது தொல்லியல் திணைக்களம் இதிலே ஈடுபடுகின்றபோது புத்த சமயத்தை ஒட்டிய சின்னங்களை கண்டுபிடிப்பதாக பல இடங்களிலே வடக்கிலும் கிழக்கிலும் பாரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். அதன் பிரதிபலனாக எங்களுடைய மக்கள் தங்களுடைய வழிபாட்டு உரிமைகளை இழந்து நிற்கின்றார்கள். பல இடங்களில் இதனைக் காணக்கூடியதாக உள்ளது.

வெடுக்குநாறி மலையிலே அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றது. குருந்தூர் மலையிலே ஒரு வருடத்திற்கு முன்னர் நீண்டகாலமாக வழிபட்டுவந்த இடத்திலே எங்கள் மக்கள் வழிபடாமல் தடுக்கப்பட்டுள்ளனர். ஆகவே, எங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. நாங்கள் சுதந்திரம் இல்லாத நாட்டிலே வாழ்கின்றோம் என்பதை பெப்ரவரி 04ஆம் திகதியே உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற ஒரு நடவடிக்கையாக குருந்தூர் மலைக்கு அதிகாலையிலே செல்லவிருக்கின்றோம்.

இது சம்பந்தமான வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்றது. எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரன், நிர்மலநாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் மூவரும் இதிலே மனுதாரர்கள். நான் அந்த வழக்கிலே ஆஜராகின்றேன். அந்த வழக்கிலே பிரதிவாதியாக குறிக்கப்பட்டுள்ளவர்கள் நீதிமன்றத்திலே வந்து நாங்கள் அங்கே செல்வதற்கு தடையேதும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். ஆகையினாலே தடையேதும் இல்லையென்றால், அங்கே செல்லவிருக்கின்றோம். செல்லுவதை யாராவது தடுத்தால் அதை அந்த நேரத்திலே நாங்கள் எதிர்கொள்வோம். காலையிலே நாங்கள் சேர்ந்து அந்த இடத்திற்கு செல்வதாக, கடந்த 29ஆம் திகதி கிளிநொச்சியிலே பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் சேர்ந்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தினர் நடத்திய கூட்டத்திலே தீர்மானம் எடுத்தோம். அதனைத் தொடர்ந்து நான் பத்திரிகையாளர் மாநாட்டிலே சொல்லுகின்றபோது நான் இந்த விபரங்களை கூறவில்லை. ஆனால், திடீர் திடீரென சில விடயங்களை அறிவிப்போம். அதற்கான காரணங்கள் உண்டு என்று நான் சொல்லியிருந்தேன்.

அதனைத் தொடர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 30ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்ற போது இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டு தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவும் இதிலே இணைந்து கொள்வதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனவே அனைவரும் சேர்ந்து இன்று இந்த செயற்பாட்டிலே ஈடுபடுவோம் என்று அழைப்புவிடுக்கின்றேன்.

இது நாங்கள் இப்போது அறிவித்தாலும் இதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்திலே வேறு ஒரு அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது. காலை 10.00 மணிக்கு பின்னதாக முள்ளிவாய்க்காலிலே ஒரு எதிர்ப்பு போராட்டம் ஒன்று செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களோடும் நாங்கள் இணைந்துகொள்வோம். நாங்கள் மலைக்கு சென்று வந்து அவர்களோடு சேர்ந்துவிடுவோம். அவர்களும் காலையிலே எங்களோடு வருகைதந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்று நம்புகின்றோம். நாங்கள் ஒன்றாக சேர்ந்து இந்த இரண்டு நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்காக இருக்கின்றோம்.


திகதி 02.02.2022
புதன்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4663
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,010,100.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 8 0 9 4 3 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,858,956.00

கொவிசெத (Govisetha)
சீட்டிழுப்பு இலக்கம் : 2961
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,271,420.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 32 34 36 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,564,015.20

Mega POWER மெகா பவர் — கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1014 — ரூ. 4,194,220.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 207,814,970.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
X 07 01 72 78 79
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 03754

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 696
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,718,220.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 04 06 51 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,246,434.40

ஹந்தஹன — ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0007
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,957,780.00
இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 04 05 39 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,549,315.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1205
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,170,320.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 7 3 0 0 4 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,026,248.00

தேசிய லொத்தர் சபை — National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# கடற்றொழில் அமைச்சருடனான பேச்சில் முடிவில்லை; யாழில் தொடர்கிறது மீனவர்கள் போராட்டம்!




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று மீனவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டக்களத்திற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகைதந்ததால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

இதன்போது இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்தியப் படகுகளை நிரந்தரமாக தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவை எழுத்துமூலமாக தர வேண்டும் என மீனவர்களால் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எழுத்துமூலமான உத்தரவாதம் தர முடியாதெனவும் தான் வாய்மூலமாகவே உத்தரவாதத்தையே தர முடியும் என கூறியதை அடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

பின்னர் போராட்ட களத்தில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியேறிய நிலையிலும் மீனவர்கள் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

வீடியோவைக் காண...

# சுப்பர்மடத்தில் மீனவர்களின் வீதிமறியல் போராட்டத்துக்கு சிறிதரன் எம்.பி. ஆதரவு




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் முன்னெடுத்துள்ள வீதி மறியல் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வருகைதந்து ஆதரவளித்துள்ளார்.

இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும் வத்திராயன் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட 2 மீனவர்களுக்கு நீதி கோரியும் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இந்தப் போராட்டத்திற்கு பல தரப்பினரும் தங்களது ஆதரவை அளித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் போராட்டத்திற்கு நேற்று முன்தினம் இரவு(2) வருகைதந்து ஆதரவளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து வடக்கில் தொடரும் போராட்டம்

## யாழில்....








## மாதகலில்.....






# வடக்கில் ஆரம்பமாகியுள்ள ஒரு இலட்சம் வேலைத்திட்டம்

## வவுனியா பண்டாரிகுளத்தில்..





## மன்னார் கீரி கிராமத்தில்...





## மன்னார் வேட்டையார்முறிப்பு கிராமத்தில்...





## தென்மராட்சியில்....




## யாழில்....




# ஊர்காவற்றுறை கர்ப்பிணிப்பெண் கொலை; ஐந்து வருடங்களின் பின் சந்தேகநபர் கைது!

(யாழ். நிருபர்)

ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண்ணொருவரை அடித்து படுகொலைசெய்து நகைகளை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 15ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) எனும் 7 மாத கர்ப்பிணியான பெண் அடித்துக் கொலை செய்யப்பட்டு அவரது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

அது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவந்த நிலையில், ஐந்து வருடங்களின் பின்னர் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் கொலை நடந்த அன்றைய தினமே சகோதரர்கள் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 17 மாத காலம் அவர்கள் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்படிருந்த நிலையில் மேல் நீதிமன்ற உத்தரவில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் சேதனப் பசளையில் நெற்செய்கைக்கான வயல்விழா




(வவுனியா நிருபர்)

சேதனப் பசளை நெற்செய்கையில், “2022ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்திற்கான பயணம்” எனும் தொனிப்பொருளில் வயல்விழா நேற்று வவுனியா முருகனூர் விவசாயப் பண்ணையில் இடம்பெற்றது.

வட மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமாரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்த குறித்த நிகழ்வில் மண்புழு உரம், அசோலா தாவரம், கூட்டெரு மற்றும் ஏனைய இயற்கை உரத்தில் செய்கைபண்ணப்பட்ட நெற்செய்கை வயல்கள் விவசாயிகளின் பார்வைக்காக விடப்பட்டிருந்ததுடன், விளக்கமும் வழங்கப்பட்டது.

இதேவேளை, பாரம்பரிய முறையிலான பாடல்பாடி அறுவடைசெய்யும் முறைமையும் காட்சிப்படுத்தப்பட்டதுடன் சேதனப் பசளையில் உற்பத்தி செய்யப்பட்ட வயல் நிலத்தில் அறுவடையும் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டிருந்ததுடன், விவசாயிகளும் கலந்துகொண்டு பயன்பெற்றிருந்தனர்.

# டொலர் நெருக்கடிக்கு முடிவு கிடைக்கும்போது பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு கிடைக்கும்

## அரசாங்கத் தரப்பு அறிவிப்பு

டொலர் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும்போது, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்றும் மின் உற்பத்தியை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக முன்னெக்கப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தக் கூடாது என்று அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மின் பிறப்பாக்கிகளை திருத்தி ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் தேவையான மின்சாரத்தை பெற்றுக்கொடுக்க நாங்கள் முயற்சிக்கிறோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தை விரைவாக புனரமைத்து வழமைக்கு திருப்ப நடவடிக்கை எடுத்து வருகிறோம். மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மசகு எண்ணெய் கிடைக்குமாக இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மறுபுறம், டொலர் நெருக்கடியும் இந்த பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. டொலர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்போது, தற்போது நாட்டிலுள்ள சகல பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பிரச்சினையொன்றுக்கு தற்போது தீர்வு கிடைத்துள்ளது. நிலக்கரி மின் உற்பத்தி நிலையமொன்று செயலிழந்திருந்தது. அந்த மின் உற்பத்தி நிலையம் தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதனூடாக, 300 மெகாவோட் மின்சாரத்தை மின் கட்டமைப்புக்கு இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே நேற்று (03) தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்தது, எண்ணெய் பிரச்சினை பாரிய நெருக்கடியாக இருந்தது. அந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணும் வகையில் தேவையான எண்ணெய்யை பெற்றுக்கொடுக்க எரிபொருள் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது. துறைமுகத்திலிருந்து எண்ணெய் விநியோகிக்கும் சுரங்கப் பாதையில் தற்போது பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அந்தப் பெற்றோல் தொகையை அகற்ற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. அதுதொடர்பில் எரிபொருள் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அந்நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் மின் உற்பத்திக்கு தேவையான மசகு எண்ணெய் மற்றும் டீசல் என்பன கிடைக்கப்பெறும். எனவே, அதனூடாக எமது கட்டமைப்புக்கு தேவையான மின்சாரத்தை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். அதேபோன்று ஜப்பான் நிறுவனமொன்றினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பராமரிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அந்த நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், மகாவலி நீர்தேக்கத்திலிருந்து ஏனைய நாட்களை போன்று நீரை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்த அனைத்து கட்டமைப்புகளும் சீராக்கப்படும் போது எமக்கு தேவையான மின்சாரத்தை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என நம்புகிறோம்.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலும் விலை மனு கோரலினூடாக மின் உற்பத்தியை பெற்றுக்கொள்ள அனுமதி கிடைத்துள்ளது என்றார்.



வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் (02) அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

# சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கும் வீதம் அதிகரிப்பு

## தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் நிலைமை தீவிரமாகலாம் என்கிறார் மருத்துவர் தீபால் பெரேரா

(நா.தினுஷா)

"நாட்டில் கடந்த நான்கு ஆண்டில் சிறுவர்கள் மத்தியில் புற்றுநோயின் தாக்கத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது ஆபத்தான நிலையாகும். இதனை தடுக்கவேண்டி நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே முன்னெடுக்க வேண்டும். அதற்கமைய வருடாந்தம் சிறுவர்கள் மத்தியில் 700 தொடக்கம் 750 வரையான புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்."

இவ்வாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா நேற்று (03) "தமிழன் " நாளிதழுக்கு தெரிவித்தார்.

சிறுவர் மத்தியில் காணப்படும் புற்றுநோய் நிலைமை தொடர்பில் வினவியபோதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடாந்தம் 700 - 750 வரையிலான சிறுவர்கள் புற்று நோயினால் பாதிக்கப்படுகின்றனர். சிறுவர்கள் புற்று நோயினால் பாதிப்படையும் வீதம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. நான்கு வருடங்களுக்கு முன்னர் 500ஆக இருந்த புற்றுநோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மறுபுறம் 20 வயதுக்கு மேற்பட்டவர்களும் புற்று நோயினால் பாதிப்படைந்துள்ளார்கள்.

சிறுவர்களுக்கு முறையாக தாய்ப்பால் கொடுக்காமை, கண்களிலுள்ள வெள்ளை படலங்களை நீக்காமை உள்ளிட்ட காரணங்களின் காரணமாகவே, சிறுவர்கள் மத்தியில் புற்றுநோய் அதிகரித்து வருகின்றது. ஆகவே, சிறுவர்கள் புற்றுநோயினால் பாதிக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின், குறைந்தது 6 மாத காலப்பகுதிக்காவது குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அதனூடாக சிறுவர்களுக்கு ஏற்படும் புற்றுநோய் மாத்திரமின்றி, பெண்களுக்கு ஏற்படும் இரத்தப் புற்றையும் தவிர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதேபோன்று, சிறுவர்கள் மத்தியில் காணப்படும் கண்களில் ஏற்படும் வெள்ளைப் படலங்கள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும். உடனடியாக அந்த வெள்ளைப்படலத்தை நீக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அதுவும் சிறுவர்கள் மத்தியில் புற்றுநோயை தோற்றுவிக்கும். இந்த வெள்ளைப்படலத்தினால் ரெட்டினோபிளாஸ்டோமா என்றழைக்கப்படும் புற்றுநோய் உருவாகும் சாத்தியம் காணப்படுகின்றது. இந்த நோய் நிலைமையை விரைவாக அடையாளங்கண்டால் விரைவாக சிகிச்சையளிக்க முடியும்.

சீனி, இனிப்பு சுவைகொண்ட உணவு வகைகள், அதிக எண்ணெய் தன்மை கொண்ட துரித உணவுகளை சிறுவர்கள் அதிகம் உட்கொள்கிறார்கள். இவ்வாறு துரித உணவுகளை அதிகளவில் உட்கொள்வதால்



உடல் பருமன் அதிகரிக்கிறது. ஆனால், அதற்கு தகுந்த உடற்பயிற்சிகள் கிடைக்கப் பெறுவதில்லை. இதன் காரணமாகவும் புற்று நோய்கள் அதிகரிக்கின்றன.

சிகரெட், மதுபானம், வெற்றிலை உட்கொள்ளுதல் ஆகியவற்றால் ஆண்களின் மத்தியிலும் புற்றுநோய் அதிகரித்து வருகின்றது. வெற்றிலை உட்கொள்வதால் வாய்ப்புற்று அதிகரித்துள்ளது. சிகரெட் புகைப்பதால் வாய்ப்பகுதி முதற்கொண்டு சகல உடற்பாகங்களிலும் புற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. சிகரெட் பிடிப்பவர்கள் மாத்திரமின்றி அவர்களின் அருகிலுள்ளவர்களுக்கும் புற்று ஏற்படுவதற்கான அதிக வாய்ப்பு இருக்கிறது. மதுபானம் அருந்துவதால் நுரையீரல் புற்று ஏற்படுகின்றது. மரக்கறிவகைகள், பழங்களை உட்கொள்வதை அதிகரிப்பதை போன்று உடற்பயிற்சியையும் ஊக்குவிக்க வேண்டியது அவசியமாக காணப்படுகின்றது.

அறிகுறிகள் தென்படும்போது அதனை முறையாக அடையாளங்கண்டுகொண்டால் சரியான சிகிச்சைகளை வழங்க முடியும். பல்வேறு புற்றுநோய் வகைகள் காணப்படுகின்றன. அதேபோன்று சிறுவர்கள் மத்தியில் எலும்பு சார்ந்த புற்றுநோய்களும் அதிகரித்துள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் புற்று நோய்களுக்கான சிகிச்சைகளை எடுத்துக்கொள்ளும்போது அதனை முறையாக பின்பற்ற வேண்டும். அதனூடாகவே புற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள கூடியதாக இருக்கும்.

மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், தலை மற்றும் கழுத்து சார்ந்த புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் போன்ற தடுக்கக் கூடிய புற்று நோய்கள் காணப்படுகின்றன. இவற்றை கையாள்வதற்கு வழிவகைகள் எம்மிடமே இருக்கின்றன. ஹெபடைடிஸ் பி (Hepatitis B Vaccine) என்றழைக்கப்படும் தடுப்பூசியினூடாகவும் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

11 வயதுக்கு மேற்பட்ட பெண் சிறுவர்களுக்கு வழங்கப்படும் பப்பிலோமா (Papillomavirus) வைரஸுக்காக வழங்கப்படும் தடுப்பூசியினூடாக (HPV) கர்ப்பப்பை வாய் புற்றை தடுக்கக் கூடியதாக இருக்கும். எனவே புற்று நோய்களின் அறிகுறிகளை சரியாக இனங்கண்டு அவற்றுக்கு ஆரம்பக்கட்ட சிகிச்சைகளை வழங்க வேண்டியது அவசியமாக காணப்படுகின்றது என்றார்.

# மலையகப் பகுதிகளில் காடுகளுக்கு தீ மூட்டல் அதிகரிப்பு; வட்டவளை - கினிகத்தேனையில் 50 ஏக்கர் எரிந்து நாசம்



(இரா.யோகேசன்)

வட்டவளை மற்றும் கினிகத்தேனை பகுதிகளில் இனந்தெரியாதோர்களினால் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவம் தற்போது அதிகரித்துள்ளது.

கினிகத்தேனை பிரதேசத்தின் கடவளை தொடக்கம் தியகல வரையுள்ள சுமார் பல ஏக்கருக்குட்பட்ட பகுதிகளுக்கு வைக்கப்பட்ட தீயானது, நேற்றுமுன்தினம் (02) மாலை வரை பற்றி எரிந்துக் கொண்டிருந்தது. இதன்போது சுமார் 50 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதிகளிலுள்ள காடுகள் நாசமடைந்துள்ளன.

அதுபோல் வட்டவளை மௌன்ஜீன் தோட்டப் பகுதியிலுள்ள பற்றைக்காடுகளுக்கும் இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயினால் அப்பகுதியிலுள்ள சுமார் 10 ஏக்கருக்கு மேற்பட்ட பற்றைக்காடுகளும் எரிந்து நாசமடைந்துள்ளன.

மலையகத்தில் தற்போது வறட்சியான காலநிலை நிலவுகின்றது. இதனைப் பயன்படுத்திக்கொண்டு காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு பற்றைக்காடுகளுக்கு தீ வைப்பதினால் அப்பகுதிகளில் வாழும் உயிரினங்கள் மற்றும் பூச்சியினங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கவலைத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மலையகத்தில் தற்போது வறட்சியான காலநிலை நிலவுவதால் நீர்நிலைகளிலுள்ள நீர் வற்றிக்கொண்டு செல்வதுடன் அணைக்கட்டுகளின் நீர் மட்டமும் குறைவடைந்து செல்கின்றது. இவ்வகையான பாதிப்புகள் இருக்கின்றபோது சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தும்வகையில், தீ செயல்களை மேற்கொள்ளுமிடத்து அது எமக்கே பாதிப்பினை ஏற்படுத்தும் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

# மலேஷியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பதவியேற்பு



மலேஷியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள எயார் சீஃப் மார்ஷல் சுமங்கல டயஸ் அண்மையில் கோலாலம்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

உயர்ஸ்தானிகராலயத்தின் ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட எளிமையான வைபவத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட உயர்ஸ்தானிகர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். மத அனுஷ்டானங்களைத் தொடர்ந்து, கோலாலம்பூரில் உள்ள இரண்டு முக்கிய இலங்கை பௌத்த விகாரைகளின் தலைமை மதகுருமார்கள் பின்னணியில் பிரித் ஓதுகையில், உயர்ஸ்தானிகர் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இலங்கையின் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் வகையில், பால் பொங்குதல் நடைபெற்றதுடன், அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மங்கல விளக்கை ஏற்றி, பாற்சோறு மற்றும் ஏனைய இலங்கை உணவு வகைகள் தூதரக ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. தூதரக ஊழியர்களிடம் உரையாற்றிய உயர்ஸ்தானிகர், மலேஷியாவில் இலங்கையின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான தனக்கு வழங்கப்பட்ட ஆணைக்காக ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டு அமைச்சர் மற்றும் வெளியுறவுச் செயலாளர் ஆகியோருக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால நட்புறவுகளை நினைவுகூர்ந்த உயர்ஸ்தானிகர், இலங்கைக்கும் மலேஷியாவுக்கும் இடையிலான பொருளாதார, அரசியல் மற்றும் மக்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் தனது முன்னுரிமைகளையும் எதிர்பார்ப்புகளையும் சுட்டிக் காட்டினார். எமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கைக்கு உதவுவதற்காக, முதலீடுகளை ஈர்ப்பதற்கும், இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கும், இலங்கையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கும் புதிய மற்றும் புதுமையான வழிகளைக் கண்டறிய முயற்சிப்பதற்கான உயர்ஸ்தானிகராலயத்தின் கடமையை அவர் குறிப்பாக வலியுறுத்தினார்.

உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட எயார் சீஃப் மார்ஷல் சுமங்கல டயஸ் இலங்கை விமானப்படையின் 17ஆவது தளபதியாக செயற்பட்டவராவார்.

# சிறுமி துஷ்பிரயோகம்; இராணுவ சிப்பாய் கைது

(கெலும் குணதிலக்க)

மொனராகலை, மஹகளுகொல்ல பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 13 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று (03) மஹகளுகொல்ல பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இராணுவ சிப்பாய் இந்த சிறுமியுடன் காதல் தொடர்பை பேணி வந்துள்ளதுடன், கடந்த 02ஆம் திகதி இடம்பெற்ற தான நிகழ்வொன்றில் சிறுமி கலந்துகொண்டுள்ளார். அதன்போது சந்தேகநபரினால் சிறுமி அருகிலுள்ள வீடொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுமி மற்றும் அவரது பெற்றோர் மஹகளுகொல்ல பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அதனையடுத்து, சந்தேகநபரான இராணுவ சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார். 20 வயது இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரை சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய பிரிவில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மஹகளுகொல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புத்திக்க விதானகமகேவின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# குருநாகலில் புதிய மூன்று மாடி பிரதேச சபைக் கட்டடம் திறந்து வைப்பு






குருநாகலில் புதிய மூன்று மாடி பிரதேச சபைக் கட்டிடத்தின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் (02) நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

மாகாண சபைகள் அமைச்சின் புரநெகும திட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிதியை பயன்படுத்தி இந்த புதிய மூன்று மாடி பிரதேச சபை கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்காக 215 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் 2019 இன் பிற்பகுதியில் நாட்டப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக, உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த புதிய மூன்று மாடிக் கட்டிடத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது.

புதிய பிரதேச சபைக் கட்டிடத்தின்கீழ் மாடியில் சரப், பொது சுகாதார அலுவலகம், களஞ்சியசாலை காப்பகம், உணவகம் மற்றும் உடற்பயிற்சி நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முதல் மாடியில் தொழில்நுட்பப் பிரிவு, நிறுவன பிரிவு, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு, வருவாய் மேம்பாட்டுப் பிரிவு, அச்சகப் பிரிவு, தலைவர் அலுவலகம் போன்றவையும் இரண்டாம் மாடியில் கேட்போர்கூடம் மற்றும் கூட்ட மண்டபம் என்பன கட்டப்பட்டுள்ளன.

பிரதேச சபைக்குட்பட்ட கிராமப்புற வீதிகள் அபிவிருத்தி, தெருவிளக்கு பராமரிப்பு, மதிப்பீட்டு வரி அறவீடு, பிரதேசத்தில் குப்பைகளை அகற்றல், கட்டிடங்கள் அமைப்பதற்கான திட்டங்களுக்கு அங்கீகாரம், பிரதேசத்தில் உள்ள வறிய மக்களின் முன்னேற்றத்திற்கு உதவி, குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு. நூலக வசதிகளை வழங்குதல், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல், வர்த்தக நிறுவனங்களைப் பதிவு செய்தல், தகனம் செய்வதற்கான வசதி அளித்தல், முச்சக்கரவண்டி சங்கங்களைப் பதிவு செய்தல், கிராமிய பாடசாலை அபிவிருத்தி போன்றவை பிரதேச சபைகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிகழ்வில் பொதுநிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனும் கலந்து கொண்டார்.

## வாகனங்களால் நடைபாதைகளுக்கு சேதம்!

# எச்சரிக்கை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

(ஜூட் சமந்த)

நடைபாதைகளில் வாகனங்களை நிறுத்துதல், பொருட்களை இறக்குதல் மற்றும் ஏற்றுதல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பில் உடனடியாக தேடிபார்த்து நடவடிக்கை எடுக்கமாறு பொலிஸ் மா அதிபரினால் நாடுபூராகவுமுள்ள சகல பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரினால் சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கீழ்காணும்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் பாரிய நிதி செலவிடப்பட்டு வீதி கட்டமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பொதுமக்கள் பயணிப்பதற்காக வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகளில் வாகனங்களை நிறுததுதல், பொருட்களை இறக்குதல் மற்றும் ஏற்றுதல் ஆகிய செயற்பாடுகளின் காரணமாக பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.

அதேபோன்று இதனால் நடைபாதைக்கு சேதம் ஏற்படுவதையும் அவதானிக்கக்கூடிய தாகவுள்ளது. இந்த நிலைமையை நிர்வகிப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதற்கமைய, எதிர்வரும் இருவாரங்களில் நடைபாதைகளில் வாகனங்களை நிறுத்துவது, பொருட்களை ஏற்றும் இறக்கும் நபர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட வேணடும். எச்சரிக்கையை மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எச்சரிக்கையை மீறு நபர்களுக்கு எதிராக மோட்டார் வாகன கட்டளைச் சட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், தண்டனை சட்ட கோவை மற்றும் பொதுச் சொத்து சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டு மென பொலிஸ் மா அதிபரினால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மனிதாபிமான அடிப்படையில் ரஞ்சனுக்கு பூரண விடுதலை வழங்கப்பட வேணடும்

## அவ்வாறு இல்லாவிட்டால் ஜனநாயக ரீதியான போராட்டத்தை சந்திக்க நேரிடுமென சஜித் கருத்து




சுதந்திர தினத்தன்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மனிதாபிமான அடிப்படையில் பூரண விடுதலை செய்யப்பட வேண்டும் - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று (03) காலை சிறையிலுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேரில் சென்று சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒரு கலைஞராக, அவர் கலைத்துறைக்கு பெரும் சேவை ஆற்றிவந்தார். அவர் ஆற்றிய பொது சேவையை மேலும் வலுவாக முன்னெடுக்க அவரது கொடுப்பனவுகள், சம்பளம், சலுகைகள், வரப்பிரசாதங்கள் அனைத்தையும் பொதுச் சேவைக்கே அர்ப்பணித்த தலைவர் என்ற வகையில், நாளை அவர் முழுமையாக விடுதலை பெறுவார் என நம்புகிறோம்.

மனிதாபிமானத்திற்கு முன்னுரிமை அளித்து, மனிதாபிமான அடிப்படையில் பூரண விடுதலைக்காக அவரை நாளை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன். மனித நேயத்திற்காகவே இந்த பரிந்துரையை முன்வைக்கிறேன்.

அவ்வாறு விடுதலை செய்யவிட்டால் அவரின் விடுதலைக்கான ஜனநாயக ரீதியான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அவர் விடுதலையாகும் வரை அவரின் உரிமைகளை ஜனநாயக ரீதியாக பாதுகாக்கவும் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளா'

## கணவரை கொலைசெய்த மனைவி கைது

ஹொரணை, மல் பெரிகம வீடொன்றில் தம்பதியினருக்கிடையிர் இடம்பெற்ற முரண்பாட்டின் பின்னர், கணவர் தூக்கத்தில் இருக்கும்போது கழுத்தை இறுக்கி மனைவி கொலைசெய்துள்ளதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார். 30 வயதுடைய வசந்த குமார என்றழைக்கப்படும் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்ட நபர் தனது மனைவியுடன் தொடர்ந்து முரண்பட்டுள்ளதுடன், சம்பவ தினத்தன்றும் இருவருக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

முரண்பாட்டை அடுத்து அவர் நித்திரை கொண்டுள்ளார். கணவர் உறங்கியதும் குறித்த பெண் இவ்வாறு கொலை செய்துள்ளார். குறித்த பெண்ணின் பெற்றோர் குறித்த தம்பதியினரின் வீட்டுக்கு அருகில் இருந்தாலும், இந்த முரண்பாடு சமாதனமடையும் என்பதால் இந்தப் பிரச்சினையில் தலையிடவில்லை என பொலிஸ் அதிகாரிகள் குறிப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் பாணந்துறை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு அநுராதபுர மாவட்டத்தில் மரநடுகை வேலைத்திட்டம்

(அநுராதபுரம் நிருபர்)

74ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் (04) அநுராதபுரம் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மர நடுகை மற்றும் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

தேசிய நிகழ்வுக்கு ஒத்ததாக அநுராதபுர மாவட்டத்தின் மாவட்டமட்ட சுதந்திர தின நிகழ்வின் ஏற்பாடுகள் தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வழமையாக தேசிய நிகழ்வுக்கு ஒத்ததாக அரசாங்க அதிபர் அலுவலக வளாகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். ஆனால், இம்முறை அப்படியான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறாது.

அதற்குப் பதிலாக மாவட்டத்தின் 22 பிரதேச



செயலாளர் பிரிவுகளிலும் மரக்கன்றுகளை நடுதல் மற்றும் சிரமதானப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினமான இன்றைய தினம் அநுராதபுரம் கச்சேரி வளாகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பொன்விழா காணும் சிரேஷ்ட சட்டத்தரணி ஹம்ஸா!

## களுத்துறை நீதிமன்றத்தில் கௌரவிப்பு

(பேருவளை நிருபர்)

சீனன்கோட்டையின் சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் முஹம்மத் கரீம் முஹம்மத் ஹம்ஸா சட்டத்துறையில் ஐந்து தசாப்தங்களைபூர்த்திசெய்துள்ளார்.

இவரது சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு களுத்துறை சட்டத்தரணிகள் சங்க ஏற்பாட்டில் கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை களுத்துறை உயர் நீதிமன்ற கட்டட வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி.சிட்ரசிறி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

மேலும் களுத்துறை நீதிமன்ற நீதிபதிகள், களுத்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உட்பட உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் உட்பட முக்கிய பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் அவருக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1972ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்துள்ள இவர், தொடர்ந்தும் 50 வருடகாலமாக களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணி என்ற அடிப்படையில் சிறப்பாக பணிசெய்து மக்கள் மதிப்பினை பெற்றுள்ளார்.

பேருவளை மருதானையைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.எம்.ஹனபி, தர்காநகரைச் சேர்ந்துவரும் சீனன்கோட்டையில் வசிப்பவருமான சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் முஹம்மத் ஹம்ஸா ஆகியோர் சட்டத்துறையில் ஐம்பது வருடங்களைப் பூர்த்திசெய்துள்ள நிலையில் இன்று கௌரவிக்கப்படும் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஸி.எம்.ஹம்ஸாவும் இப்பட்டியலில் அடங்குகிறார்.

சட்டத்துறையில் பொன்விழாவைக் கொண்டாடும் எம்.ஸி.எம்.ஹம்ஸா அண்மையில் சட்டத்துறையில் 50 வருட விழாவைக் கொண்டாடிய தர்காநகர் முஹம்மத் ஹம்ஸாவின் மைத்துனர் என்பது குறிப்பிடத் தக்கது.

சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாக சபைத் தலைவரான எம்.ஸி.எம்.ஹம்ஸா, சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் உப தலைவருமாவார்.

சிறந்த வாதத் திறமையுள்ள இவர், களுத்துறை நீதிமன்றத்தில் புகழ்பெற்ற ஒரு சட்டத்தரணியாவார். இவர் சட்டத்துறையின் 50 வருடங்களை பூர்த்திசெய்து சீனன் கோட்டைக்கு புகழ் சேர்த்துள்ளார். பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற மர்ஹூம்களான வை.எல்.எம்.கரீம் - உம்மு மழீஹா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.





# தூதுவர் — உயர்ஸ்தானிகர்கள் பதவியேற்பு



**பாகிஸ்தான்**

கொழும்பை தளமாகக் கொண்ட இலங்கைக்கான பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகராக மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) உமர் ஃபாரூக் புர்கி, இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து கடந்த முதலாம் திகதி சமர்ப்பித்துள்ளார்.

**காம்பியா**

புதுடில்லியை தளமாகக் கொண்ட இலங்கைக்கான காம்பியா குடியரசின் உயர்ஸ்தானிகராக முஸ்தபா ஜவரா, இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் காம்பியா குடியரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து கடந்த முதலாம் திகதி கையளித்துள்ளார்.





**டென்மார்க்**

புது டில்லியை தளமாகக்கொண்ட இலங்கைக்கான டென்மார்க் இராச்சியத்தின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக ஃப்ரெடி ஸ்வேன் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் டென்மார்க் இராச்சியத்தின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து கடந்த முதலாம் திகதி மாலை 5 மணிக்கு சமர்ப்பித்துள்ளார்.

**ஐஸ்லாந்து**

புதுடில்லியை தளமாகக் கொண்ட இலங்கைக்கான ஐஸ்லாந்து குடியரசின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக குய்னி பிரகசொன் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் ஐஸ்லாந்து குடியரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து கடந்த முதலாம் திகதி கையளித்துள்ளார்.





**கசகஸ்தான்**

புதுடில்லியை தளமாகக்கொண்ட இலங்கைக்கான கசகஸ்தான் குடியரசின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக நூர்லன் ஜால்காஸ்பேவ் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் கசகஸ்தான் குடியரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கடந்த முதலாம் திகதி கையளித்துள்ளார்.

**ஒஸ்ட்ரியா**

புதுடில்லியை தளமாகக் கொண்ட இலங்கைக்கான ஒஸ்ட்ரியா குடியரசின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக திருமதி கத்தரினா வீசர், இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் ஒஸ்ட்ரியா குடியரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவ தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கடந்த முதலாம் திகதி சமர்ப்பித்துள்ளார்.





**பிலிப்பைன்ஸ்**

டாக்காவை தளமாகக்கொண்ட இலங்கைக்கான பிலிப்பைன்ஸ் குடியரசின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக ஆலன் டெனிகா, இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் பிலிப்பைன்ஸ் குடியரசின் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கடந்த முதலாம் திகதி கையளித்துள்ளார்.

# சண்முகா இந்துக் கல்லூரி சம்பவத்தைக் கண்டித்து கிண்ணியா - சம்மாந்துறையில் ஆர்ப்பாட்டம்







(கிண்ணியா, திருமலை, சம்மாந்துறை நிருபர்கள்)

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியைக்கு ஏற்பட்ட சம்பவத்துக்கு எதிராகவும் மனித உரிமைகள் மீறலுக்கு எதிராகவும் தமிழ் - முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்துமாறும் கோரி நேற்று (03) கிண்ணியா மற்றும் சம்மாந்துறையில் அதிபர், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை கிண்ணியா மற்றும் சம்மாந்துறை வலய அதிபர்களும் மற்றும் ஆசிரியர் சங்கமும் ஏற்பாடுசெய்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்னால் நேற்று 2.30 மணிக்கு இடம்பெற்றதுடன், சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரிக்கு முன்னாலும் இடம்பெற்றது.

இந்த நாட்டில் மூன்று பெரும் சமூகங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. பெரும்பான்மை சமூகம் எத்தனையோ தேசிய பாடசாலைகள் என்று இந்த நாட்டிலே இருந்துகொண்டிருக்கின்றன. இந்த பாடசாலையில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் அவர்களுடைய சமய கலாசார அடையாளங்களோடு மிகவும் சுதந்திரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றபோது கிழக்கிலங்கையிலேயே இரண்டு முக்கிய சமூகங்களான தமிழ், முஸ்லிம் சமூகம் இன்று ஒற்றுமையாக வாழவேண்டிய தருணத்தில் ஆடை என்ற ஒரு பிரச்சினையை ஆரம்பித்து இன முரண்பாட்டை தோற்றுவித்து மாணவர்களை களத்திலே இறக்கி, மாணவர்கள் மனதில் இனவாத நஞ்சை ஊட்டி இன நல்லுறவை சீரழிக்கின்ற சண்முகா அதிபருக்கும் சண்முகா பாடசாலை சமூகத்திற்கும் எதிராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எங்கள் அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

பாடசாலை என்பது சமூகத்தின் சொத்து அல்ல. இது அரச சொத்து என்றவகையில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களும் எங்கும் தங்களது சமூக அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையில் இலங்கையில் இந்த ஜனநாயக அரசியல் யாப்பு இருக்கின்ற சூழலிலே இவ்வாறான செயன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

மேலும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் "பாடசாலைகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டு", "இன நல்லுறவைப் பேணு", "சண்முகா அதிபரை இடமாற்று" எனும் கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் "மத சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடு", "நீதிமன்ற தீர்ப்பை அவமதித்தமைக்கு தண்டனை வழங்கு'', "இன நல்லுறவை சீர்குலைக்க இடமளியாதே சண்முகா!" 'அரச பாடசாலையில் இனவாதத்தை துண்டிய'அதிபரை இடமாற்றம் செய்" என பதாகைகளை ஏந்தியவாறு கண்டன ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வியாபார அனுமதிப்பத்திரம் பெற காலஅவகாசம்; தவறின் 3000 ரூபா தண்டப்பணம் அறவிடப்படும்

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)




கல்முனை மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வருகின்ற வர்த்தக நிலையங்கள், கடைகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களுக்கான நடப்பு ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade Licence) எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறு கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

இக்காலப்பகுதிக்குள் வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாத வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகர சபை தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபையினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

கல்முனை மாநகர சபையின் வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்குள் பெறப்பட வேண்டும். எனினும், வர்த்தகர்களின் நலன்கருதி இதற்கான காலஅவகாசம் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இக்காலப் பகுதிக்குள் அனைத்து வர்த்தகர்களும் கண்டிப்பாக வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என பணிக்கப்படுகின்றனர்.

இக்காலப்பகுதிக்குள் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளத் தவறும் வர்த்தக நிலையங்கள் மற்றும் கடைகளின் உரிமையாளர்கள் மீது, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் வழக்குச் செலவு உட்பட 3000 ரூபா தண்டப்பணமும் அறவிடப்படும் - என்று கல்முனை மாநகர சபை மேலும் அறிவித்துள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



இன்று நமக்கு சுதந்திரம் இல்லாம போய் 74 ஆண்டுகள் எலுவா..? தமிழால தேசிய கீதம் பாடாத சுதந்திர தினம்தான் இது.. இந்த லெட்சனத்திலதான் அரசாங்கத்தில ஒட்டியிருக்கிற நம்மட ஆக்கள் முக கவசத்தோட வாயில பிளாஷ்ரிக்கயும் ஒட்டித்து போய் நிக்காங்க போல... வெட்கம் கெட்ட தமிழ் எம்.பீக்கள பார்த்து ஆருட்ட சொல்லி ஒப்பாரி வைக்கிற...!

# மட்டக்களப்பில் பஸ் நிலைய பயணிகள் முன்பதிவு நிலையம் ஆளுநரால் திறந்துவைப்பு





(கிண்ணியா நிருபர்)

மட்டக்களப்பில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள பஸ் நிலையத்திலுள்ள தொலைதூர பயணிகள் முன்பதிவு நிலையம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நேற்று முன்தினம் (02) திறந்துவைக்கப்பட்டது.

இந்த சேவையானது மட்டக்களப்பிலிருந்து கொழும்பு மற்றும் ஏனைய மிக தூர பகுதிகளுக்கு செல்லும் பயணிகள் இணையத்தில் ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும். கிழக்கு மாகாணத்தில் உள்ள பயணிகள் இணையவழி முறையின் மூலம் முன்கூட்டியே ஆசனங்களை இதன் ஊடாக முன்பதிவு செய்யமுடியும். குறித்த புதிய நிலையம் திறந்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து பஸ் நிலையத்திற்குச் செல்லும் முதலாவது பஸ்ஸை ஆளுநர் செலுத்தினார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சாமர நிலங்க மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உழவு இயந்திரத்தில் மோதி இருவர் படுகாயம்

(மீராவோடை நிருபர்)

உழவு இயந்திரத்தில் மோதி இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை வீதி, வட்டனான் பகுதியில் வைத்தே இந்த விபத்துச் சம்பவம் நேற்று (03) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் சென்ற இருவர் வீதியோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இனவாத சிந்தனைகொண்ட பத்திரிகைகளை புறக்கணிக்க முஸ்லிம் சமூகம் முன்வரவேண்டும்

## கிழக்கின் கேடயம் அமைப்பு வேண்டுகோள்

(மாளிகைக்காடு நிருபர்)




தொடர்ச்சியாக பொய்யான செய்திகளை வெளியிட்டுவந்த பிரபல பத்திரிகை ஒருபடி மேலே சென்று நடந்த சம்பவத்தை தலைகீழாக மாற்றி செய்தி வெளியிட்டுள்ளது. இவ்வாறான பத்திரிகையை முஸ்லிம் பிரதேசங்களில் புறக்கணிக்க வேண்டும் என்பதுடன், முஸ்லிம் பிரதேச வாசிகசாலைகள், உள்ளூராட்சி மன்றங்களில் காட்சிப்படுத்துவதை தவிர்ப்பதை உறுதிப்படுத்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் முன்வரவேண்டும் என்று கிழக்கின் கேடயம் அமைப்பு சார்பில் பிரதம செயற்பாட்டாளர் எஸ்.எம்.சபீஸ் வேண்டு கோளொன்றை முன்வைத்துள்ளார்.

அந்த வேண்டுகோள் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, சமூக உணர்வுள்ள முஸ்லிம் ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி நீதி, நியாயத்தை விரும்பும் ஊடக தர்மத்தைப் பேணி நடக்கும் ஊடகவியலாளர்கள் இப்படியான இனவாத சிந்தனைகொண்ட, துளியளவும் ஊடக தர்மமற்ற பத்திரிகைக்கு செய்திகளை அனுப்புவதிலிருந்து தவிர்ந்துகொண்டு கௌரவமிக்க ஜனநாயக தூண்களில் ஒன்றான ஊடக தர்மத்தை பாதுகாக்க வேண்டும்.

இது முதல் தடவையல்ல. தொடர்ந்தும் இந்த பத்திரிகை முஸ்லிம்களை இலக்கு வைத்து பொய்யான, கட்டுக்கதைகள் அடங்கிய செய்திகளை கடந்த காலங்களில் வெளியிட்டுள்ளது. இவர்களுக்கு தொடர்ந்தும் மன்னித்தும் மறந்தும் ஆதரவு வழங்கிவந்த பத்திரிகை வாசகர்கள், இவர்களின் செய்தியில் உள்ள நம்பகத்தன்மையை அறிந்து இவர்களின் பத்திரிகையை வாசிக்கக்கூடாது என்றும் பத்திரிகை முகவர்கள் சமூகப்பணியாகக் கொண்டு இவ்வாறான பத்திரிகைகளை விற்பனை செய்வதிலிருந்து தவிர்ந்துகொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# அளவை, நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் பணிகள்

## மூதூரில் முன்னெடுப்பு

(சீனக்குடா நிருபர்)

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2022ஆம் ஆண்டுக்கான அளவை, நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திருகோணமலை மாவட்ட அளவிட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் பொறுப்பதிகாரி பி.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இம்மாதம் 07, 08, 09, 10 மற்றும் 11ஆகிய திகதிகளில் மூதூர் பிரதேச பிரதேச செயலக கட்டடத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரையும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரை இடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த பிரதேசங்களிலுள்ள கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், கமநல சேவைத் திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் உபயோகிக்கும் சகல அளவை, நிறுவை உபகரணங்களையும் சரிபார்த்து முத்திரையிட்டு, வியாபாரிகள் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளை சட்டரீதியாக ஆக்கிக்கொள்ள வேண்டும் எனவும் முத்திரை இடப்படாது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் மீது, 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள், சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது தோணா பாலம் மீள் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்



(எம்.என்.எம்.அப்றாஸ், நூறுல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர்)

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ்.வீதியிலிருந்து தோணாவை ஊடறுத்துச் செல்லும் பால மீள் நிர்மாண வேலைத்திட்டம் கிழக்கு மாகாண சபையின் உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் (எல்.டி.எஸ்.பி) சுமார் 5.3 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின்கீழ் நேற்று (03) பிற்பகல் அங்குராப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் கலந்துகொண்டு பால மீள நிர்மாண வேலைத்திட்டத்தினை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், சாய்ந்தமருது பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.றபீக், அப்துல் அஸீஸ், ஏ.ஆர்.அஸீம், எம்.எம்.ஜெளபர், என்.எம்.றிஸ்மீர், நஸ்ரின் முர்ஷித், ஆயிஷா சித்தீக்கா, சுஹைல் அஸீஸ், எஸ்.மௌபியா, எல்.டி.எஸ்.பி. திட்டத்திற்கான அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, உள்ளூராட்சி உத்தியோகத்தர் எம்.நௌஷாத் மற்றும் பால நிர்மாண வேலைத்திட்ட ஒப்பந்தக்காரர், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

74ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு கல்முனைக்குடி சமுர்த்தி வங்கி வலயத்தில் மரநடுகை இடம்பெற்றது. (படங்கள் – கல்முனை நிருபர்)




# துறைமுக அதிகாரசபை முஸ்லிம் மஜ்லிஸினால் புலமைப்பரிசில் வழங்கல்

(பொலிவேரியன் நிருபர்)

இலங்கை துறைமுக அதிகாரசபை முஸ்லிம் மஜ்லிஸ் வருடாந்தம் நடத்தும் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கலும் 2020, 2021ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை (05) பிற்பகல் 2 மணிமுதல் 7 மணிவரை சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறும்.

வீடமைப்பு நிர்மாணத்துறை முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் முதன்மை பேச்சாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஏ.எல். ஜவ்பர் சித்தீக், சட்டத்தரணி எஸ்.எம். அப்துல்லாஹ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# மாங்காடு சரஸ்வதி பாடசாலையின் குறைகளை பூர்த்திசெய்யுமாறு ஆர்ப்பாட்டம்

## பெற்றோர், மாணவர்களால் முன்னெடுப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு முன்னால் பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்திசெய்து தருமாறு கோரி பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதி களால் நேற்று (03) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இவ்வருடம் நூற்றாண்டு விழாக்காணும் பாடசாலை எங்கே, பிரச்சினையை உப அதிபராக நியமித்தது ஏன், கதிரைக்கு ஆள் தேவையில்லை, அதிபர் ஒருவரே இங்கு தேவை, மேலதிக ஆசிரியர்களும், முடியாத புத்தகமும், சுயாதீனமாக நீருமில்லை சுத்திகரிக்க ஆளுமில்லை, மாணவர்களுக்கு ஏற்படும் அநீதியைச் சீர்செய்வது யார், பரீட்சைகளின் சித்தியின்மைக்கு காரணம் யார், மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் செல்வது ஏன், தேர்ச்சியின் உயர்ச்சியா மாணவர்கள் வெளிநாடு செல்வது, காலாவதியான அதிபரும் சீரழிந்த மாங்காடும், பரிதாபம் மாணவர்கள், வேண்டும் வேண்டும் புதிய தகுதியான அதிபர், பாடத்திற்கு அமைய ஆசிரியர்கள், உயர் அதிகாரிகளே அதிபருக்குத் துணைபோக வேண்டாம், செயலாளர் அவர்களே ஆளுமையுடைய அதிபரை உடன் நியமி உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் குறித்த பாடசாலை அதிபரிடம் கருத்துக் கேட்பதற்காக பாடசாலைக்குள் ஊடகவியலாளர்கள் சென்றபோது பாடசாலையின் உட்பக்கமாக வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்தது. எனினும் அதிபரை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது, வலயக்கல்வி அலுவலக அதிகாரிகளிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்து, அவர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

# கடல்வழியாக 200 கிலோ போதைப்பொருட்களை இலங்கைக்கு கடத்திவந்த ஈரானியர்கள் 09 பேர் கடற்படையினரால் கைது

## கப்பலுடன் போதைப்பொருட்களும் மீட்பு



(கனகராசா சரவணன்)

இலங்கைக்கு ஈரானிலிருந்து கடல்வழியாக கப்பல் ஒன்றில் போதைப்பொருட்களை கடத்திவந்த ஈரானைச் சேர்ந்த 09 சந்தேகநபர்களை இலங்கை - ஈரான் கடல் எல்லைப்பகுதில் வைத்து கைதுசெய்து, கொழும்பு கடற்படை தளத்திற்கு நேற்று வியாழக்கிழமை (03) கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.ஏ.ரி.சுபோதவுக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கமல் சில்வாவின் பணிப்புரைக்கமைய மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் வழிகாட்டலில் மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.ஏ.வ.சுபோத தலைமையிலான பொலிஸ் குழுவினர் கடற்படையுடன் இணைந்து குறித்த கடல் பரப்பில் சுமார் 15 தினங்களுக்கு மேலாக இரவு, பகலாக கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த கடல்பரப்பில் ஈரானிலிருந்து போதைப்பொருட்களை கடத்திவந்த கப்பலை மறித்தபோது, கப்பலில் இருந்த சுமார் 200 கிலோ போதைப்பொருளை



கடத்தல்காரர்கள் கடலில் எறிந்த நிலையில் கடத்தல்காரர்கள் 9 பேரை கைதுசெய்ததுடன், அவர்கள் பாவனைக்காக வைத்திருந்த போதைப்பொருட்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்தவர்களையும் கப்பலையும் நேற்று (03) அதிகாலை கொழும்பு கடற்படை முகாமிற்கு கொண்டுவந்து சேர்த்துள்ளனர். இதில் கைதுசெய்யப்பட்ட கடத்தல்காரர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரி தெரிவித்தார்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டப்போட்டி

(திகாமடுல்ல நிருபர்)

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எமது அட்டாளைச்சேனை பிரதேச சபை அலுவலகத்தின் மூலம் மரதன் ஓட்டப்போட்டி நிகழ்ச்சி நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது இன்று முற்பகல் 06.15 மணிக்கு ஒலுவில் வெளிச்ச வீட்டுச் சந்தியில் ஆரம்பித்து அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில் நிறைவடையும்.

இப்போட்டி நிகழ்ச்சியில் அட்டாளைச்சேனை பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆர்வமுடைய ஓட்ட வீரர்கள் கலந்துகொள்ள முடியும் என்பதுடன், வெற்றிபெறும் வீரர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

எனவே, கழக வீரர்கள் மற்றும் ஆர்வமுடைய கழகம்சாரா வீரர்களை இப்போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# காத்தான்குடியின் மூத்த ஆளுமை சட்டத்தரணி ஜவாத் உயிரிழப்பு





(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஆயுட்கால பிரதித் தலைவரும் அதனது ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவருமான காத்தான்குடியின் மூத்த ஆளுமை சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எல்.அப்துல் ஜவாத் பீ.ஏ., நேற்று முன்தினம் (02) காலை 06:45 மணியளவில் வபாத்தானார்.

அன்னாரனது ஜனாஸா தொழுகை மற்றும் நல்லடக்கம் நேற்று முன்தினம் அஸர் தொழுகையின் பின்னர் காத்தான்குடி முஹ்யித்தீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

ஜஸாகல்லாஹ் தொழுகை மற்றும் நல்லடக்கத்தில் ஊர்ப் பிரமுகர்கள், அரசியல் மற்றும் மார்க்கத் தலைவர்கள், உறவினர்கள் கலந்துகொண்டதுடன், வர்த்தக நிலையங்களை மூடி வர்த்தகர்கள் மற்றும் ஊர் மக்கள் எனப் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

# சம்மாந்துறை ஜமாலியா பாடசாலை கட்டிட நிர்மாணப் பணிகளில் ஊழல்

## ஜனாதிபதியிடம் முறையிட நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயத்தின் 45 இலட்சம் ரூபா பெறுமதியான புதிய கட்டிட நிர்மாண வேலையில் இடம்பெற்றுள்ள ஊழல் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விரைவில் நேரடி முறைப்பாடுகள் மேற்கொள்ளவுள்ளனர் - என்று பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் எம்.ஐ.எம்.றிஸ்விகான் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் மருதமுனையில் நேற்று முன்தினம் (02) இரவு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பெற்றோர் சார்பான ஏனைய பிரதிநிதிகள் சகிதம் ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசியபோது இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயத்தின் 45 இலட்சம் ரூபா பெறுமதியான புதிய கட்டிட நிர்மாண வேலையில் அதிபரால் ஊழல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலையின் அபிவிருத்திக் குழுவால் செய்யப்படவேண்டிய வேலையை இப்பாடசாலையின் அதிபர் வேறு ஒரு பாடசாலையின் அதிபருக்கு கொந்துராத்து கொடுத்துள்ளார்.

அத்துடன் நில்லாமல், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவே வேலையை செய்ததாக பொய்யான மோசடியான அறிக்கைகளை தயார் செய்தும் உள்ளார். இவை தொடர்பாக நாம் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு பல முறைப்பாடுகளை செய்தும் அவர் எந்த நீதியான நடவடிக்கைகளையும் எடுக்காமல் அதிபரை காப்பாற்ற முயற்சிப்பதுடன், உடந்தையாகவும் நடக்கின்றார்.

அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் தொடர்பாக நாம் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு முறையிட்டு நீதிக்காக காத்திருந்தோம். அதிபருக்கு இடமாற்ற உத்தரவு திங்கட்கிழமை வந்ததாக அறிந்தோம்.

ஆனால் மறுநாள் அதே இடமாற்ற உத்தரவு மாகாண கல்விப் பணிப்பாளரால் இரத்துச்செய்யப்பட்டது என்று அறிகின்றோம். குற்றச்செயலுக்கு உடந்தையாக செயற்படுவதும், குற்றம் புரிந்தோரை காப்பாற்ற முயல்வதும், குற்றம் புரிந்தோர் மீது நடவடிக்கை எடுக்க தவறுவதும் சட்டத்தின் பார்வையில் குற்றங்களே யாகும். அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேலான கவனத்துக்கும் கொண்டுவந்து இருக்கின்றோம். அதேபோல், வெகுவிரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன, நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரை சந்தித்து முறையிடுகின்ற முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளோம் - என்றார்.இதேவேளை, அதிபரின் தற்காலிக இடமாற்றத்தை இரத்துசெய்யக்கோரி, சம்மாந்துறை கல்விக்கோட்டத்தின் கீழுள்ள ஜமாலியா வித்தியாலயத்தின் பெற்றோர் மற்றும் மாணவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை (01) முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பெற்றோர், "இப்பாடசாலைக்கு அவ்வப்போது பல அதிபர்கள் நியமனம் பெற்றுவந்த போதிலும் இப்பாடசாலையானது



கல்வியிலோ அல்லது பௌதீக அபிவிருத்தியிலோ முன்னேற்றம் காணவில்லை .

இந்நிலையில், சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்னர் இப்பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்றுவந்த பெண் அதிபரான எம்.எம்.மஹிஸா பானு எனும் அதிபர் முதலில் பெற்றோருக்கும் பாடசாலைக்குமான தொடர்பை ஏற்படுத்தி கல்வி மற்றும் பௌதீக அபிவிருத்தியில் பாரிய மறுமலர்ச்சியை மிகக் குறுகிய காலத்துக்குள் ஏற்படுத்தியுள்ளார்.

எனவே, இந்த அதிபரை தற்காலிக இடமாற்றம் செய்ய கல்வி அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு கேட்கின்றோர். எங்களுடைய அதிபரை மீண்டும் நியமிக்காத பட்சத்தில், எங்கள் பிள்ளைகளின் விடுகைப்பத்திரத்தை உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கான பெற்றோர்களின் கையொப்பமும், கோரிக்கையும் அடங்கிய மகஜரை, சம்மாந்துறை கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ.சபூரிடம் கையளித்தனர்.

# கல்முனை ஸ்ரீ தரவை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழா

கல்முனை மாநகர அருள்மிகு ஸ்ரீ தரவை சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழா எதிர்வரும் 06ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இதனையொட்டி, 5ஆம் திகதி, மாலை 6 மணிக்கு மூர்த்திக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் இவ்வாலய உற்சவம், எதிர்வரும் 17ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவுபெறும்.

இந்த உற்சவ காலத்தில் 12 நாட்களும் காலை - ஸ்நபன பூஜை, யாக பூஜை, நித்திய பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன 8.30 மணிவரை இடம்பெறும். மாலை 5 மணிக்கு யாக பூஜை, நித்திய பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை, சுவாமி உள்வீதி - வெளிவீதி உலா வரல் இடம்பெறும். அதே நேரம், தினமும் இரவு 6 மணி தொடக்கம் 6.30 மணிவரையும் கல்முனை-03 பண்ணிசை மன்றத்தின் கூட்டுப் பிரார்த்தனையும், இரவு 6.30 தொடக்கம் 7 மணிவரை, கல்முனை ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தினரின், தெய்வீக பேருரையும் இடம்பெறும்.

09ஆம் நாள் வேட்டைத் திருவிழாவும் 10ஆம் நாள் தெப்பத் திருவிழாவும் நடைபெற்று 11 ஆம் நாள் முத்துச்சப்பர பவனி இடம்பெறும்.

கொடியேற்றத் திருவிழா தினத்தன்று கல்முனை 3 திருத்தொண்டர் படையினர் நடத்தும் அன்னதானம் இடம்பெறும். தீர்த்தோற்சவ தினமான எதிர்வரும் 17ஆம் திகதி, கல்முனை இராவணா விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் அன்னதானம் நடைபெறும்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# கிழக்கில் ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆரம்பித்துவைப்பு



# திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் இரண்டாவது நாளாகவும் தொடரும் ஆர்ப்பாட்டம்

## ஆசிரியையை இடமாற்றுமாறு வலயக்கல்வி அலுவலகத்தில் மகஜரொன்றும் கையளிப்பு








(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தினை கண்டித்து இரண்டாவது நாளாக நேற்றும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக நேற்று (03) குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆசிரியரைக் கண்டித்து எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

மேலும், ஆர்ப்பாட்டக்காரர்களினால் குறித்த ஆசிரியை எமது பாடசாலைகளுக்கு வேண்டாம் எனவும் திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரனிடம் ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் சேகரிக்கப்பட்ட கையொப்பம் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரன், நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தின்போதுதான் பிரதேசத்தில் இல்லை எனவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வலயக்கல்விப் பணிமனையிலிருந்து அதிகாரிகள் அனுப்பப்பட்டு இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறித்த ஆசிரியையை தற்காலிகமாக வலயக்கல்வி அலுவலகத்தில் கையொப்பம் இடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த ஆசிரியையை பாடசாலைக்கு சேவைக்கு அமர்த்தியது தொடர்பில் தனக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் குறித்த ஆசிரியை தொடர்பில் உறுதியான முடிவொன்று எட்டப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக அமைப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்கையில், நேற்று இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியின் ஆசிரியை தமது கடமைகளைப் பொறுப்பேற்ற நேற்று முன்தினம் கல்லூரிக்கு சமுகமளித்திருந்த நிலையில் தாம் அணிந்திருந்த ஆடை தொடர்பில் பாடசாலை நிர்வாகம் மற்றும் அன்றைய தினம் கல்லூரிக்கு வருகை தந்த ஒருசிலருக்கு முன்னிலையில் தம் பணியினை ஆரம்பிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து சற்று முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தாம் அதனை வீடியோ காணொளி மூலம் பதிவு செய்ததாகவும் வீடியோ காணொளி பதிவுசெய்த தொலைபேசியும் பறிக்கப்பட்டு தன்னை தாக்கியதாகவும் குறித்த ஆசிரியர் குரல் பதிவு மற்றும் வீடியோ காணொளி ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், இவ்வாறு ஏற்பட்ட முறுகல் நிலையின்போது கல்லூரியின் அதிபரும் குறித்த ஆசிரியையினால் தாக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியிடப்பட்ட நிலையில் கல்லூரியின் அதிபர் மற்றும் குறித்த ஆசிரியை இருவரும் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன்

## மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட்

(மாளிகைக்காடு நிருபர்)

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கற்பிக்கின்ற முஸ்லிம் ஆசிரியையான பாத்திமா பஹ்மிதா மீதான அத்துமீறல் மிகவும் கண்டிக்கத்தக்கதும் மிலேச்சத்தனமானதுமாகும்.

"ஓர் இனத்தின் கலாசாரத்தை மதிப்பது அந்த இனத்தின் உரிமை. ஆனால், இன்னுமொரு இனத்தின் கலாசாரத்தை திணிப்பது எந்தவொரு இனத்தின் உரிமையல்ல." கடந்த மூன்று தசாப்த காலமாக இந்நாட்டில் புற்றுநோயாக இருந்துவந்த இன வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அனைத்து சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், வெளிநாட்டுச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்ற ஒருசில வன்மக்குழுக்கள் இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் நாட்டுக்குள் பிரிவினையை ஏற்படுத்தி அதன்மூலம் சுய இலாபமடைய முயற்சித்து வருகின்றார்கள்.

இந்நாடு பல்லின பல்கலாசார சமூக அமைப்பைக்கொண்ட நாடாகும். அவரவர் கலாசாரம் என்பது அவர்களின் உரிமையாகும். இவ்வுரிமை இலங்கையின் தாய்ச்சட்டமான அரசியலமைப்பு ரீதியாக பாதுகாக்கப்பட்டதாகும். அதனை அத்துமீறவோ யாருடைய சுய விருப்பு வெறுப்புக்கேற்ப கட்டுப்படுத்தவோ முடியாது - என முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பொறியியலாளர் நஸீர் அஹமட் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, இந்நாட்டில் இருக்கின்ற எந்த அரச பாடசாலை முறைமைக்குள்ளும் நடக்காத அராஜக ஜனநாயக விரோத நிகழ்வு இன்று திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி கல்விச் சமூகம் என்று கூறிக்கொள்கின்ற ஒருசில இனத்துவேஷிகள் அரங்கேற்றியிருப்பது ஒரு சமூகத்தின் உரிமைக்கு பாரிய அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் அமைந்துள்ளது.

பாடசாலை என்பது அறிவையும், ஒழுக்கத்தையும் எதிர்கால சந்ததியினருக்கு போதிக்கின்ற ஒரு சமூக நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் அறிவிலிகள் சிலர் முஸ்லிம் பெண் ஆசிரியை மீது உடலியல் ரீதியாகவும், உலவியல் ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்த முனைந்திருப்பது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்தாகும். இது மாணவர்களுக்கு பிழையான நடைமுறையை கற்றுக்கொடுக்கின்ற செயற்பாடாகும்.

அரச நிறுவனங்களில் அரசின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக செயற்படுகின்ற இவ்வாறான வன்மக்குழுக்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட அந்த பெண் ஆசிரியையான பாத்திமா பஹ்மிதாவிற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

# ஆசிரியைக்கு நடந்த அநீதியை மூடிமறைத்து பொய்யான செய்திகளை பரப்பிய ஊடகங்கள்

## எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்கப் பேரவை அறிவிப்பு

(மாளிகைக்காடு நிருபர்)

சண்முகா வித்தியாலயத்துக்கு சென்ற முஸ்லிம் ஆசிரியை "முகத்தை முழுவதுமாக" மூடிச் சென்றார் என்று நிரூபித்தால் பிரபல தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கும், பத்திரிகையொன்றுக்கும் தலா பத்து இலட்சம் ரூபாவை சன்மானமாக வழங்கவுள்ளேன் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன் - என சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்கப் பேரவையின் தலைவர் எம்.எச்.எம்.இப்ராஹிம் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, திருகோணமலை சண்முகா வித்தியாலய முஸ்லிம் ஆசிரியை "முகத்தை முழுவதுமாக மூடும்" ஆடையை அணிந்து சென்றார். அதனால்தான் பிரச்சினை ஏற்பட்டது என்று நிரூபிக்கும் பட்சத்தில் நாங்களும் அதனை கடுமையாக எதிர்ப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இதனை நிரூபிக்கத் தவறும் இரு ஊடகங்களும் பொய் செய்திகளை பரப்பியதற்காக பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த விடயத்தை எதிர்க்கின்ற தமிழ் மக்களை திசை திருப்புவதற்காகவே நீங்கள் இப்படி செயல்படுகின்றீர்கள் என்பது எங்களின் கருத்தாகும். அந்த முஸ்லிம் ஆசிரியை சண்முகா பாடசாலைக்கு முகத்தை முழுவதுமாக மூடிச் சென்றாரா என்பதை அந்த பாடசாலையின் முன்னால் உள்ள கடையில் பொருத்தப்பட்டுள்ள வீடியோ கெமராவில் பார்த்து தெளிவை பெற்றுக்கொள்ளலாம் என்பதை அந்த ஊடகங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.



அத்துடன், பொய் செய்திகளை பரப்பிய ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளேன். சமூகத்தின் மீது கரிசனைகொண்ட சட்டத்தரணிகள் இதற்கு உதவவும் ஆலோசனை வழங்கவும் முன்வரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஆசிரியை பஹ்மிதாவுக்கு நீதி வேண்டும்

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் மஹ்தி

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் (02) ஆசிரியை பஹ்மிதாவுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட திட்டமிட்ட சதிக்கு வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதாக கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்தார்.

கிண்ணியாவில் வைத்து நேற்று முன்தினம் (02) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில், இரண்டு வருடங்களுக்கு முன்னர் அதே பாடசாலையில் அவருக்கான ஆடை சுதந்திரம் பறிக்கப்பட்டபோது மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை செய்தபோது குறிப்பிட்ட ஆடையை அணிந்து செல்வதற்கு தடை ஏற்படுத்த முடியாது என தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தக் கோரி ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அவருக்கு சாதகமான நிலைப்பாட்டை தெரிவித்திருந்த நிலையில், மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் அதே பாடசாலைக்கு சென்று உங்களுடைய பணியைத் தொடருங்கள் என்று கடிதம் அனுப்பியிருந்தார்.

அதன்பிரகாரம் நேற்று பாடசாலைக்கு சென்றவேளை அதிபர் குறிப்பிட்ட ஆசிரியரை ஒப்பமிட அனுமதி மறுத்ததோடு தனது கடமையை செய்வதற்கும் பெற்றோர், பழைய மாணவர்களை தூண்டிவிட்டு தாக்குதலை நடத்தி இடையூறுகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.



இந்த திட்டமிட்ட சதியை வன்மையாக கண்டிப்பதோடு, எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டு இனங்களுக்கிடையேயான நல்லுறவை பாதிக்க இடமளிக்கக்கூடாது என்றும் சம்பந்தப்பட்டவர்கள் அவருக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதோடு இந்த சதி வேலைகளை திட்டமிட்டு அரங்கேற்றியவர்களுக்கு நீதியின் பிரகாரம் விசாரணை செய்து தகுந்த தண்டனையை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நீண்ட தூரம் கைகோர்த்துப் பயணிக்கவேண்டிய தமிழ் - முஸ்லிம் சமூகத்தை சண்முகா பாடசாலை விடயம் பிரித்துவிடக்கூடாது

## திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

(கிண்ணியா நிருபர்)

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் நீண்டதூரம் கைகோர்த்துப் பயணிக்கவேண்டிய அவசியம் உள்ளது. இந்நிலையில், திருகோணமலை சண்முகா பாடசாலை விடயம் இந்த இரு சமூகத்தையும் பிரித்துவிடக்கூடாது. இந்த விடயத்தை தமிழ் புத்திஜீவிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்- என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்று (03) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சமூகத்தின் கலாசார ஆடையைக்கூட அனுமதிக்காத தமிழ் சமூகத்திடமிருந்து எவ்வாறு நாங்கள் வேறு உரிமை சார்ந்த விடயங்களை எதிர்பார்க்க முடியும் என்ற கேள்வியை முஸ்லிம் சமூகத்தினர் எங்களிடம் கேட்கத்தொடங்கியுள்ளனர். இவ்வாறான கேள்விகளுக்கு எங்களால் விடையளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இரு சமூகமும் இணைந்து முகங்கொடுத்து தீர்வு காணவேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதற்காக இரு சமூகமும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் இவ்வாறான சிறு சிறு பிரச்சினைகளைப் பூதாகரமாக்கி சமூகத்தை பிரிக்கும் செயற்பாடுகளை சிலர் திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றனர்.

இது நாம் எதிர்பார்க்கும் தீர்வுத்திட்டத்தை இன்னும் நீண்டகாலத்திற்கு தாமதப்படுத்திவிடும். இதனால் பாதிக்கப்படப்போவது இரு சமூகத்தினரும்தான் என்பதை சகலரும் விளங்கிக்கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது.

குறித்த பாடசாலை அபாயா விவகாரத்தில் நீதிமன்றத்தில் சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது. இதற்கமைய கல்வி அமைச்சின் பணிப்பின்படி கடமைக்கு சமுகமளித்த ஆசிரியையை ஒப்பமிட அனுமதிக்காது தாமதிக்க வைத்ததன் காரணம் என்ன? இந்த விவகாரத்தில் உடனடியாக வெளியார் எப்படி வந்து தலையீடு செய்தார்கள்? மாணவிகள் உடனடியாக பாடசாலையை விட்டு வெளியேறியமைக்கான பின்னணி என்ன? போன்ற கேள்விகளுக்கான விடையைத் தேடினால் இந்தப் பிரச்சினைக்கான தோற்றம் எது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.



முஸ்லிம்கள் தமது கலாசார ஆடையுடன் கற்பிப்பதால் ஏதாவது பிரச்சினை உண்டா என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அப்படி ஏதாவது பிரச்சினையை இனங்கண்டால் அதனைத் தெளிவுபடுத்த வேண்டும். இதனை விடுத்து முஸ்லிம்கள் அவர்களது உடையுடன் பாடசாலைக்கு வரக்கூடாது என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கின்றது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எனவே, தமிழ் புத்திஜீவிகள் இந்த விடயத்தைக் கவனத்திற்கொள்ள வேண்டும். உணர்வுகளுக்கு அடிமைப்படுவதனால் ஏற்படும் இழப்புகள், பாரதூரங்கள் பற்றிய தெளிவை சமூகத்திற்கு வழங்கவேண்டும். நாம் செல்லவேண்டிய நீண்ட பாதையில் இவை போன்ற விடயங்கள் தடைக்கற்கள் என்பதை உணர்த்த வேண்டும்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் பிரிந்து நின்று வடக்கு, கிழக்கை இணைக்கவோ அல்லது நிலையான தீர்வுத்திட்டங்களை அமுல்படுத்தவோ முடியாது என்பதை கடந்த கால அனுபவங்களின் ஊடாக நாம் கற்றுள்ளோம். இந்த நிலை இன்னும் நீடிக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இந்த இரு சமூகத்தினரும் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு நிற்பது பிரித்தாள நினைப்போருக்கு சாதகமாக அமைந்துவிடும் என்பதை அனைவரும் கவனத்திற்கொள்வது காலத்தின் தேவையாகும்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக!

## மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு புதுவை முதலமைச்சர் ரங்கசாமி கடிதம்



இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட காரைக்கால், தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு புதுவை முதலமைச்சர் ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

எல்லைதாண்டி மீன் பிடித்ததாக தமிழகம், புதுச்சேரியைச் சேர்ந்த 9 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடந்த 31ஆம் திகதி சிறைப்பிடித்தனர். மேலும் அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

அவர்களில் காரைக்கால் கோட்டுச்சேரியைச் சேர்ந்த வளர்செல்வம் (வயது 24), எழிலன் (வயது 26), பிரகலாதன் (வயது 17), விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் பன்னீர் (வயது 42), சீர்காழி அர்ஜூன் (வயது 34), விக்ரம் (வயது 17), நாகப்பட்டினம் பரதன் (வயது 23), அருள்ராஜ் (வயது 22), மயிலாடுதுறை சந்திரன் (வயது 50) ஆகியோராவர்.

அவர்களை விடுவிக்கவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். மீனவர்களின் குடும்பத்தினர் தமிழகம், புதுச்சேரி அரசுகளை வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 9 மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு புதுவை முதலமைச்சர் ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

# காதலர் தினத்தில்

## இசைஞானியின் புதிய பட அறிவிப்பு




இசைஞானி இளையராஜாவின் 1422ஆவது படத்தின் அறிவிப்பு எதிர்வரும் 14ஆம் திகதி காதலர் தினத்தை முன்னிட்டு வெளியாகவிருக்கிறது.

இளையராஜாவின் 1422ஆவது படம் 14ஆம் திகதி வெளியாகிறது. இரண்டு எண்களும் ஒரே மாதிரி இருப்பது சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியிருப்பதாக படக்குழு அறிவித்துள்ளது.

இந்தப் படத்தின் இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர்கள் குறித்த விவரங்கள் காதலர் தினத்தன்று தெரியவரும்.

இளையராஜா இசையில் தற்போது வெற்றிமாறனின் விடுதலை, மாமனிதன், கிளாப், சுசி கணேசனின் வஞ்சம் தீர்த்தாயடா, மாயோன், தமிழரசன், துப்பறிவாளன் 2, தேசிய தலைவர் உள்ளிட்ட படங்கள் விரைவில் வெளிவரவிருக்கின்றன.

1976 ஆண்டு தொடங்கி கிட்டத்தட்ட 50 வருடங்களாக தனது இசையின் மூலம் ரசிகர்களை மகிழ்வித்து வருகிறார் இளையராஜா. பல தலைமுறையினரும் அவரது இசைக்கு ரசிகர்களாக இருந்து வருகிறார்கள்.

# மீனவர் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து நிரந்தரத் தீர்வு காணுங்கள்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தல்



"இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்கள், 2 விசைப்படகுகளையும் மீட்க மத்திய அரசுக்கு தேவையான அழுத்தத்தை கொடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அறுபதுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் ஏற்கனவே சிறைப்பிடிக்கப்பட்டு விடுவிக்கப்படவிருக்கும் சூழ்நிலையில், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 21 மீனவர்களை இலங்கைக் கடற்படை மீண்டும் சிறைப்பிடித்துள்ளமை தமிழக மீனவர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 29ஆம் திகதி அமிர்தலிங்கம் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் பன்னிரெண்டு பேர் மீன்பிடிக்கச் சென்றதாகவும், 31ஆம் திகதி இரவு கோடியக்கரைக்கு தென்கிழக்கே இந்திய எல்லைப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது 12 தமிழக மீனவர்களையும், விசைப்படகையும் இலங்கை மீனவர்கள் சுற்றிவளைத்து தகராறு செய்ததாகவும், இதற்கிடையே அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் 12 பேரையும், விசைப்படகையும் சிறைப்பிடித்து மயிலிட்டி துறைமுகத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளன.

இதேபோன்று, புதுச்சேரியைச் சேர்ந்த காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கோட்டுச்சேரி மேட்டைச் சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் 31ஆம் திகதி அதிகாலை ஒன்பது பேர் கோடியக்கரைக்கு தெற்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைப் படையினர் 9 இந்திய மீனவர்களையும் அவர்கள் வந்த விசைப்படகினையும் சிறைப்பிடித்து காங்கேசன்துறைமுகத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இலங்கைக் கடற்படையினரின் மேற்படி செயல்கள் கடும் கண்டனத்திற்குரியவை.

மேற்படி சம்பவங்களில் மட்டும் 21 இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களின் இரண்டு விசைப்படகுகள் இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டதையடுத்து, அனைவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதிவரை காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும், இவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டதில் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

இது குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியிருந்தாலும், தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், சிறைப்பிடிக்கப்படுவதும், படகுகள் கைப்பற்றப்படுவதும் மீனவர்கள் மத்தியில் மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, அவர்களுடைய வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டு விடுமோ என்ற மிகப் பெரிய கவலையும் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகள் தொடரக்கூடாது என்பதோடு, மத்திய அரசின் உதவியோடு இதில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் கலந்து பேசி இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மீனவ மக்களிடையே தற்போது நிலவுகிறது.

எனவே, முதலமைச்சர் இது குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசித்து, தேவையான அழுத்தத்தை அளித்து, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட 21 இந்திய மீனவர்களையும், இரண்டு விசைப்படகுகளையும் விரைந்து விடுவிக்கவும் நடவடிக்கை எடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவேண்டுமென்று அ.தி.மு.க. சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்" என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

# சிம்புவுக்கு... டுபாய் கொடுத்த பிறந்தநாள் பரிசு



இந்தியாவைச் சேர்ந்த சில பிரபலங்களுக்கு கோல்டன் விசா வழங்கி டுபாய் கௌரவித்து வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் பார்த்திபனுக்கு கோல்டன் விசா வழங்கப்பட்டது. கோல்டன் விசா பெற்ற முதல் தமிழ் நடிகர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

இந்நிலையில் இந்த விசா நடிகர் சிம்புவுக்கு வழங்கப்படவிருக்கிறது. இதற்காக நடிகர் சிம்பு தற்போது டுபாய்க்கு சென்றுள்ளார். நேற்று பிறந்தநாளைக் கொண்டாடிய சிம்புவுக்கு பிறந்தநாள் பரிசாக அவருக்கு கோல்டன் விசா வழங்கப்படுகிறது.

நடிகர் சிம்பு தன்னுடன் ஈஸ்வரன் படத்தில் நடித்த நிதி அகர்வாலை காதலித்து வருவதாக கிசுகிசுக்கப்படும் நிலையில், அவரது திருமண அறிவிப்பை விரைவில் அறிவிப்பார் என தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தகவலை இருவரும் உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோல்டன் விசாவை முன்னதாக மம்மூட்டி, மோகன்லால், துல்கர் சல்மான், மீரா ஜாஸ்மின், சஞ்சய் தத், த்ரிஷா உள்ளிட்டோர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'புஷ்பா' பட பாணியில் மகாராஷ்ராவில் செம்மரம் கடத்தல்



அல்லு அர்ஜுன் நடித்த 'புஷ்பா' திரைப்படம் கடந்த வருடம் டிசம்பர் 13ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக, வட மாநிலங்களில் இந்தப் படம் பெரும் வெற்றிப் படமாக அமைந்தது.

இந்தப் படம் 90களின் பிற்பகுதியில் தமிழக ஆந்திர எல்லையில் நடைபெற்ற செம்மரக் கடத்தலை அடிப்படையாகக்கொண்டு உருவாகியிருந்தது. புஷ்பா படத்தில் அல்லு அர்ஜுன் காவல்துறையிடம் சிக்காமலிருக்க பால் வண்டியில் செம்மரம் கடத்துவார்.

இந்நிலையில், அந்தப் படத்தைப் பார்த்து அல்லு அர்ஜுனை முன்மாதிரியாகக்கொண்டு பெங்களூரைச் சேர்ந்த யாஷின் என்ற நபர் ஆந்திர - கர்நாடக எல்லையில் இருந்து மகாராஷ்டிர மாநிலத்துக்கு தனது லொறியில் செம்மரம் கடத்திச் சென்றுள்ளார்.

மகாராஷ்டிர எல்லையில் வைத்து பொலிஸார் அவரது லொறியை பரிசோதித்ததில் 2.45 கோடி மதிப்புடைய செம்மரங்கள் கடத்திவரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. செம்மரங்கள் மீது காய்கறிகள் மற்றும் பழங்களை வைத்து மறைத்திருந்ததும் தெரியவந்துள்ளது.

தனது லொறியில் கொரோனா அவசர பணி என்று எழுதியிருந்திருக்கிறார். அவரிடம் தற்போது மகாராஷ்டிரா பொலிஸார் விசாரைணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் நால்வரையும் விடுவிக்கவேண்டும்

## நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தல்

**(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**



புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மீனவர்கள் நால்வரையும் விடுவிக்கவேண்டும். கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்கள் நால்வரும் படகு எந்திரத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாக தமிழ்நாட்டின் எல்லைக்குள் கரை ஒதுங்க நேரிட்டது என சீமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி ஈழத் தாயகத்தைச் சேர்ந்த முகமது கலீல், முகமது ரியாஸ், முகமது ரிஸ்கான், முகமது கைதர் ஆகிய 4 மீனவர்கள் கடலோர காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு கடந்த இரண்டு மாத காலத்திற்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் மட்டக்களப்பிலிருந்து மீன் பிடிக்கக் கிளம்பியவர்கள், படகின் இயந்திரம் பழுதானதால் உண்ண உணவின்றி, மூன்று வேளையும் பச்சை மீனை சாப்பிட்டும், கடல்நீரைக் குடித்தும் நடுக்கடலில் தத்தளித்த நிலையில், 62 நாட்களுக்குப் பிறகு காற்றின் மூலம் படகு கரை ஒதுங்கியபோது சென்னை எண்ணூர் துறைமுகக் காவலர்களால் கைதுசெய்து சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்கள் நால்வரும் படகு எந்திரத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாக தமிழ்நாட்டின் எல்லைக்குள் கரை ஒதுங்க நேரிட்டது. ஆகவே, அவர்களை எல்லை தாண்டியதாகக் கூறி கைதுசெய்திருப்பது சட்டத்திற்குப் புறம்பானதாகும்.

இரு நாட்டின் கடல் எல்லை வரையறைகளாலும், அரசு அதிகாரத்தின் அடக்குமுறைகளாலும் பாதிக்கப்படுவது இரு நிலங்களிலும் வாழும் ஏதுமறியா தமிழ் மீனவர்கள்தான் என்பதை தமிழ்நாடு அரசு உணரவேண்டும்.

ஆகவே, எல்லை தாண்டியதாகக் கூறி கைதுசெய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் வாடும் ஈழத்தமிழ் இஸ்லாமிய மீனவர்கள் நால்வரையும் விடுவித்து, நாடு திரும்பச் செய்து, அவர்களது குடும்பத்தின் கண்ணீரைத் துடைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# துறவிகளான கோடீஸ்வர குடும்பம்



சட்டீஸ்கரில் மருந்து வணிகம் செய்யும் கோடீஸ்வர குடும்பத்தினர் மொத்தமாக சமண துறவிகளாக மாறியுள்ளனர்.

புபேந்திர பக்லியா என்பவருக்கு 80 கோடி வரை சொத்து உள்ளது. இவரும், மனைவி மற்றும் 2 மகள், 2 மகன் ஆகியோர் தமது சொத்துகளை இழந்து சமண மதத் துறவிகளாக மாறியுள்ளனர். இவர்கள் இனி யாசகம் கேட்டும், மத டிரஸ்ட் தரும் ஆதரவையும் நம்பி வாழ்வர். இந்த கோடீஸ்வர குடும்பத்தினர் எடுத்த முடிவு அம்மாநிலத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

**04ஆம் பக்கத் தொடர்ச்சி....**

1951ஆம் ஆண்டிலும் 1972ஆம் ஆண்டிலும் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கத்தின் கொடியில் சில திருத்தங்களை மேற்கொண்டு அதில் சிறுபான்மை சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய வகையில் சில வர்ணங்கள் எங்கள் தேசிய கொடியில் சேர்க்கப்பட்டுள்ளன. சிலர் தேசிய கொடியை பொலித்தீனில் அச்சிட்டு தேசிய வைபவங்களின்போது தெருத்தெருவாக கட்டிவிடுவதுண்டு. அந்த வைபவம் முடிவடைந்த பின்னர் ஒருவருமே அவற்றை அகற்றி விடவேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இறுதியில் கொடிகள் வீதியில் அநாதரவாக விழுந்துவிடும்போது அவற்றை பலரும் பொருட்படுத்தாமல் மிதித்து செல்கின்ற வேதனைக்குரிய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஆகவே, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தேசிய கொடியை அவமதிக்கக்கூடிய வகையில் அவற்றை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளின் போது இலங்கையின் தேசிய கொடி மாத்திரமன்றி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தேசிய கொடிகள் தரக்குறைவான முறையில் பயன்படுத்துவதுண்டு. சில பெண்கள் தேசிய கொடியை பயன்படுத்தி ஆடைகளை தைத்து விடுவதுண்டு. வேறு சிலர் ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் ஆரவாரம் செய்யும்போது தேசிய கொடியை மடியில் கட்டிக்கொண்டு ஆடுவதும் அப்பொழுது அந்தக் கொடி நழுவி கீழே விழும் சம்பவங்கள் நடைபெறுவதும் இப்போது அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

இனிமேல் நாட்டின் சுதந்திரத்தின் சின்னமாக விளங்கும் தேசிய கொடியை கௌரவிக்கக்கூடிய நற்பண்புகளை இப்போது பாடசாலைகளில் அறிவுறுத்துவதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தேசிய கீதம் இசைக்கப்படும்போது நாம் அனைவரும் எங்களை அறியாமலேயே எழுந்து நின்று சிரம் தாழ்த்தி அதற்கு மாரியாதை செலுத்துவதைபோன்று தேசிய கொடி கட்டடங்களில் ஆடம்பரமாக பறந்து கொண்டிருக்கும்போது அதனை அண்ணாந்து பார்த்து சிரம் தாழ்த்தி கௌரவித்தல் அவசியமாகும்.

74ஆவது சுதந்திர தினமான இன்று நாட்டிலுள்ள எல்லா வீடுகளிலும் தேசிய கொடியை பறக்கவிடுதல் அவசியமாகும். இதன்முலமே இந்நாட்டு மக்கள் தற்போது அவர்களுக்கு கிடைத்திருக்கும் சுதந்திரக் காற்றை மகிழ்ச்சியோடு அனுபவித்து வருகிறார்கள் என்பதையும் எங்கள் நாட்டில் வலுவடைந்து வரும் தேசிய ஐக்கியத்தையும் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும்.



• என்.மிருணாளினி



## உலக செய்திகள்

### தொடரும் போர் பதற்றம்:

# உக்ரைன் எல்லைகளில் படைகளை குவிக்கும் ரஷ்யா

- உக்ரைனுக்கு உதவ துருப்புகளை அனுப்புகிறது அமெரிக்கா
- அமெரிக்கா போருக்கு இழுப்பதாக குற்றஞ்சாட்டுகிறது ரஷ்யா



''ரஷ்யாவுக்கு எதிரான தனது இலக்கை அடைவதற்கு உக்ரைனை அமெரிக்கா பகடைக்காயாகப் பயன்படுத்துகிறது''
- ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின்



''எங்கள் மீது ரஷ்யா போர் தொடுத்தால், அது ரஷ்யா - உக்ரைன் போராக இருக்காது; ஐரோப்பா முழுவதுமான முழு போராக இருக்கும்''
- உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஸெலென்ஸ்கி



''யாராலும் விரும்பப்படாத ஒரு போரை தடுத்துநிறுத்துவதை எங்களது கடமையாகக் கருதுகிறோம்''
- அமெரிக்க வெளியுறவு அமைச்சர் எண்டனி பிளிங்கன்

உக்ரைன் எல்லைகளில் ரஷ்யா தனது படைகளையும், அதிநவீன போர்க் கருவிகளையும் நிலைநிறுத்தியுள்ள செயற்கை கோள் புகைப்படங்கள் வெளியாகி சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவருகிறது.

உக்ரைனை கைப்பற்றும் முயற்சியில் நீண்ட காலமாக ரஷ்யா ஈடுபட்டு வருகிறது. ஆனால், ரஷ்யாவுடன் இணைவதை விரும்பாத உக்ரைன் மேற்கு நாடுகளான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இணக்கங்காட்டி வருகிறது.



ரஷ்யா தனது படைகளையும், அதிநவீன போர்க் கருவிகளையும் நிலைநிறுத்தியுள்ள செயற்கை கோள் புகைப்படம்

நேட்டோ இராணுவ கூட்டமைப்பிலும் உக்ரைனை சேர்க்க அமெரிக்கா முயற்சித்து வருகிறது. இதனை சற்றும் விரும்பாத ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுக்கும் நோக்கில் தனது படைகளை அந்நாட்டு எல்லைகளில் நிலைநிறுத்தி வருகிறது.

இலட்சக்கணக்கான இராணுவ வீரர்கள், பீரங்கிகள், ஏவுகணை அமைப்பு உள்ளிட்டவற்றை அமைத்துள்ளது. அத்தோடு, ரஷ்யாவின் நட்புநாடான பெலாரஸை ஒட்டிய உக்ரைன் எல்லையிலும் ரஷ்யாவின் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

**உக்ரைனுக்கு உதவ துருப்புகளை அனுப்பும் அமெரிக்கா**

இதேவேளை, ரஷ்ய ஆக்கிரமிப்பிலுள்ள உக்ரைனுக்கு உதவியாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மேலும் 3 ஆயிரம் வீரர்களை அனுப்ப அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

ஏற்கனவே உக்ரைனின் எல்லைக்கு அருகில் ரஷ்யா ஒரு இலட்சம் வீரர்களைக் குவித்துள்ளது. இதனால் அப்பகுதியில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஜேர்மனியின் வில்செக்கை தளமாகக்கொண்ட சுமார் ஆயிரம் வீரர்களைக்கொண்ட ஸ்ட்ரைக்கர் படைப்பிரிவு ருமேனியாவுக்கு அனுப்பப்படும் என்று பென்டகன் தெரிவித்துள்ளது.

இதேபோல் சுமார் 1,700 வீரர்கள் கரோலினாவின் ஃபோர்ட் ப்ராக்கிலிருந்து போலந்துக்கு அனுப்பப்படுவார்கள். முந்நூறு வீரர்கள் ஃபோர்ட் பிராக்கிலிருந்து ஜேர்மனிக்கு செல்வார்கள் என்றும் அமெரிக்க பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

**ரஷ்யாவை போருக்கு இழுக்கிறது அமெரிக்கா**

இந்நிலையில், தங்களது நாட்டை அமெரிக்கா போருக்கு இழுப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து புட்டின் தெரிவித்துள்ளதாவது, ''உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவை போருக்கு இழுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. எந்தவகையிலாவது எங்களை போர்செய்யத் தூண்டிவிட்டு, பின்னர் அதனைக் காரணங்காட்டி எங்கள் மீது இன்னும் கூடுதலாக பொருளாதாரத் தடைகளை விதிப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்கா துடிப்பதெல்லாம் அந்த நாட்டின் பாதுகாப்பு மீதான உண்மையான அக்கறையினால் அல்ல. அந்த விவகாரத்தைக் காரணங்காட்டி ரஷ்யாவின் வளர்ச்சியைத் தடுத்துநிறுத்துவதற்காகவே அமெரிக்கா இவ்வாறு பேசி வருகிறது. அந்தவகையில், ரஷ்யாவுக்கு எதிரான தனது இலக்கை அடைவதற்கு உக்ரைனை அமெரிக்கா பகடைக்காயாகப் பயன்படுத்துகிறது.

தேசிய பாதுகாப்பு குறித்த எங்களது கவலைகளை அமெரிக்கா தொடர்ந்து அலட்சியம் செய்து வருகிறது. எங்களது பாதுகாப்புக்காக நேட்டோ அமைப்பில் உக்ரைன் ஒருபோதும் இணைக்கப்படாது என்பதற்கான உத்தரவாதத்தை அளிக்கவேண்டும், கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ அமைப்பை விரிவுபடுத்தக்கூடாது ஆகிய எங்களது கோரிக்கைகளையும் அந்த நாடு செவிமடுப்பது கிடையாது.

உக்ரைன் நேட்டோ அமைப்பின் உறுப்புநாடாகவானால் அது மிக மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். அத்தகைய சூழல் அமைந்தால் அது உக்ரைனுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது பிற நேட்டோ உறுப்புநாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே போர் வெடிக்கக் காரணமாக அமையும்'' - என்றார் அவர்.

சோவியத் ஒன்றியத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாப்பதற்காக 1949ஆம் ஆண்டில் நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது.

1991ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியம் சிதறியபோது, அதில் அங்கமாக இருந்த உக்ரைன் சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. தனது எல்லையையொட்டி அமைந்துள்ள அந்த நாடு நேட்டோவில் இணைந்தால் தங்களது தேசிய பாதுகாப்புக்கு அது மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா கருதுகிறது. உக்ரைனை தங்களது அமைப்பில் இணைக்கமாட்டோம் என்று நேட்டோ உறுதிமொழி அளிக்கவேண்டும் என்று அந்த நாடு வலியுறுத்தி வருகிறது. எனினும், இதற்கு நேட்டோ அமைப்பு உடன்படாததால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் உக்ரைன் எல்லையருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்துள்ளது. உக்ரைன் மீது படையெடுத்து அந்த நாட்டை தங்களுடன் இணைத்துக்கொள்வதற்காக ரஷ்யா படை குவிப்பில் ஈடுபட்டுள்ளாக அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன. எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை ரஷ்யா மறுத்து வருகிறது.

இந்தச் சூழலில், ரஷ்யாவின் அந்த வலியுறுத்தலை அமெரிக்காவும் நேட்டோ அமைப்பும் உறுதியாக நிராகரித்தன. மேலும், உக்ரைன் மீது போர் தொடுத்தால் கடுமையான பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ரஷ்யாவுக்கு அவை எச்சரிக்கை விடுத்து வருகின்றன.

# உலகில் 81 கோடி பேர் உணவின்றி தவிப்பு

### அதிர்ச்சி தரும் ஐ.நா. ஆய்வறிக்கை

உலகின் மொத்த மக்கள்தொகையில் 81 கோடி பேர் இரவு உணவின்றி உறங்கச் செல்வதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இது கடந்த ஆண்டைவிட 16 கோடி அதிகமாகும்.

ஐக்கிய நாடுகள் அவையின் உலகளாவிய மனிதவள ஆய்வு 2022 அறிக்கை சமீபத்தில் வெளியாகியுள்ளது. கொரோனா பேரிடர், அதீத பருவநிலை மாற்றம், இயற்கை காரணிகள் உள்ளிட்டவைகளால் மனித வாழ்வில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த இந்த ஆய்வு பல அதிர்ச்சிகர செய்திகளை வெளியிட்டுள்ளது.

அதன்படி உலகளவில் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை 81.1 கோடியாக அதிகரித்துள்ளது. உணவுத் தேவை, இருப்பு, விநியோகம் மற்றும் பற்றாக்குறை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் உலகளவில் உணவு பாதுகாப்பு மோசமான நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் முதலிடத்தில் உள்ளது.

அந்நாட்டின் மொத்த மக்கள்தொகையான 4 கோடி பேரில் 3.7 கோடி பேர் உணவு பற்றாக்குறையால் தவித்து வருவதாகவும், 5இல் 3 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

அதேபோல் சிரியாவில் மொத்த மக்கள் தொகையான 2 கோடி பேரில் 1.24 கோடி பேர் அடுத்தவேளை உணவுக்கு உத்தர வாதமற்ற சூழலில் வாழ்ந்து வருவதாகவும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபோலவே கொங்கோ குடியரசு, தெற்கு சூடான், சோமாலியா உள்ளிட்ட நாடுகளில் மக்கள் போதிய உணவின்றி தவித்து வருவதாகவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

# சிரியாவில் அமெரிக்கப்படைகள் தாக்குதல்; ஐ.எஸ். தலைவர் பலி



சிரியாவில் அமெரிக்கப் படைகள் நடத்திய நடவடிக்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் அபு இப்ராஹிம் அல் ஹஷிமி அல் குரேஷி கொல்லப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின்போது, குரேஷி தன்னைத்தானே வெடிக்கச்செய்து உயிரை மாய்த்தார்.

“எனது வழிகாட்டுதலின் பேரில், வடமேற்கு சிரியாவில் உள்ள அமெரிக்க இராணுவப் படைகள் அமெரிக்க மக்களையும் நமது நட்பு நாடுகளையும் பாதுகாக்கவும், உலகை பாதுகாப்பான இடமாக மாற்றவும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டன” என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“எங்கள் ஆயுதப் படைகளின் திறமை மற்றும் துணிச்சலுக்கு நன்றி, நாங்கள் ஐ.எஸ். தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹாஷிமி அல்-குரேஷியை போர்க்களத்தில் இருந்து அகற்றியுள்ளோம்” என்று பைடன் கூறினார்.

அமெரிக்க சிறப்புப் படைகளால் கொல்லப்பட்ட முன்னாள் தலைவர் அபூபக்கர் அல்-பாக்தாதியின் மரணத்தை தொடர்ந்து, 2019 இல் அல் குரேஷியை ஐ.எஸ்.ஐ.எஸ். அதன் தலைவராக நியமித்தது.

துருக்கிய எல்லைக்கு அருகிலுள்ள கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள இட்லிப் மாகாணத்தில் உள்ள மக்கள் அடர்த்தியான நகரமான அட்மே இல் இரவு நேரத்தில் அமெரிக்கப் படைகள் மேற்கொண்ட தகக்குதலில் 6 குழந்தைகள் 4 பெண்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு முன்னர் ஹெலிகொப்டர்கள் இரண்டு மணிநேரத்திற்கும் மேலாக கட்டடத்தின் மீது வட்டமிட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். பின்னர் அமெரிக்க சிறப்புப் படைகள் தரையிறங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வீட்டை முற்றுகையிட்டன.







# ஊடல்களின்றி 8 காதல் மனைவிகளுடன் ஒரே வீட்டில் வாழும் தாய்லாந்து இளைஞன்







தாய்லாந்தில் ஒரே வீட்டில் 8 மனைவிகளுடன் மகிழ்ச்சியோடு வாழும் நபரொருவர் கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்துள்ளார்.

அவர் தனது 8 மனைவியரையும் வெறித்தனமாக காதலித்து திருமணம் செய்துகொண்டுள்ளார் என்பதே கூடுதல் அதிர்ச்சி.

தாய்லாந்தில் பச்சை குத்தும் தொழில் செய்து வரும் Ong Dam Sorotஇன் திருமண வாழ்க்கை குறித்த பதிவுதான் இப்போது ட்விட்டர், முகநூல், இன்ஸ்டாகிராம் என அனைத்து சமூக வலைத்தளங்களிலும் ‘ஹொட் டொப்பிக்’ஆக மாறியுள்ளது. அடுத்தடுத்து 8 திருமணங்களைச் செய்துள்ள Ong Dam Sorot 8 மனைவிகளுடனும் சண்டை சச்சரவு இல்லாமல் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறார்.

கல்யாண வீடு, கடற்கரை, ஆலயம், மருத்துவமனை, முகநூல், டிக்டொக் என பல இடங்களில் சந்தித்த பெண்களை காதலித்து திருமணம் செய்துள்ளார் Ong Dam Sorot. அனைத்து மனைவிகளுக்கும் தெரிந்தே ஏற்கனவே திருமணங்களானதை வெளிப்படையாகக் கூறியே 8 திருமணங்கள் செய்துள்ளார் என்பது ஆச்சரியம் அளிக்கிறது. தங்களுக்குள் சண்டை வந்ததே இல்லை என்றும் 8 பேரையும் அக்கறையோடு Ong Dam Sorot கவனித்துக்கொள்வதாகவும் அவரின் மனைவிகள் தெரிவிக்கின்றனர்.

# மைக்கல் ஜக்ஸனைபோலவே தோற்றம்கொண்ட பிரிட்டன் இளைஞர்





மறைந்த பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன்(michael jackson) போல இருப்பதற்காக பிளாஸ்ரிக் செர்ஜரி செய்து கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர் தனது இளமைக்கால புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளார்.

பிரித்தானியாவில் வசிக்கும் 28 வயதான ஃபேபியோ ஜக்ஸன் என்பவர் மைக்கல் ஜக்ஸனைப் போன்ற தோற்றம் கொண்டவர். அவரைப் போலவே நடை, உடை பாவனைகளால் ஃபேபியோவுக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

இந்நிலையில், மைக்கல் ஜக்ஸனைபோல் தோற்றம் ஏற்படுவதற்காக ஃபேபியோ பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை செய்துகொண்டதாகக் கூறப்பட்டது. ஆனால், தனது 11ஆவது வயதிலிருந்தே தான் மைக்கல் ஜக்ஸனைபோல் இருக்கும் புகைப்படத்தை அவர் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

# 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் இன்று ஆரம்பம்




## பீஜிங் ஒலிம்பிக்கில் சாதிக்கப்போகும் வீரர்கள்

**(அக்ஷரா)**

**24ஆவது பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் இன்று ஆரம்பமாகும் நிலையில், பல வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்த காத்திருக்கிறார்கள். அவர்களில் எட்டு வீரர்களை சீன ஊடக மான ஜின்ஹூவா அடை யாளப்படுத்தியுள்ளது.**



### ஷார்ட்-ட்ராக் ஸ்பீட் ஸ்கேட்டிங்: வு டேஜிங், சீனா

சீனாவின் மிகவும் பிரபலமான சுறுசுறுப்பான குளிர்கால ஒலிம்பியனாக 2018 பியோங்சாங்கில் நடந்த குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் 500 மீ. ஓட்டத்தில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து குறுகிய பாதையில் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற முதல் சீன ஆண் ஸ்கேட்டர் வு டேஜிங் ஆவார். மேலும் தற்போது ஆண்களுக்கான 500 மீ. போட்டியில் 39.505 விநாடிகளில் முடித்து உலக சாதனை படைத்துள்ளார்.



### ஆல்பைன் பனிச்சறுக்கு: மைக்கேலா ஷிஃப்ரின், அமெரிக்கா

ஷிஃப்ரின் தனது முதல் ஒலிம்பிக் பட்டத்தை சோச்சி 2014 இல் வென்றார். ஒலிம்பிக் வரலாற்றில் 18ஆவது வயதில் இளைய ஸ்லாலோம் சம்பியனானார். மற்றும் ராட்சத ஸ்லாலோமில் அவரது இரண்டாவது ஒலிம்பிக் தங்கம் பியோங்சாங் 2018இல் கிடைத்தது. 2017இல், அவர் 78 வருடத்தின் பின்னர் தொடர்ந்து மூன்று ஸ்லாலோம் வென்ற முதல் பெண்மணியானார்.



### ஃபிகர் ஸ்கேட்டிங்: யுசுரு ஹன்யு, ஜப்பான்

ஐஸ் பிரின்ஸ் என்ற புனைபெயர் கொண்ட 27 வயதான ஜப்பானிய ஸ்கேட்டர், இரண்டு முறை ஒலிம்பிக் சம்பியன் (2014, 2018), இரண்டு முறை உலக சம்பியன் (2014, 2017), 19 ஸ்கோரிங் சாதனைகளை முறியடித்துள்ளார். புதியதிலிருந்து ஒற்றையர் பிரிவில் அதிக சாதனை படைத்துள்ளார். ஐ.எஸ்.யு. தீர்ப்பு முறை போட்டியில் கிளீன் க்வாட்ரபிள் லூப் ஜம்ப் செய்த முதல் ஸ்கேட்டர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.



### ஃப்ரீஸ்டைல் பனிச்சறுக்கு: கு ஜலிங், சீனா

ஃப்ரீஸ்டைல் பனிச்சறுக்கு விளையாட்டின் வளர்ந்துவரும் நட்சத்திரமாக 2020ஆம் ஆண்டு லொசானில் நடந்த குளிர்கால யுத் ஒலிம்பிக் போட்டிகளில் சீனாவை பிரதிநிதித்துவப்படுத்திய கு, பிக் ஏர் மற்றும் அரை பைப்பில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றார். 2021ஆம் ஆண்டில், எக்ஸ் கேம்ஸில் மூன்று போட்டிகளில் விளையாடினார். சுப்பர் பைப் மற்றும் ஸ்லோப்ஸ்டைலை வென்றார். மற்றும் பிக் ஏரில் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். இந்த நிகழ்வின் 25 ஆண்டுகால வரலாற்றில் வேறெந்த புதுமுக வீரர்களும் செய்யாத சாதனையாகும்.




### பனிச்சறுக்கு: ஷான் ஒயிட்,அமெரிக்கா

ஷான் ஒயிட் உலகின் சிறந்த பனிச்சறுக்கு வீரராவார். டுரின் 2006, வான்கூவர் 2010, பியோங்சாங் 2018இல் ஹாஃப்பைப் ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள் உட்பட பல பட்டங்களை வென்றுள்ளார். வின்டர் எக்ஸ் கேம்ஸில் இவர் ஒரு முக்கிய அம்சமாக இருந்துள்ளார். அங்கு அவர் சுப்பர் பைப்பில் வியக்கத்தக்க 13 பட்டங்களை வென்றார்.

### ஸ்கை ஜம்பிங்: கமில் ஸ்டோச், போலந்து

மூன்று முறை ஒலிம்பிக் சம்பியனான ஸ்டோச், பின்லாந்தின் மாட்டி நைகனென் (1988), சுவிட்சர்லாந்தின் சைமன் அம்மான் (2002, 2010) ஆகியோருக்குப் பிறகு சோச்சி 2014 இல் நடந்த ஓர் ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் தனிநபர் ஸ்கை ஜம்பிங் போட்டிகளில் இரண்டையும் வென்ற மூன்றாவது வீரராவார். பியோங்சாங் 2018 இல், அவர் பெரிய மலையில் தனிநபர் தங்கம் வென்றார். மற்றும் அணி ஒழுக்கத்தில் வெண்கலப் பதக்கம் பெற்றார்.



### ஐஸ் ஹொக்கி: எரிக் ஸ்டால், கனடா

தேசிய ஹொக்கி லீக் (என்.எச்.எல்.) வீரர்கள் இல்லாவிட்டாலும், ஆண்கள் போட்டியில் இன்னும் சில பெரிய பெயர்கள் மற்றும் பழக்கமான முகங்களைக் காணலாம். ஏனெனில் (என்.எச்.எல்) மூத்த மற்றும் 2010 வான்கூவர் தங்கப் பதக்கம் வென்ற எரிக் ஸ்டால் கனடாவின் ஒலிம்பிக் பட்டியலில் முன்னிலை வகிக்கிறார். 2006இல் ஸ்டான்லி கிண்ணம், 2007 இல் கனடாவுடனான உலக சம்பியன்ஷிப்பை வென்ற 37 வயதான அவர் தனது 17-சீசன் வாழ்க்கையில் 441 கோல்களை அடித்துள்ளார். 593 கோல்கள் அடிக்க உதவியுள்ளார்.



### நோர்டிக் ஒருங்கிணைந்தது: எரிக் ஃப்ரென்ஸல், ஜேர்மனி

மூன்று தங்கங்கள் உட்பட ஆறு ஒலிம்பிக் பதக்கங்கள் கையில் இருப்பதால், எரிக் ஃப்ரென்ஸல் இந்த தசாப்தத்தின் சிறந்த நோர்டிக் ஒருங்கிணைந்த விளையாட்டு வீரராக இருக்கலாம். பியோங்சாங்கில் நடந்த மூன்று போட்டிகளிலும், (தனிநபர் சாதாரண மலை/10 கி.மீ. மற்றும் குழு போட்டியில் தங்கம், தனிப்பட்ட பெரிய மலை/10 கி.மீ. போட்டியில் வெண்கலம்) 33 வயதான அவர் தனிப்பட்ட சாதாரண மலை/தனது பட்டத்தை பாதுகாக்க நல்ல வாய்ப்புள்ளது. அவர் இரண்டாவது முறையாக 10 கி.மீ. விளையாட்டின் மிக வெற்றிகரமான ஒலிம்பியனாக ஆனார்.



## இளம் வீரருக்கு நிதியுதவி அளிக்கும் ரஷீட் கான்




மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் உலகக் கிண்ணத் தொடர் முடிவடைந்த பின்னர் இங்கிலாந்தில் பந்துவீச்சு நுட்பத்தை வளர்த்துக்கொள்ள பயிற்சி மற்றும் பல செலவுகளுக்காக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சாளர் ரஷீட் கான், ஆப்கானிஸ்தான் இளையோர் கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சாளர் பிலால் ஷமிக்கு நிதியுதவி அளித்துள்ளார்.

ரஷீட் கானின் இந்த உதவியைத் தொடர்ந்து, பிலால் ஷமி தற்போது நடைபெற்றுவரும் இளையோர் உலகக்கிண்ணத் தொடருக்கு பின்னர் இங்கிலாந்தில் தனது பந்துவீச்சு ஆக்ஷனை மேலும் கூர்மைப்படுத்தும் முயற்சியில் பயிற்சி பெறுவார்.

## ஆஸி.யை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்த இந்தியா; சம்பியன் பட்டத்துக்கான இங்கிலாந்து – இந்தியா நாளை மோதல்

ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இந்திய இளையோர் அணி இரண்டாவது அணியாக தகுதிபெற்றது. இதன்மூலம் ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண வரலாற்றில் இந்திய அணி தொடர்ச்சியாக 4ஆவது தடவையாக இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.



முதல் அரையிறுதிப் போட்டியில் ஆப்கான் அணியை வீழ்த்திய இங்கிலாந்து அணி முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு தெரிவான நிலையில், இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் இந்திய - ஆஸி. அணிகளுக்கிடையில் ஆண்டிகுவாவில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 290 ஓட்டங்களை குவித்தது.

291 என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய ஆஸி. அணி, 41.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 194 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவியது. இதனடிப்படையில் நாளை இலங்கை நேரப்படி பிற்பகல் 6.30 மணிக்கு ஆரம்பமாகின்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்து இளையோர் அணியும், இந்திய இளையோர் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

**விளையாட்டு செய்திகள்**
thamilansports@gmail.com



**ஆஸி. அணியுடன் 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் பங்கேற்கும் தசுன் சானக்க தலைமையிலான இலங்கை இருபதுக்கு 20 குழாம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக ஆஸி. நோக்கி புறப்பட்டது. முதல் போட்டி 11 ஆம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது**





## சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் மார்ச்சில் ஆரம்பம்

20ஆவது DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இலங்கையில் முதலிடம் வகிக்கும் பாதணிகள் உற்பத்தி நிறுவனமான டி.எஸ்.ஐ. நிறுவனமானது, இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலை கரப்பந்து சம்மேளனம் என்பனவற்றோடு இணைந்து 20ஆவது சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் தொடரை நடத்த முன்வந்துள்ளது.







11 வயதுக்குட்பட்ட ஆண்கள் / பெண்கள், 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் / பெண்கள், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் / பெண்கள், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் / பெண்கள் மற்றும் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் / பெண்கள் என போட்டிகள் மாவட்ட மற்றும் தேசிய அளவில் நடைபெறும். மாவட்ட அளவிலான போட்டிகள் மார்ச் 26 முதல் மே 8 வரை நடைபெறும். தேசிய அளவிலான போட்டிகள் ஜூன் 15 முதல் 21 வரை காலியில் நடைபெறும். இறுதிப் போட்டிகள் ஜூலை 2 மற்றும் 3 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

போட்டிக்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி 15ஆம் திகதிக்குள் அந்தந்த பாடசாலைகள் மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து டி.எஸ்.ஐ. காட்சியறைகளிலும் கிடைக்கும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அருகிலுள்ள காட்சியறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது இலக்கம் 257, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம என்ற முகவரியிலுள்ள சந்தைப்படுத்தல் பிரிவிற்கு தபால் மூலமாகவும் அனுப்பமுடியும். பூர்த்திசெய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் மார்ச் 15இற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டு, நாடு முழுவதிலுமிருந்து 5,000இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7